சீறாப்புராணம்

- அறபுச் சொற்களும்
- பாரசீகச் சொற்களும்

சென்னை

உமறுப் புலவர் பேரவை

ஒழுங்கு செய்த

சீறாப்புராணக் கருத்தரங்கில்

படிக்கப்பட்டது

1976 ஓகஸ்ட், 15 ஞாயிறு

புதுக்கல்லூரி, சென்னை.

T14509
R005D04
T. 14509

க்டர் எம். எம். உவைஸ், M. A., Ph. D.
மர்கனி, ஹேனமுல்லை
ணந்துறை, இலங்கை

சிறுப்புராணத்தில் இடம்பெற்றுள்ள அறபுச் சொற்களும் பாரசீகச் சொற்களும்.

ஒன்றை மற்றதிலிருந்து பிரித்துக் காட்டுவது முன்னையதில் உள்ளதும் பின்னையதில் இல்லாததுமான சிறப்பியல்பேயாம். இவ்வாறு ஒன்றை ஒன்றிலிருந்து பிரித்துக் காட்டும் சிறப்பியல்புகள் இலக்கியத்திலும் உள்ளன. சிறப்பாகக் காப்பியங்களை எடுத்துக் கொண்டால் இத்தகைய சிறப்பியல்புகள் பலவற்றைக் காணலாம். பல்வேறு சமய அடிப்படையில் தோன்றிய காப்பியங்கள் அவ்வச் சமயங்களுக்கே உரிய சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குவது கண்கூடு. அதே போன்று பொருளடக்கத்தைப் பொறுத்த வரையிலும் காப்பியத்துக்குக் காப்பியம் வேறுபடுகின்றது. சொல்லாட்சியைக் கொண்டு ஒரு காப்பியத்தின் சிறப்பியல்பினைக் கணிக்கலாம். கவிஞன் தான் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்குப் பல்வேறு மொழிகளிலிருந்து சொற்களைப் பெற்று தனது இலக்கியப் படைப்புகளில் பயன்படுத்தத் தயங்குவதில்லை. சில சமயங்களில் இத்தகைய சொற்கள் ஒரே இனத்தைச் சார்ந்த பல்வேறு மொழிகளிலிருந்து பெறப்படுகின்றன. வேறு சில சமயங்களில் இன அடிப்படையில் தொடர்பு அற்ற வேற்று மொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய ஒரு சிறப்பியல்பினைத் தான் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள் அவற்றினிடத்தைக் கொண்டு திகழ்கின்றன. தமிழ் இலக்கியத்தில் தோன்றிய ஏனைய காப்பியங்களுடன் ஒப்ப நோக்கும் பொழுது இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களில் இத்தகைய சிறப்பியல்பு அமைந்திருப்பதைக் காணலாம்.

பல்வேறு சமயங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் அவ்வச் சமயங்களின் மொழிகளிலிருந்து பெறப்பட்ட தனித்துவம் வாய்ந்த சொற்

கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். பௌத்த மத அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில், இலக்கியங்களில் அம்மதத்தின் புனித மொழியான பாளி மொழிச் சொற்கள் முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றன. அதே போன்று சமண சமய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் பாகதச் சொற்களும் வைணவ நெறியினைப் போதிக்கும் இலக்கிய நூல்களில் வடமொழிச் சொற்களும் கிறித்தவ மார்க்கத்தினைப் போதிப்பதற்காகத் தோன்றிய காப்பியங்களில் இலத்தின் மொழியிலிருந்து தோன்றிய சொற்களும் பெருவழக்கைப் பெற்றிருக்கின்றன. இஸ்லாமிய வழியை எடுத்துக் கூறும் இலக்கிய நூல்கள், சிறப்பாகத் தமிழில் தோன்றிய காப்பியங்கள் அவற்றின் சிறப்பியல்பாகப் பெரும்பான்மையான அறபுச் சொற்களையும் ஓரளவு பாரசீகச் சொற்களையும் கொண்டு விளங்குகின்றன. இஸ்லாமியக் கொள்கைகளைப் போதிக்கும் இலக்கியங்களில் அறபுச் சொற்களினதும் பாரசீகச் சொற்களினதும் ஆட்சி அவற்றின் இன்றியமையாத அமிசமாகி விடுகின்றன. அத்தகைய இலக்கியங்களிலிருந்து அறபுப் பாரசீகச் சொற்களைப் பிரிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இஸ்லாமியக் கருத்துக்களைத் தமிழில் விளக்குவதற்கு அவை அவசியமாகின்றன. எனவே இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களிலே எண்ணற்ற அறபுச் சொற்களும் குறிப்பிடத்தக்க அளவு பாரசீகச் சொற்களும் ஆளப்பட்டுள்ளன.

அறபு மொழி அதன் செல்வாக்கினைப் பிரயோகித்ததனால் தாக்கத்திற்குட்பட்ட மொழி தமிழ் மொழிமாத்திரமன்று. உலகின் எந்தெந்தப்பகுதிகளுக்கு இஸ்லாம் பரவியதோ அந்த அந்த பகுதிகளிலெல்லாம் இஸ்லாமிய மொழியான அறபு மொழியின் தாக்கம் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். ஸ்பானிய, போர்த்துக்கேய மொழிகளிலே பெருந்தொகையான அறபு மொழிச் சொற்கள் கலந்துள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். இஸ்லாத்தின் தாக்கத்தை ஸ்பானிய மொழி பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது என்று கூறிவிடலாம். அறபு மொழியிலே சிறப்பாகக் காணப்படும் அல் என்னும்

சார்படையுடனே பல அறபுச் சொற்கள் ஸ்பானிய மொழியிலே பயன்படுத்தப்படுகின்றன. நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பொருட்களைக் குறிப்பிடுவதற்கும் ஸ்பானிய மொழியில் அறபுச் சொற்கள் பயன்படுத்தபடுகின்றன. 'இன்ஷா அல்லாஹ்' என்னும் அறபுச் சொற்றொடரைக் கூட அதே கருத்தில் அவர்கள் உபயோகிக்கின்றனர். திருக்குர்ஆனிலிருந்து பெறப்பட்ட ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட 'பொயமாடி யூசுப்' (Poemade Yucuf) என்ற கவிதைநூல் ஸ்பானிய மொழியில் எழுதப்பட்டிருப்பினும் அது பிரெஞ்சு யாப்பமைதிக்கிணங்க அறபு எழுத்துக்களிலே எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

பிறமொழியான ஸ்பானிய மொழியில் ஏற்பட்ட அறபு மொழியின் தாக்கம் ஸ்பானிய மொழியின் அமைப்பையும் தன்மையையும் மாற்றியிருக்கின்றது. ஒரு நாட்டு மக்களின் சமயமும் கலாசாரமும் பழக்க வழக்கங்களும் அவர்கள் பேசும் மொழியின் தன்மையை மாற்றும் தரத்தன எனக் கூறின் அது மிகையாகாது. ஸ்பானிய மொழியில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். முஸ்லிம்களையும் அவர்கள் பேசும் மொழியையும் பொறுத்த வரையில் இக்கூற்று வலியுறுகின்றது. இஸ்லாம் பரவிய எல்லாப் பகுதிகளிலும் இஸ்லாத்தின் மொழியான அறபு மொழியின் செல்வாக்கைக் காணக் கூடியதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்த போதிலும் அறபுச் சொற்களில் பரிச்சயம் அவர்களுக்கு அத்தியாவசியமாகின்றது. இதன் பயனாக ஒரு முஸ்லிம் தன் நாட்டு மொழியுடன் அறபுச் சொற்களின் பயிற்சியும் உள்ளவனாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்படுகின்றது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிச் சொற்களை அறிந்த ஒருவன் தனது கருத்துக்களை உரையாடல் மூலமோ எழுத்து மூலமோ வெளியிடுவதற்கு இரண்டு மொழிகளிலுமிருந்து சொற்களை உபயோகிப்பதற்கு தயங்குவதில்லை. அவ்வாறு சர்வ சாதாரணமாகவே உபயோகிக்கின்றான்.

உலக முஸ்லிம்கள் இஸ்லாத்தையும் அதன் மொழியான அறபையும் முதுசொமாகப் பெற்றுள்ளனர். ஒரு முஸ்லிம் எங்கு வாழ்ந்தாலும் இஸ்லாமியப்பதங்களையும் சொற்றொடர்களையும் அறிந்தவனாக இருத்தல் வேண்டும். தனது நாளாந்த வாழ்க்கையில் இஸ்லாமிய மத அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பதற்கு அவை அவசியமாகின்றன. அவற்றைத் தமிழ் போன்ற ஒரு மொழியில் பெயர்த்தல் கடினமாகின்றது. அவற்றை அவ்வுச்சரிப்புடன் தமிழ் எழுத்துக்களில் எழுதினால் கூட அவை அவற்றிற்கே உரிய உச்சரிப்பைத் தரத் தவறிவிடுகின்றன. இதனாலேயே இஸ்லாத்தின் செல்வாக்கின் கீழ் வந்த மக்கள் அவரவர் மொழிகளில் ஏராளமான அறபுச் சொற்களைப் புகுத்துவது பொருத்தமானதே எனக் கண்டனர். புகுத்தியும் விட்டனர். இவ்வாறு புகுத்தப்பட்டதன் விளைவினை இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்கள் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றன.

கலப்பற்ற மொழி இல்லை என்றே கூறலாம். பல்வேறுமொழிச் சொற்களைக் கொண்ட மொழியாக ஆங்கில மொழி வருணிக்கப்படுகின்றது. உலகப் பொதுத் தன்மையைப் பெற்ற மொழியாகக் கருதப்படுகின்றது. உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாடும் அவற்றின் சொல் மயமான உற்பத்திகளை ஆங்கில மொழி என்னும் அறிவுச் சந்தைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இதற்கு நேர்மாறாக அறபு மொழி என்னும் அறிவுச் சந்தையிலிருந்து சொல் மயமான உற்பத்திகளை முஸ்லிம்கள் வாழும் ஒவ்வொரு நாடும் பெற்றிருக்கின்றது என்றும் மொழியின் செல்வாக்கைப்பற்றிக் குறிப்பிடலாம். திசைச் சொற்கள் இல்லாத மொழி இல்லை என்றே கூறலாம். தமிழ்ப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் இடம் பெற்றுள்ள அறபுப் பாரசீகச் சொற்களைப் போன்று தமிழ்ச் சொற்கள் அறபுப் பாரசீக மொழிகளில் இடம் பெறவில்லை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் ஜெர்மனியைச் சேர்ந்த மகா பிரடிறிக்கின் கூற்ற நினைவு

படுத்துதல் பொருத்தமுடையதாகும். ஜெர்மன் பிரெஞ்சு மொழிகளைப்பற்றிக் குறிப்பிடுகையில் மகா பிரெட்றிக், 'நாம் உள்ளூர் மொழி (ஜெர்மன் மொழி)ச் சொற்றொடர்களை எமது வெளிநாட்டு மொழி (பிரெஞ்சு மொழி)யைப் பேசும்பொழுது பயன்படுத்துவதில்லை. எனினும் ஜேர்மன் (உள்ளூர்) மொழியைப் பேசும் பொழுது பிரெஞ்சு (வெளிநாட்டு) மொழிச் சொற்களைத் தாராளமாக உபயோகிக்கிறோம்.' என்று நிலைமையைத் தத்ரூபமாக விளக்கி உள்ளார். ஒரு நாட்டு மக்கள் பிற மொழி ஒன்றினைப் பயில்வதனால் அந்நாட்டு மொழி கலப்பு மொழியாக மாறுது. மாறுக அந்நாட்டு மொழி பிற மொழியின் செல்வாக்கிற்கு ஆளாவதினாலேயே கலப்பு மொழியாக மாறுகிறது என்பது திசைச் சொற்கள் பற்றிய பொதுக் கொள்கையின் அடிப்படைத் தத்துவமாகும். அறபு மொழியையும் தமிழ் மொழியையும் பொறுத்தவரையில் இக்கூற்று மிகவும் பொருத்தமானதொன்றாகும். பல சந்தர்ப்பங்களில் அவசியம் காரணமாகவே திசைச் சொற்கள் கடனாகப் பெறப்படுகின்றன. சொற்றொடர்பு சார்ந்தனவாக ஒரு மொழி மற்ற மொழியில் அதன் செல்வாக்கைப் பிரயோகிக்கிறது என்னும் கூற்றையும் நாம் ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் இடம் பெற்றுள்ள அறபுப் பாரசீகச் சொற்கள் திசைச் சொற்களாகவே அங்கு திகழ்கின்றன என்ற கூற்று இதன் பயனாக வலியுறுகின்றது. எனவே சீறாப்புராணத்தில் திசைச் சொற்களாக இடம் பெற்றுள்ள அறபுச் சொற்களையும் பாரசீகச் சொற்களையும் ஆராய முற்படுவோம். முதலில் அறபுச் சொற்களை எடுத்துக் கொள்வோம். இத்தகைய அறபுச் சொற்களை இஸ்லாமிய நெறியுடன் நெருங்கிய தொடர்புடைய அறபுச் சொற்களும் சொற்றொடர்களும் என்றும், முஸ்லிம்களுடைய சமூக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு அவசியமான அறபுச் சொற்களும் சொற்றொடர்களும் என்றும், இரு வகையாகப் பிரிக்கலாம்.

'பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்' என்னும் அறபுச் சொற்றொடரை முதலில் எடுத்துக்கொள்வோம். இச் சொற்றொடர் 'பிஸ்மில்' என்றும் 'பிஸ்மில்லாஹ்' என்றும் சுருக்கி ஆளப்படுகிறது. 'பிஸ்மில்' என்றால் 'பெயரால்' என்பதாகும். 'பிஸ்மில்லாஹ்' என்றால் அல்லாஹ்வின் பெயரால் என்பதாகும். அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் என்பதே 'பிஸ் மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்' என்பதன் கருத்தாகும். இச் சொற்றொடரை உச்சரித்தே ஒவ்வொரு முஸ்லிமும் தமது கருமங்களை அவை எவ்வளவு சிறியவையாயிருந்த போதிலும் ஆரம்பம் செய்தல் வேண்டும். இவ்வறபுச் சொற்றொடர் திருக்குர்ஆனிலே உள்ள சூறு தவ்பாவைத் தவிர்ந்த ஏனைய சூறுக்கள் ஒவ்வொன்றினதும் ஆரம்பமாக அமைந்துள்ளது. 'பிசுமில்' என்னும் சொல் சீறுப்புராணத்தில் பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை நினைவு படுத்தி 'பிஸ்மிலைத் திருத்தமாக ஓதினார்கள் என்பதனையே

ஆதிதனை யுளத்திருத்தி பிசுமிலெனு முறைதிருத்தி
(உத்துபா வந்த படலம் 18)

இவ்வாறு உமறுப் புலவர் குறிப்பிடுகிறார். பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்ற ஹீம் என்பதனைச் சுட்டவே பிசுமில் எனும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது என்று கொள்ளல் வேண்டும். பிஸ்மில் ஓதப்பட்டமை 'தெரிதர பிசுமிலோதி' (மதீனத்தாரீமான் கொண்ட படலம் 30) என்றும் 'மெய்யொளி முகம்மது பிசுமி லோதினர்' (புவாத்துப் படலம் 16) என்றும் குறிப்பிடுகிறது. தங்கள் முன்னிலையில் கொண்டு வைக்கப்பட்ட கனிகளை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிஸ்மில் ஓதியே உண்டார்கள் என்பது, '. . . .பழத்தினைத் தீண்டி யின்ப, மனையநல் பிசுமிலோதி யமுதென நுகர்தல் செய்தார்' (அத்தாசிமான் கொண்ட

படலம் 4) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. போர் செய்யப் புறப்படுவதற்கு முன்னர் பிசுமில் ஓதப்பட்டமை

> வேதம், பன்னிய பிசுமி லோதி பண்புட
> னெழுந்து வள்ளல்
> (ஜின்களீமான்கொண்ட படலம் 22)
> ....நற்பிசுமி லோதி யிலங்கும் வாட்கரத் திலேந்தி
> (உகுதுப்படலம் 180)
> ....பிசுமிலென் றெழுந்தனர் வீரர்
> (கஃபு வதைப் படலம் 180)
> மேலினூர் பதம்பணிந்தனர் பிசுமிலென் றெழுந்தனர்
> (உரைய வந்த படலம் 153)

என வருணிக்கப்பட்டுள்ளது. பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் றஹீம் என்னும் திருமறை வாக்கியம் வேலில் பொறிக்கப் பட்டிருந்தது என உமறுப்புலவர் 'வீர வேலெனுங் கதிர் பிசுமி லேந்தி' (மதியையழைத்தபடலம் 56) என்று குறிப் பிடுகிறூர். இந்தச் சொற்றொடர் அங்க ஈனர்களின் குறை களை நீக்க வல்லது என்பது

> ....மனத்திலவே
> றெண்ண மின்றிப் பிசுமி லுரைத்தெடுத்
> துண்ண நல்லுரு வெய்தின னுண்மையோன்.
> (அந்தகன் படலம் 19)

என நோய் தீர்க்கும் நிவாரணி என்பது தொனிக்கப் பாடப்பட்டுள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்ருச் செய்யச் சென்றபொழுது குறைசிக் காபிர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் நிபந்தனைகளை எழுத முற்படும் பொழுது இந்தச் சொற்றொடரைக் கொண்டு ஆரம்பிக்கப்படல் வேண் டும் என்று பெருமானுர் (ஸல்) கூறினூர்கள். இதைக் கேட்ட குறைசிகளின் பிரிதிநிதியான சுகயில் என்பவன் அந்தச் சொற்றொடரில் உள்ள பிஸ்மில்லாஹ் என்பதனை அறிவோம் ஆனூல் அர்றஹ்மானிர்றஹீம் என்பதனை கேட்டதில்லை என்று கூறினுன். கூறினதோடு அச்சொற்றொடரை உடன்

படிக்கையில் எழுதவும் வேண்டாம் என்றும் கூறினன். இக்கருத்துக்களைக் கூற முற்பட்ட உமறுப்புலவர் அத்திரு மறைச் சொற்றொடரை இவ்வாறு அமைத்துப்பாடியுள்ளார்.

—

இன்புறும் பிசுமிலாகிற் றகுமா னிற்ற கீமென்
றன்புறு முதலிற் கோட்டெடன் றகுமது வந்து கூற
முன்புறு சுகைலென் போனு மொழிகுவன் பிசுமில் லாவின்
றன்பெயர் நடக்கும் வண்ண மறிகுவந் தரண மீதில்
(உமுறுவுக்குப்போன படலம் 79)

அற்றஹ்மா னிற்றகி மென்ன வறைகின்ற வார்த்தை யாங்க
டிறனுறக் கேட்ட தில்லை யம்மொழி தீட்ட வேண்டா
(உமுறுவுக்குப் போன படலம் 80)

சீறுப்புராணத்தில் இடம்பெற்றுள்ள மற்றொரு அறபுச் சொல்லை எடுத்துக் கொள்வோம். அந்தச் சொல் 'ஈமான்' என்பதாகும். ஈமான் என்றால் நம்பிக்கை அல்லது விசுவாசம் கொள்ளுதல் என்று பொருள்படும். அது ஈமான் முஜ்மல் என்றும் ஈமான் முபஸ்ஸல் என்றும் இருவகைப் படும். அல் குர்ஆன், அல் ஹதீஸ் ஆகியவற்றின் போதனைகளை விசுவாசம் கொள்ளுதல் எனக் கூறுதல் ஈமான் முஜ்மல் எனப்படும். அல்லாஹு'த்தஆலா மீதும் மலக்குகள் மீதும் வேதங்கள் மீதும் நபிமார்கள் மீதும் இறுதித் 'தீர்ப்பு நாளின் மீதும் நன்மை தீமைகளின் முன்னளப்பு மீதும் விசுவாசங்கொள்வதாகப் பிரகடனப்படுத்துதல் ஈமான்முபஸ்ஸல் எனப்படும். இனி ஈமான் என்னும் அறபுச் சொல் அல் குர்ஆனிலே (2:108 முதலிய) பல இடங்களில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம். ஜிபுறீல் (அலை) அவர்களும் மீக்காயில் (அலை) அவர்களும் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து அன்பாய் அவர்களின் மார்பைக்கீறி இதயத்திலிருந்த குற்றம் களைந்து கசட்டை அகற்றி

ஏனைய தீமைகளையும் நீக்கி நன்ருகக் கழுவி நற்கருத்தினையும் நல்லீமானையும் நல்லறிவு முதலிய நல்லவைகள் அனைத்தை யும் அதனுள் நிறையச் செய்தார்கள். இக்கருத்துக்களே ஒரு பாடலில் இவ்வாறு அமைந்துள்ளன.

நேயமுற் றுரத்தை கீண்டு நிறைறயொளி பொங்குங் கஞ்சக்
காய்முகை கிழித்துள் ளூற்ற கறுப்பொடு கசடு மான
மாயவன் கூற்றை மாற்றி வழுவறக் கழுவி மாரு
தாயுநன் னினைவீ மானல் லறிவுட னிரப்பல்
செய்தார். (இலாஞ்சனை தரித்த படலம் 28)

மற்ருெரு பாடலில் 'ஈமான்' என்னும் அறபுச் சொல்லை உபயோகிக்க முற்பட்ட உமறுப்புலவர் அச் சொல்லின் தாத்பரியத்தையே அங்கு விளக்கியுள்ளார். யாவற்றிற் கும் நாயகனுன அல்லாஹ் ஒருவனே. அண்ணல் நபி முகம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய திருத்தூதராவார் கள். இக்கருத்துக்களே கலிமாவில் பொதிந்துள்ளன. ஓதப் படும் இக்கலிமாவை நிண்ணயப்படுத்திய பொருத்தமே ஈமான், அதற்கிணங்க நடப்பதே அமல். இவற்றை நன்கு பின்பற்றியதன் திருத்தமே இஸ்லாத்தில் சேர்தல். இத் தகைய பல கருத்துக்களை விளக்கி ஈமான் என்னும் அறபுச் சொல் இங்கு ஆளப்பட்டுள்ளதை இப்பாடலில் காணலாம்.

ஒருத்தனு யகனவற் குரிய துதெனு
மருத்தமே யுரைகலி மாவந் நிண்ணயப்
பொருத்தமீ மானவை புனைத லாமமல்
திருத்தமே விலையிசு லாமிற் சேர்தலே.
(தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 2)

இப்பாடலில் ஈமான் என்ற சொல்லோடு கலிமா, அமல், இசுலாம் என்னும் அறபுச் சொற்களும் உபயோகிக் கப்பட்டுள்ளன. அவற்றை ஒவ்வொன்ருகப் பின்னர் பார்ப் போம். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'இப் பூவுலகத்திலே தாங்கள் போதிக்கும் நன்னெறியில் ஈமான் (விசுவாசம்)

கொள்ளாதவர்களை அதாபு என்று வருணிக்கப்படும் கொடிய நோய் பிடிக்கும்' என்று இஸ்லாமிய போதனைகள் ஆரம்ப மான காலத்தில் மொழிந்தார்கள். இதனையே உமறுப் புலவர்,

தரைத்தலத் தீமான் கொள்ளுதற் கிசையாத்
தரம்படைத் தவரனை வரையுங்
கரைத்திட நனிய தாபெனுங் கொடிய
கடும்பிணி பிடித்திடு மென்றார்.
(தீனிலை கண்ட படலம் 115)

என வருணிக்கிறார். உமறுகத்தாப் ஈமான் கொண்ட படலத்தில் உமறுகத்தாப் (றலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை பற்றிப் பல இடங்களில் ஈமான் என்னும் அறபுச் சொல்லை 'மென்னபிக் கீமான் கொண்டோர்' (66) எனவும் 'அரிய மறைதேர்ந் தீமான் கொண்டு' (90) எனவும் கூறுங் கலிமா வுரைத்தீமான் கொள்ளும் படிக்கிங் கடைந் தனென்' (91) எனவும், மனங்களிப்புக் கொண்டா ரீமான் கொண்டாரே' (93) எனவும் உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். 'வினவி யீமான் கொண்டவர்கள்' (உத்துபா வந்த படலம் 3), 'புதிய மொழி யுரைத்தீமன் கொள்வித் தீர்' (உத்துபா வந்த படலம் 14), 'இவர் தமக் கீமான் கொண்டது' (மதியை அழைத்த படலம் 175) 'ஈமானினை யுளத்தினி லிருத்தி' (மதியை அழைத்த படலம் 179), 'எத்தலமும் புகழ்ந்தேத்த வீமான் கொண்டு' (புத்துபேசிய படலம் 12), எனப் பல இடங்களில் ஈமான் என்னும் அறபுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சந்தர்ப்பத் தில் மதத்தினைக் கொண்ட யானைக்கு அழகிய ஈமான் 'செவ்வி யீ, மானெனு மதகரி' (மதியை அழைத்த படலம் 56) என உருவகிக்கப்பட்டுள்ளது. மானுக்குப் பிணை நின்ற படலத்திலும் ஈமான் என்னும் அறபுச் சொல் அடிக் கடி பயன்படுத்தப்பட்டுள்ளமை நோக்கற் பாலது. வண்டு கள் மலர்களிலுள்ள தேனை அருந்திப்பாடுகின்றன. அந்தப் பாட்டில் வேடன் ஈமான் கொள்ள விரும்பியுள்ளான் என்ற கருத்துத் தொனிப்பதாக உமறுப்புலவர்

ஏட்டலர் நறவ மாந்தி யிருஞ்சுரும் பிசைக்குந்தோற்றம்
. . . . .வருந்து மானை
மீட்டனர் வேட னீமான் விரும்பினன் . . . .(51)

எனப்பாடியுள்ளார். மான் கன்றின் கூற்றாக 'பாதபங் கயத்தைக் கண்டு பரிவுட னீமான் கொண்டு (61) எனவும் பாடப்பட்டுள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கலிமாச் சொல்லிக் கொடுக்க அந்த வேடனும் ஈமான் கொண்டான் என்பதை 'முகம்மது கலிமாச் சொல்ல, விதயமுற் றுரேதி வேட னினிதினி னீமான் கொண்டு, புதியனை வணங்கி. . .' (68) என வருணித்துள்ளார் ஆசிரியர். மற்றொரு செய்யுளில் உமறுப் புலவர் மான் என்னும் சொல்லையும் ஈமான் என்னும் அறபுச் சொல்லையும் ஓசை நயம் ததும்ப அமைத்துப் பாடுவதோடு இல்லாத மானைக் கொண்டு வரப்போய் ஈ உடைய மானுன ஈமானைக் கொண்டு தனது வீட்டுக்குச் சென்றுன் என்பதை

மானைக்கொண் டுவரப் போயீ மானைக்கொண்
டகத்திற் புக்கான் (71)

என சிலேடை அமைத்துப் பாடியிருப்பதுபோல் தோன்றப் பாடியிருப்பது நயக்கத்தக்கது. பின்வரும் பாடல்களிலும் ஈமான் என்னும் அறபுச் சொல் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம். ஜின்களீமான்கொண்ட படலம்: 11, 14, 21, 27, 33, 39, 41; மதீனத்தாரீமான் கொண்ட படலம்: 6, 34, 36, 38, 51; யாத்திரைப்படலம்! 47; சுறுக்கத்துத் தொடர்ந்த படலம் 24, கபுகாபுப்படலம்: 29, 49, விருத்திட்டீமான் கொள்வித்த படலம்: 7, 14; உகுபான் படலம்: 22, 23, 24, 25; சல்மான் பாரிசுப் படலம்; 24, 30, 32, ஓநாய் பேசிய படலம்: 17; பாத்திமா திருமணப் படலம்: 190; பதுறுப்படலம்: 253; அமுறுப்படலம்: 3; உயைவந்தப்படலம்: 38, 39, 98, 183; பனீகுறைலாவதைப் படலம்: 26, 33, லுமாம் ஈமான்கொண்ட படலம்: 6, 8; உமுறுவுக்குப்போன படலம்: 57, 62,

மற்ெருரு முக்கியமான இஸ்லாமிய அறபுப் பதம் புர்கான். நல்லவற்றைத் தீயவற்றிலிருந்து வேருக்கிக் காட்டுவது -ஹலாலான (ஆகுமான) வற்றை ஹறுமான (விலக்கப்பட்ட) வற்றிலிருந்து) வேருக்கிக் காட்டுவது என்பது இதன் பொருளாகும் சரியானவற்றைப் பிழையானவற்றிலிருந்து அறியும் வாய்ப்பை அளிக்கும் அடிப்படையாக அது அமைகிறது. அல் குர்ஆன், புர்கான் என அழைக்கப்படுகிறது. குர்ஆன் என்னும் அறபுச் சொல் கரு என்னும் அடியிலிருந்து பிறந்துள்ளது. இதுவே 'இக்றஉ' என்ற உருவில் ஓதுதல் என்னும் பொருளில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் அருளப்பெற்ற திருமறை வாக்கியத்தின் ஆரம்பமாக அமைந்துள்ளது. புர்கான் என்னும் அறபுப்பதமும் குர்ஆன் என்னும் அறபுப் பதமும் சீருப் புராணத்திலே பல இடங்களில் ஆளப்பட்டுள்ளமையாகக் காணலாம்.

நஸ்று என்னும் பெயரை உடைய பண்டிதன் அண்ணல் நபி (ஸல்) அவர்களை இளம்பருவத்திலே கண்டதும் பழைய வேதங்களின் உட்பொருளினை அறிந்தவனுதலினுல் பெருமானுர் அவர்களுக்கு அல்லாஹ் புறுக்கான் என்னும் வேதத்தை இறக்குவான் என்று முன்கூட்டியே அறிவித்தான். இதனையே உமறுப்புலவர்

வியனுறு புறுக்கா னென்னும் வேதமொன் றிறங்கும்.
(பாதை பொந்த படலம் 32)

எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் புறுக்கான் வேதம் அறிவின் ஊற்று என்றும் அவ்வூற்றிலிருந்து பொருள் சுரந்து கொண்டிருக்கிறது என்றும் அது நன்மை பொருந்திய வேதம் என்றும் கருத்துப்பட கூறியமையை

ஊறிய பொருட்புறுக் கானெனன் ருேதிய
தேறுநன் மறை . . . . (உடும்பு பேசிய படலம் 15)

என உமறுப்புலவர் தமது சீறாப்புராணத்தில் அமைத்துப்பாடியுள்ளார். அமுதம் ஊறும் ஊற்றாக புறுக்கான் வேதம் விளங்குகிறது என்பதனை

. . . . அமுத மூறும்
வேதமெனும் புறுக்கான் . . . .

(உத்துபா வந்த படலம் 18)

என்றும் அல்லாஹ்வின் மிகத் தூய்மையானவார்த்தைகளைக் கொண்டது புறுக்கான் என்னும் வேதம் என்பதனை

. . . . ஆதிதன் றூய்மொழி புறுக்கான்
வேதம் . . . . . (ஹபீபு மக்கத்துக்கு வந்த படலம் 31)

என்றும் புறுக்கான் ஒரு புது வேதம் என்பதனை

புதுமறை யெனும்புறுக் கானில்

(மதியை அழைத்த படலம் 186)

என்றும் புறுக்கான் வேதம் நாள் தோறும் மோட்சப்பலனை அளித்துக்கொண்டிருக்கும் என்பதனை

. . . . நாளுங்
கதிதருமென் புறுக்கான் . . . .

(புத்து பேசிய படலம் 2)

என்றும் மனத்தெளிவை ஏற்படுத்தும் வேதம் புறுக்கான் என்பதனை

. . . . தெளிதரும் புறுக்கான்
மறைமொழி . . . . . (சல்மான் பாரிசுப் படலம் 6)

என்றும் புறுக்கான் வேதம் முறைமையானது மட்டுமல்லாமல் நல்ல வழியிலே மக்களை இட்டுச் செல்லக்கூடியது என்பதனை

நெறியொடும் புறுக்கா னன்னேர் . . . .

(பதுறுப் படலம் 1)

என்றும் புறுக்கான் வேதம் பொருந்துதற்கு அருமையான ஒப்பற்றவேதம் என்பதனை

பொருத்தரும் புறுக்கான் வேதம்

(மழையழைப்பித்தபடலம் 9)

என்றும் வருணித்துள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

சீறாப்புராணத்திற் குர்ஆன் என்னும் அறபுச் சொல் அடைஅடுத்தசொல்லாகவும் அடை இல்லாமலும் பயன்

படுத்தப்பட்டுள்ளன. 'குருனையும் விரித்துக் காட்டி' (மதீனத்தார் ஈமான் கொண்ட படலம் 9) என அடை இல்லாமலும் 'தீன் முதன் முறைமைத் தாய, விரிதருங் குருனையோதி' (மதீனத்தார் ஈமான் படலம் 30) 'அருங்கு ருனை' (மதீனத்தார் ஈமான் கொண்ட படலம் 37) 'பொருவிலாக் குருன்' (விருந்திட்டு ஈமான் கொள்வித்த படலம் 14) 'பொருந்திரைகுருனு யத்தை (செயினம்பு நாச்சியார் கலியாணப் படலம் 8) 'தேறிய குருனு யத்தின்' (செயினம்பு நாச்சியார் கலியாணப்படலம் 9) 'நன்றிசேர் குருன்' செயினம்பு நாச்சியார் கலியாணப் படலம் 16) என அடை அடுத்து வந்திருப்பதைக் காணலாம்.

'ஓதுவீராக' எனப் பொருள்படும் 'இக்றஉ' என்னும் சொல்லைக் கொண்டு ஆரம்பிக்கும் திருமறை வாக்கியங்கள் (ஆயத்துக்கள்) ஐந்தே முதன் முதலில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டன. இக்றஉ என்பதில் தொடங்கி மாலம் யஃலம் என முடிவடைகின்றன அந்த ஐந்து வாக்கியங்களும். இது பற்றி உமறுக் புலவர் குறிப்பிடுகிறார். இக்றஉ என்னும் சூறத் (அத்தியாயம்) திலிருந்து நான்கு ஆயத்துக் (வாக்கியங்) கள் மாலம் யஃலம் வரை முதன் முதலில் நபிகள் பெருமானுருக்கு அருளப்பட்டன எனக் குறிப்பிடுகிறார்.

இக்றவு வெனுஞ்சூ றத்தி லிருந்தநா லாயத் தின்ப
மெய்க்குற மாலயம் யஃல மெனுமட்டும் விளம்பு
வீரென்று. (நபிப்பட்டம் பெற்ற படலம் 27)

என சீறாப்புராணத்தின் அச்சுப் பிரதிகளில் காணப்படுகின்றது. இக்றஉ என ஆரம்பிக்கும் சூறத்தில் மாலம் யஃலம் வரை உள்ள ஆயத்துக் (வாக்கியங்) களின் எண்ணிக்கை ஐந்து என்றே திருக் குர்ஆனிலே குறிப்பிடப்படுகின்றது. எனவே உமறுப்புலவரின் பாடல்

இக்றவு வெனுஞ்சூ றத்தி லிருந்ைத தந் தாயத் தின்ப
மெய்க்குற மாலம் யஃல மெனுமட்டும் விளம்பு
வீரென்று

என அமைந்திருந்தால் இத்தகைய முக்கியமான ஒரு வேறுபாடு சீறாப்புராணத்தில் தோன்றி இருக்காது என்பதே எனது நம்பிக்கை. ஒரு வேளை முதலாவதுபதிப்பில் ஏற்பட்ட பிழையாக இது இருக்கலாம். அதன் பின்னர் பதிப்பித்தவர்கள் இந்தப் பிழையைத் திருத்தத் தயங்கி இருக்கலாம். அல்லது கருத்து வேறுபாடு காரணமாக இந்தத் தவறு ஏற்பட்டிருக்கலாம். இப்பாடலில் 'இருந்து நா லாயத்' என்னும் சொற்றொடரில் உள்ளதைவிட 'இருந்தைந் தாய்த்' என்று அச்சொற்றொடர் இப்பாடலில் அமையப் பெற்றிருந்தால் சீர் அமைப்பு நன்றாயிருந்திருக்கும். யாப்பமைதியும் பெற்றிருக்கும். ''. . . . சூறத்தில் முஸம்மிலெனுஞ் சுருதி வசன மிறங்கினவே.' (தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 36) என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் அன்றாட வாழ்க்கையில் பேச்சு வழக்கிலும் கூடப் பொதுவாக வழங்கப்படும் மற்றொரு அறபுச் சொல் கலிமா. 'கலிமா' என்னும் சொல்லின் நேரடிக் கருத்து 'சொல்' என்பதாகும். சொல் என்னும் பொருளிலே அல் குர்ஆனிலும் கலிமா என்னும் பதம் உபயோகிக்கப் பட்டுள்ளது. (3:39; 3:64; 4:71; 6:34; 6:115.) இஸ்லாமிய பரிபாஷையில் கலிமா இஸ்லாமிய மூலமந்திரத்தைக் குறிப்பிடுகின்றது. "அல்லாஹ்தஆலா அன்றி வேறு நாயன் இல்லை! முகம்மது (ஸல்) அவர்கள் அவனின் திருத்தூதராவார்கள்' என்னும் கருத்தைக் கொண்ட 'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ற சூலுல்லாஹ்' என்னும் அறபு வாக்கியத்தைக் குறிப்பிடவே கலிமா என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சொற்றொடரை 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்றும் 'முஹம்மதுர்ற சூலுல்லாஹ்' என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முன்னையது அல் குர்ஆனில் உள்ள சூறத் முஹம்மத் (47:19) என்பதிலும் பின்னையது சூறத்துல் பத்ஹ் (48:29) என்பதிலும் இடம்பெற்றிருக்கின்றது. இனி, இந்தக் கலிமா

என்னுஞ் சொல் சீருப்புராணத்தில் இடம் பெற்றிருக்கும் விதத்தினைப் பார்ப்போம்.

கலிமா என்னும் அறபுச் சொல்லை முஸ்லிம் மக்கள் தமது பேச்சுவழங்கில் அடைமொழியாக உபயோகிப்பர். சுட்டு விரலைக் குறிப்பிடக் 'கலிமாவிரல்' என்னும் சொற்றொடரைப் பயன்படுத்துவர். இச்சொற்றொடர் வலது கைச் சுட்டு விரலையே சுட்டும். உமறுப்புலவரும் தமது சீருப்புராணத்தில் சுட்டு விரலைக் குறிப்பிட 'கலிமா விரல்' என்னும் சொற்றொடரை.

விறல்புரி யாதம் வலதுகைக் கலிமா
விரனகத் திடத்தில் வைத்தனனே
(தலைமுறைப் படலம் 29)

என்றும்

....அணிக் கலிமா விரலினை யுயர்த்தி
யுதித்தனர் முகம்மது நபியே.
(நபியவதாரப்படலம் 87)

எனப்பயன்படுத்தி உள்ளார்.

சீருப்புராணத்தில் கலிமா என்னுஞ் சொல் மூலமந்திரம் என்னும் பொருளில் பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சில சமயங்களில் அடைமொழி பெற்றும் வரும். பெருமலும் வரும். கலிமாவின் சிறப்பினைப்பல்வேறு வகைகளில் எடுத்துக் காட்டும் உமறுப்புலவரின் நயத்தகு பாடல்கள் சிலவற்றை ஈண்டு எடுத்துக்கொள்வோம் அங்கே விசுவாசமான சோலை இருக்கின்றது. அந்தச் சோலையிலே ஒன்ருெடொன்று பின்னப்பட்ட கிளைகள் உள்ள மரங்கள் இருக்கின்றன. அந்தக் கிளைகளிலே குயிலினம் அவற்றின் பேடுகளோடு இருக்கின்றன. அங்கிருந்து அவற்றின் வாய் திறந்து இனிமையாகப் பாடுகின்றன. அந்த இனிய வாயினுல் கலிமாவை ஓதுங்கள் என்று கூறிக்கொண்டிருக்கின்றன. இல்லை அவ்வாறு கூறுவதுபோலக் கூவுகின்றன. அது எத்தகைய கலிமா தெரியுமா? அந்தக் கலிமா அழகிய கரும்பின் இனிய சுவையை ஒத்திருக்கின்றது. இக்கருத்துக்கள் அமைந்துள்ள பாடல் இது தான்.

பின்னிய தடத்தரு சினையிற் பேட்டொடு
மன்னிய குயிலினம் வாய்விட் டார்ப்பது
கன்னலஞ் சுவைக்கலி மாவை நந்நபிக்
கின்னண மியம்பிமென் றிசைத்தல் போலுமே.

(புனல் விளையாட்டுப் படலம் 20)

'துய்ய நற்கலிமா' (தலைமுறைப்படலம்: 7) என்றும்....... சுடர் கடுங்கும் வலியுறு கலிமா...... (தலைமுறைப்படலம்: 8) 'சுவைபெறுங் கலிமா' (இசுருகாண் படலம் 41) என்றும் 'இன்பம் வருகனி கலிமா' (மணம்பொருத்து படலம் 25) என்றும் 'பூவினன் கலிமா' (மணம்புரி படலம் 93) என்றும் 'ஆதிமுறைமறைக் கலிமா' (நபிப்பட்டம்பெற்ற படலம் 19) என்றும் 'வென்றிகொண் டுறுங்கலி மா' (தொழுகைவந்தவரலாற்றுப் படலம் 12) என்றும் 'வாழ்வுக் கீதொரு, துணையென நற்கலி மாவைச் சொல்லி' (தொழுகை வந்த வரலாற்றுப்படலம் 22) என்றும், 'கரும்பெனு நபிகலி மா' (தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 23) என்றும் 'மாசிலாத், திருநபி பெயர்க்கலி மா' (தொழுகை வந்த வரலாற்றுப்படலம் 24) என்றும் 'இறையவன் றூதர் செவ்வி யியனபிக் கலிமா' (தீனிலைகண்ட படலம் 163) என்றும் 'சொன்னயக் கலிமா' (உமறுகத்தாப் ஈமான் கொண்ட படலம் 59) என்றும் 'தேன்சோர், மருமலி கூறுங்கலிமா' (உமறுகத்தாபீமான் கொண்டபடலம் 90) 'படலைத் திண்டோள் முகம்மதின் கலிமா வோதி' (உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலம் 64) என்றும் 'முதிருங் கலிமா' (உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலம் 82) என்றும் 'நன்கலி மா' (உடும்பு பேசிய படலம் 34) என்றும் 'இனிதினும் பெயர்க்கலி மா' (உடும்பு பேசிய படலம் 34) என்றும் 'அருங்கலி மா' (உடும்பு பேசிய படலம் 36) என்றும் 'புதியவ னபிகலி மா' (உடும்பு பேசிய படலம் 37) என்றும் 'பானல னெனுங்கலி மா' (மதியையழைத்த படலம் 57) என்றும் 'ஒருகலி மா' (மதியையழைத்தப்படலம் 97) என்றும் 'அவர் கலிமா' (மதியையழைத்த படலம் 102) என்றும் 'விதியவன் றூதர் பேரினிற் கலிமா' (மதியையழைத்த படலம் 170) என்றும் திருந்திநற் கலிமா வோதி'

(மதியையழைத்த படலம் 171) என்றும், 'வெம்மையி னமுதக் கனியெனுங் கலிமா' (தலைசக்கட்டினயப் பெண் ணுரு வாக்கிய படலம் 3) என்றும் 'அணிபுய முகம்மதின் கலிமா (தசைக்கட்டியைப் பெண்ணுருவாக்கிய படலம் 16) என்றும் 'வரிசையி னெறிக்கலி மா'' (ஹபீபுராஜா வரிசை வரவிடுத்த படலம் 4) என்றும் 'உரிமையி னேடுங்கலி மா' (ஹபீபுராஜா வரிசை வரவிடுத்த படலம் 5) என்றும் 'துதிசெயுங் கலிமா' (ஹபஷாராச்சியத்துக்குப் போந்த படலம் 26) என்றும் 'நற்கலி மா' (ஹபஷாராச்சியத்துக்குப் போந்தபடலம் 27)என்றும் 'மன்னிய கலிமா' (மானுக்குப் பிணைநின்ற படலம் 38) என்றும் 'பொருத்திய கலிமா வோதி' (மானுக்குப் பிணை நின்ற படலம் 49) என்றும் 'விருப் புறுங் கலிமாத் தன்னை' (மானுக்குப் பிணை நின்ற படலம் 66) என்றும் 'ஆதியிற் சொலுங்கலி மா'(ஈத்தங்குலை வரவழைத்த படலம் 17)என்றும் 'புகழ்கலி மா'(ஒப்பெழுதித்தீர்த்தபடலம் 18) என்றும்' செவ்வியி, லுறுகலி மா' (ஒப்பெழுதித் தீர்த்த படலம் 26) என்றும் 'இருங்கலி மா' (ஒப்பெழுதித் தீர்த்த படலம் 39) என்றும் 'மதிகலி மாக்கதிர் பொழிய' (பிராட்டி யார் பொன்னுலகு புக்க படலம் 1) என்றும் 'படர்ந்த நன் கலி மா' (பிராட்டியார் பொன்னுலகு புக்க படலம் 4) என்றும் 'ஓது நன்கலி மா' (பிராட்டியார் பொன்னுலகு புக்க படலம் 5) என்றும் 'செழுங்கலி மா' (பருப்பதராஜ னைக் கண்ணுற்ற படலம் 10) என்றும் 'அருந்து மாரமு தக்கலி மா' (பருப்பதராஜனைக் கண்ணுற்ற படலம் 29) என்றும் 'கவினுறுங் கலிமா' (அத்தாசீமான்கொண்ட பட லம் 10) என்றும், 'மந்திரக் கலிமா' (அத்தாசீமான் கொண்ட படலம் 12) என்றும் சொன்னயக் கலிமா வோதி' (ஜின்களீமான் கொண்ட படலம் 13) என்றும் 'நன்கலி மா' (ஜின்களீமான் கொண்டபடலம் 14) என்றும் 'பலனுறுங் கலிமா தன்னை' (ஜின்களீமான் கொண்ட படலம் 30) என்றும் 'கோதருங் கலிமா வோதி' (ஜின்களீமான் கொண்ட படலம் 33) என்றும் 'அமுத மெனுங்கலி மா' (காம்மாப் படலம் 29) என்றும் 'விதிமுறைக் கலிமா வோதி' (மதீ னத்தார் ஈமான் கொண்ட படலம் 52) என்றும் 'ஒன்றிய

திருங்கலி மாலவை யோதியே (மதீனத்தாரீமான் கொண்ட படலம் 62)'செழுங்கலி மா'(யாத்திரைப்படலம் 33)என்றும் 'இருங்கலி மாமொழி' (உம்மி மகுபதுப் படலம் 18) என்றும் 'கட்டுரைக் கலிமா' (கபுகாபுப் படலம் 5) என்றும் 'கலிமா வென்னு, முத்தரம் பிறக்கத் தீட்டு மெழுத்தினை' (கபுகாபுப் படலம் 26) என்றும் பண்கெழுங் கலிமா வென்னும் பத்தி வேரியத்த தூன்றி'(கபுகாபுப்படலம் 29)என்றும் 'நன் னிலைக் கலிமா தன்னை' (கபுகாபுப் படலம் 39) என்றும் 'ஆரணக் கலிமா' (கபுகாபுப் படலம் 56) என்றும் 'இதமுறுங் கலி மா எடுத்தினி தோதி' (விருந்திட்டு ஈமான் கொள்வித்த படலம் 14) என்றும் 'இதமித்த நபி கலிமா' (வத்தான் படைப்படலம் 42) என்றும் 'மறைமொழிக் கலிமா' (பாத்திமா திருமணப் படலம் 187) என்றும் 'செழுங்கலி மா' (அசீருப்படலம் 36) என்றும் ''காரணக் குரிசின் முகம்மது நபிதங் கட்டுரை மறைக்கலி மாவை (பதுறுப் படலம் 232) என்றும் 'இன் கலிமா' ((பதுறுப்படலம் 233) என்றும் 'முண்ணிறை கலிமா வோதியீ மான் கொண்டு' (பதுறுப்படலம் 253) என்றும் 'நன் னயக் கலிமா' (குதிரிப்படலம் 3) என்றும் 'மருந்தெ னுங்கலி மாவுரை விதைத்து' (அசனுர் பிறந்த படலம் 1) என்றும் 'அருங்கலி மா' (அசனுர் பிறந்த படலம் 7) என்றும் 'ஆர ணக்கலி மா' (உசைனுர் பிறந்த படலம் 8) என்றும் 'ஆரணக் கலிமா' (தாதுற் றஹ்ஹாக்குப் படலம் 2) என்றும் 'வரன்மு றைத்திற நடவிய மறையுரைக் கலிமா' (தாதுற்றஹ்ஹாக்குப் படலம் 100) என்றும் 'கன்னல் போன்மொழித் திருக்கலிமா (தாதுற்றஹ்ஹாக்குப்படலம்: 103) என்றும் 'நோய மாங்கலி மா' ((பனீகுறைலா வதைப் படலம் 47) என்றும் 'நற்கலிமா ' (பனீகுறைலா வதைப் படலம் 49) என்றும் 'வேதத், தின்பமிகுங் கலிமாவை' (லுமாம் ஈமான் கொண்ட படலம் 9) என்றும் 'கரும்பெனு மறைக்கலி மாவை' (சல்மாபொருத படலம் 5) என்றும் அடை அடுத்துச் சீருப்புராணத்திலே பல இடங்களில் கலிமா என்னும் அறபுப்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

கலிமா என்னும் அறபுச் சொல் அடைமொழிகள் எதுவுமின்றித் தனிமையாகப் பல பாடல்களில் இடம்பெற் றிருப்பதையும் காணலாம். அவ்வாறு இடம்பெற்ற படலங் களும் பாடல்களும் பின்வருமாறு:

நபியவதாரப்படலம் 99; உமறுகத்தாபீமான் கொண்ட படலம் 92; மானுக்குப்பிணை நின்ற படலம் 68; ஒப்பெழு தித்தீர்த்த படலம் 29; புத்துபேசிய படலம் 1, 2, 3, 4, 11, 12; ஜின்களீமான்கொண்ட படலம் 27; மதீனத்தார் ஈமான் கொண்ட படலம் 6, 33, 36, 56, 62; மதீனத் தார் வாய்மை கொடுத்த படலம் 24, விடமீட்ட படலம் 43; கபுகாபுப்படலம் 46, 68, விருந்திட்டு ஈமான் கொள் வித்த படலம் 7; பாத்திமா திருமணப்படலம் 28; அசீருப் படலம் 33, பதுறுப்படலம் 165, 234, 251, உகுதுப் படலம் 241; லுமா மீமான்கொண்ட படலம் 6, 8, சல்மாபொருத படலம் 6; உறணிக் கூட்டத்தார் படலம் 1.

இஸ்லாமிய மந்திரமான கலிமா என்னும் பதத்தை உமறுப்புலவர் விரிவாக விளக்கியுள்ள சந்தர்ப்பங்களை எடுத்துக்கொள்வோம். பொதுவாகக் கலிமாவைக் கட்டு ரை என வழங்குவர். கட்டுரை என்றால் உறுதிச் சொல் என்றும் பொருள் பொதிந்த சொல் என்றும் பொருள்படும். (மணிமேகலை: சிறைவிடு காதை: 5; சிலப்பதிகாரம்: பதி கம்: 54) எனவே பொருள் பொதிந்த சொல்லாக விளங் கும் கலிமா கரும்பிலும் இனிமையானது. கரும்போ கண்— மரக்கண் உடைய கரும்பு. இக்கருத்துக்களையே உமறுப்புலவர் ஒரு செய்யுளின் ஒரு அடியில் குறிப்பிடுகிறார் இவ்வாறு :

கண்ணுடைக் கரும்பின் சுவையினு மினிய
கட்டுரை நெறிக்கலி மாவை

(தீனிலை கண்ட படலம் 109)

அலைகளை உடையது சமுத்திரம். அந்தச் சமுத்ததிரத்திலே இருந்து அமுதம் பெறப்பட்டதாகக் கூறுவர். அந்த அமுதம் பேரமுதமாக விளங்குகிறது. அத்தகைய பேர முதத்தையும் விட இனிமையானது ஒன்று இஸ்லாத்தில்

உண்டு. பேரமுதம் அதற்கு நிகராகாது. அது தான் இஸ்லாமிய மூலமந்திரமான கலிமா. இக்கருத்துக்களே ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளது.

உடைதிரை யமுத மொவ்வா தோதிய கலிமா (தீனிலே கண்ட படலம் 161). இனிமையான வாக்குடையவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். அத்தகைய இனிமையான வாக்கினால் சொல்லுதற்கரியது புறுக்கான்வேதம். புறுக்கானோ மதுரமான சொற்களைக் கொண்டது. இவற்றை எடுத்துப் பிரித்து விளக்கினார்கள். இவ்விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கத்துக்கு வந்திருந்த அன்றைய மதீனா வாசிககள் உள்ளமும் உடலும் பூரிப்படைந்தனர். இவற்றினால் கவரப்பட்டமையால் அவர்கள் சுவையைப் பொறுத்த வரையில் அமுதத்துக்கும் மிக்க இனிமையான கலிமா என்னும் மூல மந்திரத்தை மொழிந்து இஸ்லாத்தில் சேர்ந்தனர். இதனையே சீறாப்புராணம் இவ்வாறு விவரிக்கிறது:

. . . . முகம்மதின் மதுர வாக்கின்
விள்ளரு மறையின் றீஞ்சொல் விடுத்தெடுத்
துரைப்பத் தேறி
யுள்ளமு முடலும் பூரித் துருசிக்கு மமுதின் மிக்காய்த்
தெள்ளிய கலிமா வோதித் தீனிலைக் குரிய ரானார்.
(தீனிலே கண்ட படலம் 162)

உமறு கத்தாப் (றலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதுடன் மக்க மா நகரிலே இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை நாற்பதாயது. அவர்களுள் ஆண்கள் முப்பத்துமூன்று பேர். பெண்களின் எண்ணிக்கை ஆறு. உமறு கத்தாப் (றலி) அவர்களையும் சேர்த்து மொத்தம் 40 பேர். இவர்களே முதலில் கலிமாவைப் பெற்றவர்களாவர். கடலில் இருந்து பெறப்பட்டது அமுதம். சாயாநிற்கும் அலைகளினால் முத்துக்களை வீசி ஒலிக்கும் சமுத்திரம். இச்சமுத்திரம் காபிர்களுக்கு உருவகிக்கப்பட்டுள்ளது. இக்காபிர்கள் மத்தியிலிருந்து முஸ்லிம்கள் தோன்றினர். காபிர்கள் என்னும் சமுத்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட அமுதத்தை ஒத்திருந்த கலிமா

என்னும் இஸ்லாமிய மூல மந்திரம். இந்த அமுதம் என்னும் மூலமந்திரத்தை முஸ்லிம்கள் உண்டனர். இக்கருத்துக்களையே உமறுப்புலவர் இவ்வாறு வருணிக்கிறார் :

சரியுந் திரைமுத் தெறிந்திரைக்குஞ்
சலதிக் குபிரினி டையினடு
விரியு மமுத மெனுங்கலிமா
மேலோ ரொருமுப் பஃதுடன்முன்
றரியி மகடூ வறுவரும
றரச ரொருவ ரவனியினிற்
றெரியு மிலக்க மிந்நான்கு
பதின்ம ருடனுஞ் சிறந்திருந்தார்.

(உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலம் 95)

உமறுப்புலவர் மற்றொரு செய்யுளில் பிறிதொரு உருவகத்தை அமைத்துள்ளார். குற்றம் அற்றது தீனுல் இஸ்லாம் என்னும் மார்க்கம். இந்த மார்க்க நிலைமைக்கு உரித்தான அழகிய பயிர் தான் கலிமா. இதனை யே கவிஞர்,

செயிரறுந் தீனிலைக் குரிய செவ்விய
பயிரென வருங்கலி மா . . . .

(உடும்பு பேசிய படலம் 2)

என இவ்வாறு பாடியுள்ளார். வேறொரு செய்யுளில் கலிமாவை சூரியனுக்கும் காபிர்களை (முஸ்லிம் அல்லாதோரை) இருளுக்கும் உவமித்து சூரியன் இருளை அகற்றுவதுபோல கலிமா முஸ்லிம் அல்லாத தன்மையை நீக்கி விடுகிறது எனப் புலவர் இவ்வாறு கூறுகிறார். நபிகள் கோமான் இவ்வாறு செய்ததாக வருணிக்கிறார்.

இரவியென்னுங் கலிமாவிற் குபிர்த்திமிர
மடர்ந்தெறியும் . . . . .

(உத்துபா வந்த படலம் 19)

திமிஸ்கு நாட்டைச் சேர்ந்த ஹபீபுராஜா மக்கமா நகருக்கு வந்துவிட்டுத் தம் நாட்டுக்குத் திரும்பிச் சென்றார். அங்கு செல்லும் பொழுது அவரது பரிவாரங்களின் சத்தம் ஓர் அலாதியானதாக இருந்தது. யானைக் கூட்டங்களின் சத்தம் ஒரு பக்கம். சோலையில் வளரா நிற்கும் குதிரைக்

கூட்டங்களின் சத்தம் மற்ெருரு பக்கம். இனிய கீதத்தை கொண்ட முரசுகளின் நாதம் பிறிதொரு பக்கம். அத்தோடு தீனுல் இஸ்லாம் மார்க்கத்தின் மூலமந்திரமான கலிமாவை இனிமையுடன் ஓதிய ஓசை இன்னெரு பக்கம். இந்தச் சத்தங்கள் அனைத்தும் கடலில் ஓசையை ஒத்திருந்தது எனக் கவிஞர் இவ்வாறு வருணிக்கிருர்.

கரித்திர் ளொலித்தகம் பலையுங் காவளர்
பரித்திர ளொலித்தகம் பலையும் பண்முர
சிரைத்தலுந் தீன்கலி மாவை யின்புற
வுரைத்திடுந் தொனிக்கட லுடைத்துக் காட்டுமால்.

(ஹபீபுராஜா வரிசைவிடுத்த படலம் 13)

பாத்திமா நாயகி (றலி) அவர்களினதும் அலி (றலி) அவர்களினதும் திருமணத்திற்காக நகரம் விழாக்கோலம் பூண்டது என உமறுப் புலவர் வருணிக்கிருர். இந்தவருணனையில் கலிமாவும் இடம் பெறுகிறது. பொன் நிறத்தை உடைய கொடிகள் அங்கு இருந்தனவாம். அந்தக் கொடிகள் நூலினுல் கட்டப்பட்டு இருந்தனவாம். சித்திர வேலைப்பாட்டுடன் திகழ்ந்தனவாம். அந்தக் கொடிகள். அங்கே அகுமது நபி (ஸல்) அவர்களின் திருக்கலிமா பொறிக்கப்பட்டிருந்தனவாம். இத்தகைய கற்பனை நயம் மிக்கதாய் வருணிப்பதற்கும் உமறுப் புலவர் இஸ்லாத்தின் மூலமந்திரமான கலிமாவைப் பயன்படுத்தியுள்ளமை நயக்கதக்கது:

கழிக ளிற்பொதிந் தகுமது நபிதிருக் கலிமா
வெழுது சித்திரப் பொற்கொடி யணிநிரைத் திடுவார்.

(பாத்திமா திருமணப்படலம் 83)

இவ்வாறு இஸ்லாமிய மூலமந்திரமான கலிமா என்னும் அறபுச் சொல் சீருப்புராணத்தில் பல இடங்கலில் ஆளப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் இடம் பெறும் இரண்டு அறபுச் சொற்கள் தீன், குப்ர் என்பனவாகும். இஸ்லாமிய சமயத்தை அறபு மொழியில் தீன் என்று வழங்குவர். இஸ்லாம் அல்லாத தன்மையே அறபு, மொழியில் குப்ர் என வழங்கப்படுகிறது. குப்ர் என்னும் இச்சொல்லிலிருந்

தே பெறப்பட்ட காபிர் என்னும் சொல் முஸ்லிம் அல்லா தோரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அல் குர்ஆனி லே இஸ்லாமிய சமயத்தைக் குறிப்பிட தீன் என்னும் சொல்லும் (2:132, 256, 3:24, 73, 4:1, 25) இஸ்லாம் அல்லாத தன்மையை உணர்த்த குப்ர் என்னும் சொல்லும் (2:58, 93, 109, 3:80, 4:46, 5:44) பயன்படுத்தப்பட்டுள் ளன. சீறாப்புராணத்திலே தீன் என்னும் அறபுச் சொல்லைப் போன்று அதிகக் கூடுதலான சந்தர்ப்பங்களில் பயன்படுத் தப்பட்ட வேறு அறபுச் சொல் இல்லை என்றே கூறிவிட லாம். இதனை விடச் சற்றுக்குறைவான எண்ணிக்கையாக வே குப்ர் என்னும் அறபுச் சொல் சீறாப்புராணத்தில் உப யோகப்படுத்தப்பட்டுள்ளது.

கடவுள் வாழ்த்தில் மாத்திரம் ஐந்து தடவைகள் (5, 7, 13, 16, 17) தீன் என்னும் அறபுச் சொல் ஆளப் படடுள்ளது. தீன் என்பதனைப் பயிராகவும் குப்ர் என்பத னைக் களையாகவும் உருவகித்தல் முஸ்லிம் கவிஞரின் தமிழ் இலக்கிய மரபாகத் திகழ்வதை இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில சிறப்பாக அமைந்திருப் பதைக் காணலாம். சீறாப்புராணத்தில் அத்தகைய உருவகங் கள் இடம்பெற்றுள்ள விதத்தினைப் பார்ப்போம். குபிர் என்னும் களையை அகற்றி கலிமா என்னும் விதையை விதைத்து தீன் என்னும் பயிரை வளர்த்த விதம்

அறிந்துவெங் குபிரை யோது மாதிநூற் கலிமா வித்தி
விரிந்ததீன் பயிரை யேற்றும் . . . .

(பாத்திமா திருமணப்படலம் 29)

எனவருணிக்கப்பட்டுள்ளது. இன்னொரு சந்தர்ப்பத்தில் இதே பாணியில் இதே கவிஞர் இவ்வாறு பாடியுள்ளார்.

பாரினிற் பரந்த குபிர்க்குல மறுத்துப்
படர்தரு தீன்பயிர் விளக்க

(அலிமா முலையூட்டுப் படலம் 89)

இன்னும் பல சந்தர்ப்பங்களில் குபிரை இருளுக்கும் இந்த இருளை அகற்றும் ஒளியாக இஸ்லாத்தையும் இவ்வாறு உருவகித்துள்ளார் கவிஞர் உமறு.

திமிர வெங்குபிர் கடிந்துதீ னிலைநெறி நிறுத்தி
(உமறுகத்தாபு ஈமான் கொண்ட படலம் 1)
அழிதருங் குபிரை நீக்கி யகுமது தீனை நோக்கி
(உமறு கத்தாபு ஈமான்கொண்ட படலம் 77)
அல்லார் குபிரைக் கடிந்தகற்றி . . . . . .
. . . . . .நறுந்தீ னடுக்கந் தனைத்தவிர்த்தார்.
(உமறு கத்தாபு ஈமான் கொண்ட படலம் 92)
சுருதி மொழித்தீன் பயிர்தழைப்பச்
சுற்றுங் குபிர்வெங் களைதீய்க்கும்
(உமறு கத்தாபு ஈமான் கொண்ட படலம் 93)
கொதிப்படர் குபிரெனுங் குறுக லார்திர
ளதிர்ப்படர் தீன்படைக் கலத்தி னுக்கம்போ
லெதிர்ப்படுந் துன்பெனு மிருளை யுண்மகிழ்
மதிப்பெனுங் கதிரினுன் மாமயத்தல் வேண்டுமால்.
(மதியையழைத்த படலம் 42)
மன்னுமிசுலாமாகிக் குபிரகற்றித் தீனிலைமை வளர்ப்ப
னென்றுன் (புத்து பேசிய படலம் 6)
பணிபரித் துவந்த பாரிற் குபிரிருட் படல நீக்கித்
திணிசுடர் நிலாத்தீ னோங்க . . . .
(மதீனத்தாரீமான்கொண்ட படலம் 1)
. . .குபிரினை யகற்றி நன்னெறி தீனினைப் பிடித்து. . . .
(உகுபான் படலம் 24.
. . . .வெங்குபிர் துடைத்துவண்புக ழடைந்ததீனவர்.)
(தாத்துற்றஹ்ஹுக்குப்படலம் 39)

தீன், குபிர் என்னும் அறபுச் சொற்கள் ஒருங்கே ஆளப்பட்டுள்ள பாடல்கள் வருமாறு: தொழுகைவந்த வரலாற்றுப்படலம் 44, தீனிலை கண்ட படலம் 163, உத்துபா வந்த படலம் 2, உசைனுர் பிறந்த படலம் 14, 16, ஈமான் கொண்டவர்கள் ஹபஷாராச்சியத்துக்குப் போந்த படலம் 3, 35, ஒப்பெழுதித்தீர்த்த படலம் 6, பருப்பதராஜனைக்கண்ணுற்ற படலம் 33, காம்மாப் படலம் 20, மதீனத்தாரீமான்கொண்ட படலம் 33, யாத்திரைப்படலம் 16, 17, 62, 101, உம்மி மகுபதுப்படலம்

24, மதீனம் புக்க படலம் 21, பதுறுப்படலம் 202, 238, உகுதுப்படலம் 40; அமுருப்படலம் 12; தாத்துற்றஷ் ஹாக்குப்படலம் 10; உயை வந்த படலம் 93, உமுருவுக்குப் போன படலம் 72. தீன் என்னும் சொல் மாத்திரம் உபயோகிக்கப்பட்ட பாடல்கள் வருமாறு: நபியவதாரப் படலம் 92; அலிமா முலையூட்டுப்படலம் 86, பாதை போந்த படலம் 21, புலிவசனித்தபடலம் 11, இசுருகாண் படலம் 40, ஊசாவைக்கண்ட படலம் 26, மணம்பொருத்த படலம் 25, மணம்புரி படலம் 83, நபிப்பட்டம் பெற்ற படலம் 1, 13, 29, தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 16, 18; தீனிலைகண்டபடலம் 2, 19, 20, 42, 95, 109, 125, 149, 150, 162, உமறு கத்தாபு ஈமான் கொண்ட படலம் 4, 21, 59, 71, 80, 86, உடும்பு பேசிய படலம் 1, 2, 7, ஹபீபு மக்கத்துக்கு வந்த படலம் 3, 72, மதியையழைப்பித்த படலம் 10, 37. 52, 57, 58, 78, 112, 113, 165, 180, 188; ஹபீபுராஜா வரிசை வர விடுத்த படலம் 6 13, 16, 22, 40; ஈமான்கொண்டவர்கள் ஹபஷாராச்சியத்துக்குப் போந்த படலம் 1, 4, 12; மானுக்குப் பிணை நின்ற படலம் 1, 19, 30, 40, 67, 68, 70, ஒப்பெழுதித்தீர்த்த படலம் 7, 14, 25, 28, புத்து பேசிய படலம் 3, 12; பிராட்டியார் பொன்னுலகு புக்க படலம் 1, 15, பருப்பதராஜனைக் கண்ணுற்ற படலம் 4, 8. ஜின்களீமான்கொண்டபடலம் 15, 21, 25, 27, 37, 38, 41, 42, மதீனத்தார் ஈமான் கொண்ட படலம் 6, 8, 11, 12, 14, 30, 37, 51, 64, மதீனத்தார் வாய்மை கொடுத்த படலம் 4, 13, 14, 22, 33, 35, 44, 53; யாத்திரைப்படலம் 9, 16, 29, 30, 33, 41, 47, 62, 101, விடமீட்டபடலம் 31, சுறுக்கத்துத் தொடர்ந்த படலம் 24, 25, 27, உம்மி மகுபதுப் படலம் 21, 23, மதீனம் புக்க படலம் 13, 39, 41, 58, 59, கபுகாபுப்படலம் 1, 21, 30, விருந்திட்டு ஈமான் கொள்வித்த படலம் 15, உகுபான் படலம் 22, சல்மான் பாரிசுப்படலம் 25, 35, 59, வத்தான்படைப் படலம் 5, 7, பாத்திமா திருமணப் படலம் 1, 4, 69, 120, 182, 186, சீபுல் பகுறுப்படலம் 3, பத்னுன்னகுலாப் பட

லம் 1, 7, 10, 12, 15, பதுறுப்படலம் 4. 5. 83, 102, 178, 206, 213, 215 223, 229, 233, 237, 243, 256, சவீக்குப்படலம் 1, 3, 13, குதிரிப்படலம் 7, 12, தீயம் றுப்படலம் 1, 12, அபீருபிகு வதைப் படலம் 3, 38, அசனூர் பிறந்த படலம் 1, அபூதல்கா விருந்து படலம் 4, 6, 11, உகுதுப்படலம் 1. 5, 12, 40, 61, 62, 63, 72, 78, 81, 91, 100, 102, 124, 167, 195, 206, 216, 224, 225, 226, 228, 229, 230, 234, 245, 247, 248, 264, 266, 267, அமுருப்படலம் 1, 3, ககுபு வதைப்படலம் 3, 14, 20, 24, 32, 34, 35, 36, 41 46, 52, 67, பதுறுசுகுருப் படலம் 17, உசைனூர் பிறந்த படலம் 2, 8, தாத்துற்றஹ்றாக்குப் படலம் 2, 4, 11, 15, 18, 21, 22, 26, 43, 79, 85, 90, 94, 107, சாபிர் கடன் தீர்த்த படலம் 9, முறைசீக்குப் படலம் 1, 4, 5, 15, 18, 25, 26, 38, 44, 51, 59, கந்தக்குப் படலம் 2, 13, 15, 27, 33, 37, 42, 45, 52, 53, 72, 79, உயை வந்த படலம் 23, 33, 40, 45, 61, 76, 78, 82, 102, 110, 112, 120, 127, 159, 163, 183, பனீ குறைலா வதைப் படலம் 2, 5, 10, 18, ஹுமாம் ஈமான் கொண்ட படலம் 6, செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 25, ஒட்டகை பேசிய படலம் 1, 17, மழையழைப் பித்த படலம் 21, அந்தகன் படலம் 1, கவுலத்தை விட்டுக் கூடின படலம் 1, 2, உம்ருவுக்குப் போன படலம் 30, 36, 44, 62, 111, 112, சல்மா பொருத படலம் 2, 3, 5,

குப்ர் என்னும் அறபுச் சொல் , இஸ்லாம் அல்லாத தன்மையை உணர்த்த உபயோகிக்கப்பட்டுள்ளது. குப்ர் என்னும் அறபுச் சொல் தனியே இடம் பெற்றுள்ள பாடல்கள் வருமாறு :

நபியவதாரப்படலம் 91, 108, புனல் விளையாட்டுப் படலம் 22, கரம்பொருத்துபடலம் 33, நபிப்பட்டம் பெற்ற படலம் 39, உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலம் 76, 95, உடும்பு பேசிய படலம் 35, உத்துபா வந்த படலம் 2,

4, 19, மதியையழைத்த படலம் 166, 187, 188, தசைக் கட்டியைப் பெண்ணுருவாக்கிய படலம் 15, 31, ஹபீபு ராஜா வரிசை வரவிடுத்த படலம் 7, ஈமான் கொண்டவர் கள் ஹபஷாராச்சியத்துக்குப் போந்த படலம் 34, ஒப் பெழுதித்தீர்த்த படலம் 30, 34, பருப்பதராஜனைக் கண் ணுற்ற படலம் 33, அத்தாசு ஈமான் கொண்ட படலம் 12, ஜின்கள் ஈமான் கொண்ட படலம் 1, யாத்திரைப் படலம் 64, உகுபான் படலம் 23, வத்தான் படைப் பட லம் 9, பாத்திமா திருமணப்படலம் 40, 116, 143, சீபுல் புகுறுப்படலம் 11, பதுறுப்படம் 25, உகுதுப்படலம் 52, 96, 258, 262, அமுறுப்படலம் 14, சுகுபு வதைப் படலம் 6, 43, உசைனுர் பிறந்த படலம் 5, தாத்து ற்றஹ் ஹக்குப் படலம் 88, முறைசீக்குப் படலம் 27, 28, 57, கந்தக்குப் படலம் 82, 83, உயை வந்த படலம் 13, 19, 22, 43, 56, 89, 93, உமுறுவுக்குப் போன படலம் 29, 107, உறனிக் கூட்டத்தார் படலம் 7.

குப்ர் என்னும் வினைச் சொல்லின் பெயர்ச்சொல்லான காபிர் என்பது முஸ்லிம் அல்லாதோரைக் குறிப்பிட உப யோக்கிப்படுகிறது. இந்தச் சொல்லும் பல இடங்களில் சீறுப்புராணத்தில் பயன்படுத்தக் பட்டுள்ளமையைக் காண லாம். இத்தயைக பாடல்கள் வருமாறு: புனல் விளையாட் டுப்படலம் 30, புகைறுகண்ட படலம் 30, கரம்பொருத்து படலம் 1, 9, 36, 40 மணம்புரி படலம் 35, தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 44, தீனிலை கண்ட படலம் 4, 9, 16, 48, 74, 76, 88, 91, 97, 99, 120, 139, 163, மதியையழைத்தபடலம் 82, 122, ஈமான் கொண்ட வர்கள் ஹபஷீராச்சியத்துக்குப் போந்த படலம் 2, 3, 35, ஒப்பெழுதித்தீர்த்த படலம் 2, 6, 35, 36, பருப்பதராஜ னைக் கண்ணுற்ற படலம் 1, யாத்திரைப் படலம் 8, 12, 21, 36, 50, 61, 63, 65, 67, 68, 71, 73, 75, 78, 83, 107, 109, 111, 112, மதீனம் புக்க படலம் 1, 4, உகுபான் படலம் 6, பத்னுன்னகுலாப் படலம் 8, பதுறுப்படலம் 55, 98, 115, 204, 205, 238, 245, சவிக்குப்படலம்

2, 4, 5, அபீருபிகு வதைப் படலம் 1, 5, உகுதுப்படலம் 28, 33, 37, 44, 54, 57, 17, 111, 119, 157, 189, 194, கருபு வதைப் படலம் 25, தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 29, 86, சாபிர் கடன் தீர்த்த படலம் 8, முறைசிக்குப் படலம் 12, கந்தக்குப்படலம் 1, 22, 39, 43, உடையவந்த படலம் 21, 24, 27, 33, 62, 80, 88, 98, 101, 136, 140 பனீகுறைலா வதைப்படலம் 38, 47, 49, ஒட்டகைப்பேசிய படலம் 8, உமுருவுக்குப் போன படலம் 41, 42, 45, 61, 65, 70, 73, 74, 75, 76, சல்மா பொருத படலம் 90.

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் 'உம்மத்' என்பது மற்றொரு முக்கியமான அறபுச் சொல்லாகும். மக்கள் தொகுதி, இனம் என்னும் பொருளைக் கொண்டது இச் சொல். திருக்குர் ஆனிலே பல இடங்களில் இச் சொல் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். (2:134; 143, 213; 3:104! 110, 113; 4:41; 5:51; 69; 6:108; 7:38.) அல்லாஹ்வின் தெய்வீகக் கட்டளையின் அடிப்படையில் மதீன மா நகரை அடைந்த பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களைப் பின்பற்றிய மக்களை ஓர் உம்மத் தாக மக்கள் தொகுதியாக, தத்தமக்கே உரிய சட்ட திட்டங் களையும் பிரமாணங்களையுக் கொண்ட சுதந்திரமான மக்கள் கூட்டமாக அமைக்க வழிவகுத்தார்கள். இதன் பயனாக இன்றும் முஸ்லிம்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்துக்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். உம்மத்து முகம்மது—முகம்மது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுப வர்கள் என வழங்கப்படுகிறார்கள்.

சீறுப்புராணத்தில் உம்மத் என்னும் இந்த அறபுச் சொல் அதே கருத்தில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம். அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கண்ணுற்ற இசுறா என் னும் பண்டிதன் அவர்களின் எதிர்காலத்தைப் பற்றித் தீர்க்கதரிசனமாகக் கூறினார். உலகத்திலே முகம்மது என் னும் பெயரை உடைய ஒருவர் தோன்றுவார். அவர்களுக்

குப் பின்னர் ஒரு நபியும் இருக்கமாட்டார். அவர்களைப் பின்பற்றும் அவர்களது உமத்து ஆனவர்கள் தம் பாவங்கள் அற்றுப்போகும். அவர்களுக்கு மோட்ச கதி உண்டாகும். வானவர்களான மலாயிகத்து மார்களும் அவர்களது கலிமா என்னும் மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு கூறினர் அந்தப் பண்டிதன். இவற்றையே உமறுப்புலவர் இவ்வாறு விவரித்துள்ளார்:

புவியினின் முகம்ம தென்னப் பொருந்திய பெயருண்
டாகு
மவரலா னபிபின் னில்லை யவரும்மத் தானோர்க்
கெல்லாம்
பவமறுங் கதியுண்டாகும் படைப்புனும் வானோ
ரெல்லாம்
சுவைபெறுங் கலிமாச் சொல்வ ரென்னவே சொல்லி
னரால். (இசுருகாண் படலம் 41)

சல்மான் பாரிசு (றலி) அவர்கள் அடிமையாக இருந்த சமயம் விடுதலை பெற விரும்பின் ஒரு நிபந்தனை நிறைவேற்றப்படல் வேண்டும் என்று அவருக்குக கூறப்பட்டது. இந்த நிபந்தனையைக் கொண்டு அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். உபதேசம் பண்ணும்படி கோரினார்கள். யாராவது அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தேடிச் சென்று கண்டால் அல்லது இறந்துவிட்டால் உண்மையிலேயே அந்த எண்ணத்துக்காக அத்தகையோர் இந்த உம்மத்தைச் சேர்ந்தவராகிவிடுகிறார். அதன் பயனாக இஸ்லாத்திலே சேர்ந்து தீன் மார்க்கத்திலே சலாமத், அமைதியைப் பெறுவார். இவ்வாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியமை பற்றி உமறுப் புலவர் இவ்வாறு பாடுகிறார்.

இருநி லத்திடைப் பிறந்துநன் னபியென விவணின்
வருவ ரென்றெனைத் தேடிய வுண்மைவல் லவர்க
ளரிதிற் காண்கினு மிறக்கினு மும்மத்தி னவராய்ப்
பெருகுந் தீனில்ச லாமத்துப் பெறுவார்க ளென்றே
(சல்மான் பாரிசுப் படலம் 35)

அறபு மொழியிலே கட்டாயமானவை 'பர்ளு' என்றும் விருப்பத்துக்குரியவை, வழக்கமானவை 'சுன்னத்' என்றும் வழங்கப்படுகின்றன. அல்லாஹ்வினால் ஏவப்பட்டு நிறுவப்பட்டுள்ள மார்க்கச் சட்டதிட்டங்களுள் கட்டாயம் கடைப்பிடிக்கப்படவேண்டியவை பர்ளு என்றும் விருப்பத்துக்கிணங்கப் பின்பற்றப்படவேண்டியவை சுன்னத் என்றும் அழைக்கப்படுகின்றன. வழக்காறு, பாதை, வாழ்க்கை முறை என்பனவும் சுன்னத் என்னும் அறபுச் சொல்லின் கருத்துக்களாகும். பெரும்பாலும் பர்ளு, சுன்னத் என்னும் இரண்டு அறபுப்பதங்களாலும் இஸ்லாத்தில் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களும் பிரமாணங்களும் உள்ளடக்கப்படுகின்றன. நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் கொள்கைகளினாலும் அவர்கள் பின்பற்றிய வாழ்க்கை முறையினாலும் நிறுவப்பட்டுள்ள விதிகளும் பிரமாணங்களும் சிறப்பாக சுன்னத் என அழைக்கப்படுகின்றன. 'விருத்த சேதனத்தை'க் குறிப்பிடவும் சுன்னத் என்னும் அறபுப் பதம் உபயோகிக்கப்படுகின்றது. இங்கே வழக்காறே சுட்டப்படுகின்றது. விருத்த சேதனம் என்னும் பொருளில் உமறுப் புலவர் ''. . . .மருவுசுன் னத்துஞ் செய்யலாய் . . . பிறந்தனர் முகம்மமது நபியே (நபியவதாரப்படலம் 68) என்னும் சொல்லை உபயோகித்திருப்பது நோக்கற்பாலது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் நோன்பு நோற்றல் முஸ்லிம்களுக்கு விதியாக்கப்பட்டது. றமளான் மாதம் நோன்பு நோற்றல் பறுளாக்கப்பட்டது. இதனையே உமறுப்புலவர்

பெறுகதி றமளா னென்னப் பெருகிய நோன்பு தன்னை
யுறுதிகொண் டெவர்க்குஞ் செவ்வி யுறுபறு
ளாக்கினேல். (பதுறுப்படலம் 1)

எனக் குறிப்பிட்டுள்ளார். அல்லாஹ்தஆலா முஸ்லிம்களுக்குப் பறுளென விதித்துள்ள தொழுகையைக் குறிப்பிடும் பொழுது உமறுப்புலவர்

பழுதி லாதமெய் முதல்வன் பறுளெனப் பணியுந்
தொழுகை . . . . (பதுறுப்படலம் 11)

என விவரித்துள்ளார். அல்லாஹ்தஆலாவை பறுளின் விதிமுறைகளுக்கிணங்க தொழுதமையை 'வேதமுள் ளுறைந்த

நாயனை பறுளின் விதிமுறைத் தொழுகையை முடித்து' (ககுபு வதைப் படலம் 58) எனக் கவிஞர் விவரித்துள்ளார். றம்ளான் மாத இறுதியில் நோன்பு நோற்று முடியும் சந்தர்ப்பத்தில் மற்றொரு இறைமறை வசனம் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு இறங்கியது. இதற்கிணங்க முஸ்லிம்களுக்கு பித்ரு வழங்கல் விதியாக்கப்பட்டது. பர்ளாக்கப்பட்டது.

முதலவன் விதித்த விறமளா னேன்பு
முடிவினி லியாவரு மறிய
அதிசயம் பிறப்பப் பித்துருப் பறுளென்
ருயத்தும் நபிக்கிறங் கியது...

(பதுறுப்படலம் 256)

என பித்ரு குறிப்பிடபடுகிறது. இதுவே முஸ்லிம்கள் மத்தியில் ஸதக்கத்துல் பித்ர் என வழங்கப்படுகிறது. றம்ளான் மாதம் முஸ்லிம்கள் நோன்பு நோற்று முடிந்ததும் வழங்கும் தானதருமத்தையே இச்சொற்றொடர் குறிப்பிடுகின்றது. இஸ்லாததில் ஆகுமானதாக்கப்பட்ட நெடுந்தூரப் பயணத்தினபோது தொழுகைகளைச் சுருக்கித் தொழுதல் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுருக்கிச் தொழுவது அறபில் 'கஸ்ர்' என வழங்கப்படுகிறது. இத் தொழுகை பறுளாக்கப்பட்ட வரலாறும் சீறாப்புராணத்தில் குறிப்பிடப்படுகிறது. ஹிஜ்றி நான்காம் ஆண்டு முஸ்லிம் களுக்கு கஸ்றுத் தொழுகை விதியாக்கப்பட்டது என இறை மறை வசனம் இறங்கியது. இதனையே சீறாப்புராணம் இவ் வாறு வருணிக்கின்றது.

வந்த தெண்ணிய கிஜுறத்து நான்கெனும் வருடஞ்
சிந்தை கூர்தரக் கசறெனுந் தொழுகையைச் செய்த
லெந்த நாட்டினு மேகுவோர் மேல்பறு ளென்ன
வந்த மில்லவ னுரண மிறங்கின வன்றே

(உசைனுர் பிறந்தபடலம் 1)

தாத்துற்றஹ்ஹாக்கு என்னும் பதியில் வாழும் கத்துபான் என்னும் கூட்டத்தாருடன் மோதிய சந்தர்ப்பத்தில் பறுளான தொழுகையை நிறைவேற்றியமை, 'மன்னிய பறுளென் றேத்தும் வணக்கமு முடிந்த தன்றே.' (தாத்துற்றஹ்

ஹாக்குப்படலம் 15) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள் மக்க மா நகரிலிருந்து மதின மா நகருக்குச் சென்று நான்கு ஆண்டுகள் நிறைவுற்றன. ஐந்தாவது ஆண்டு ஆரம்பமாயது. அப்பொழுது முஸ்லிம்கள் மீது ஹஜ் கடமை விதியாப்பக்கட்டது. மக்க மா நகருக்கு மேற்கொள்ளும் புனிதப் பயணமான ஹஜ் முஸ்லிம்களுக்குக் கடமையாக்கப்படடது. இதனையே உமறுப் புலவர்,

விலக்கரிய வருடமொரு நான்குநிறைந்
      தைந்தாண்டு மேவும் போதி
வலக்கணுருச் சுடரொளியா மல்லாவின்
      பணிவிடையா லவனி மீதிற்
றுலக்கமுற வந்த ஹஜ்ஜுபறுளான
      தின்றுமுதற் றெழுவீ ரென்றே.

(ஹுமாம் ஈமான் கொண்ட படலம் 1)

என்று வருணிக்கிருர். ஐவேளைத் தொழுகையைப் பற்றியும் நோன்பைப் பற்றியும் ஹஜ்ஜைப்பற்றியும் குறிப்பிடுகையில் அவற்றை இவ்வாறு அமைத்துள்ளார்:

. . . . . . காலமைந்துந் தொழுக வென்றுந்
தூதரா யுமையிருக்க வனுப்பினதும்
காதலுடன் ஸக்காத்து நோன்பு ஹஜ்ஜும்
      பறுளெனவே கழறு மைந்தும்

(ஹுமாம் ஈமான் கொண்ட படலம் 5)

ஹஜ் என்னும் அறபுச் சோல்லின் நேரடிக் கருத்து 'புறப்படுதல்', ஒரு திசையை நோக்கிச் செல்தல் என்பனவாகும். இஸ்மலாமிய பரிபாஷையில் ஹஜ் என்னும் சொல் புனித பயணத்தைக் குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய ஆண்டிலே வரும் பன்னிரண்டாம் மாதமான துல் ஹஜ் மாதத்திலே மக்க மா நகருக்கு முஸ்லிம்கள் மேற்கொள்ளும் புனித பயணத்தையே இச்சொல் குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய கோட்பாடுகளுள் ஐந்தாவதான ஹஜ் எல்லா வசதிகளும் உள்ள முஸ்லிம்களால் வாழ்க்கையில் ஒரு முறையாவது

நிறைவேற்றப்படவேண்டியது ஒன்றாகும். ஹஜ்ஜும் உம்ருவும் பற்றித் திருக்குர்ஆனிலே (2:196, 197) குறிப்பிடப் படுகிறது. துல் ஹஜ் மாதம் முதற் பத்து நாட்களிலே ஹஜ் நிறைவேற்றப்படல் வேண்டும். ஆனால் உம்ருவோ ஓர் ஆண்டில் எப்போதவது நிறைவேற்றக் கூடியதொன்றாகும்.

சீறாப்புராணத்திலே பல இடங்களில் ஹஜ்பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அபூ லஹப் உட்படக் குறைசிக் காபிர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் எதிர்க்க முற்பட்டனர். ஹஜ் தினத்தன்று அண்ணலாரைத் தீர்த்து விட வேண்டும் என்று ஆலோசித்தனர். இதனையே உமறுப்புலவர்,

. . . . நா
மிகைத்த ஹஜ்ஜின் முகம்மதின் வீரத்தைத்
தகைத்தல் வேண்டுவ துண்டெனச சாற்றுவார்.
(தீனிலைக் கண்ட படலம் 74)

என்றும்

இத்த லத்தினி லிவ்வரு டத்தினின்
மொய்த்த ஹஜ்ஜின் முகம்மது வஞ்சினைப்
பித்த னென்று பெரும்பெயர் நாட்டுதல்
புத்தி யென்றித மித்தனர் பொய்ம்மையோர்.
(தீனிலைக் கண்ட படலம் 78)

இவ்வாறு வருணித்துள்ளார். அலைகளால் சூழப்பெற்றது இந்த உலகம். இதன் நடுமையமாக அமைந்திருப்பது மக்கமா நகரம். உலகின் அணிகலனாகவும் திலகமாகவும் உயிர் நாடியாகவும் அமைந்துள்ளது மக்கா. இத்தகைய மக்காவிலே ஹஜ்ஜினை நிறைவேற்ற மதீன மாநகரிலிருந்து பயணிகள் வந்திருந்தனர். இக்கருத்துக்களையே ஆசிரியர் இவ்வாறு பாடுகிறார்.

பாய்திரை பரவை சூழ்ந்த படிக்கணி திலத மாவி
யாயமக் காவின் ஹஜ்ஜி லணிபெற வைப்பத் தாறு
தேயுமா னிடருங் கண்ட திரளொடு மதீன மென்னுந்
தூயமா நகரந் தோறும் வந்தனர் துலங்க வன்றே.
(மதீனத்தார் ஈமான் கொண்ட படலம் 3)

நபிகள் பெருமானார் முகம்மது (ஸல்) அவர்களுக்கு நபிப் பட்டம் அருளப்பெற்று பதின் மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர் எல்லோரும் ஹஜ்ஜினை நிறைவேற்ற ஒன்று கூடினர் என்பது

உயர்புகழ் முகம்மதுக் கும்பர் கோனபிப்
பெயரளித் தாண்டுபன் மூன்று பேர்பெற
நயமுற நடக்குமந் நாளில் ஹஜ்ஜினுக்
கியல்பெற யாவரு மீண்டினரரோ
(மதீனத்தார் வாய்மை கொடுத்த படலம் 1)

என்றும் பழைய முறைப்படி எல்லோரும் ஹஜ்ஜினை நிறைவேற்றினர் என்பது

போந்துகஃ பாவினிற் புகுந்து தொன்முறை
யேய்ந்த ஹஜ் ஜெனுநெறி முடித்திட் டாரரோ
(மதீனத்தார் வாய்மை கொடுத்த படலம் 3)

என்றும், அனைவரும் ஹஜ்ஜினை முறைப்படி நிறைவேற்றி விட்டு அவரவர் பதிகள் நோக்கிச் சென்றனர் என்பது

முறைமை யாகிய ஹஜ்ஜினைக் குறைவற முடித்துப்
புறநிலத்த வரு மவரவர் பதியினிற் போனார்.
(யாத்திரைப் படலம் 16)

என்றும் விவரிக்கப்பட்டுள்ளது.

உம்ருவுக்குப் போன படலத்தில் ஹஜ் பற்றியும் உம்ரு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'மக்கத்தி, லோது ஹஜ்ஜுமு ருச்செய்ய வுன்னியே' (2) என்று அவர்களின் எண்ணத்தையும் 'நன்றி சேர்ஹஜ்ஜசெய்திடா திடர்சில நடத்தி' (40) என்று அவர்களுக்கு ஏற்பட்ட தடையையும் 'அரிய ஹஜ்ஜுமு ருச்சய வந்தன மடுத்தே' (41) என்று அவர்களின் உண்மையான குறிக்கோளையும் '....உவந்த ஹஜ்ஜமுருச் செய்ய' (84) என்று அடுத்த ஆண்டு அனுமதி வழங்கப்படும் என்னும் உறுதியையும்

காயத்தி னனம் வீசும் ஹபீபுஹஜ் செய்ய
நீயத்து நினைத்த தன்மை தடையற நீங்க வேண்டித்
தேயத்தோர் புகழ வொட்டை யறுத்துநற் குருபான்
செய்தே (88)

என்று தங்களது கடமையை நிறைவேற்ற முடியாமல் போனு லும் தங்களின் நிய்யத்தை, எண்ணத்தை நிறைவேற்றக் குர் பான் கொடுத்தமையையும் உமறுப் புலவர் சிறப்பாக அமைத்துப் பாடியுள்ளார். உம்ரு என்னும் அறபுச்சொல் தனிமையாக 71ஆம் 72ஆம் செய்யுட்களிலே இடம் பெற்றுள்ளது.

இஸ்லாத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டாய கொடை அறபில் 'ஸக்காத்' என வழங்கப்படுகிறது. அதன் மூலக் கருத்து தூய்மைப்படுத்துதல் என்பதாகும். தொழு கையை உறுதியாக்கப் பின்பற்றுங்கள். ஸக்காத் பழக்கத்தை வழமையாக்கிக் கொள்ளுங்கள்.' என்று கூறு கிறது அல் குர்ஆன் (2:43, 110.) இஸ்லாத்தின் ஐம் பெரும் கடமைகளுள் ஒன்ருன ஸக்காத் முஸ்லிம்களால் பின்பற்றவேண்டியதொன்ருகும். திருக்குர்ஆனிலே பெரும் பாலும் தொழுகையும் ஸக்காத்தும் இரட்டைக் கடமைக ளாகவே குறிப்பிடப்படுகின்றன. அடுத்தடுத்துச் சீருப் புராணத்திலும் இம்முறையே பின்பற்றப்படுகின்றது.

. . . . .காலமைந்துந் தொழுக வென்றுங்
காதலுடன் ஸக்காத்து . . . .
('ஹுமா மீமான் கொண்ட படலம் 5)

தான தருமங்களைக் குறிக்க 'ஸதக்கா' எனும் அறபுச் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இச் சொல் இதே கருத் தில் திருக்குர்ஆனிலே (2:264, 271) உபயோகிக்கப்பட்டுள் ளது. அச்சொல்லின் நேரடிக் கருத்து 'நன்னெறியில் இருத் தல்' என்பதாகும். வேதத்திலே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைக்கு இணங்க ஐந்து நேரமும் தொழுங்கள்: நல்ல விழுமிய எண்ணத்தோடு ஸதக்கா வழங்குமின்' என பாத்திமா நாயகி (றலி) அவர்களின் திருமண விழாவினை யொட்டி முறையன் பேரொலி முரசொடு ஒட்டகத்திலிருந்து கடிமுரசறைந்தான் என்பதை

சுருதி நேர்தவ றின்றியஞ் சொகுத்தினுந் தொழுமின்
வரிசை நன்னினை வொடும்சதக் காவழங் கிடுமின்
(பாத்திமா திருமணப் படலம் 72)

என்றும் இமாம் ஹுஸைன் (றலி) அவர்கள் பிறந்து ஏழாம் நாள் அவர்களின் தலைமயிரை நீக்கி அதன் நிறைக்குச் சம மாகப் பொன்னை ஸதக்காவாகக் கொடுத்தார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்பதை

தெரித ரத்தின மேழினிற் செம்புவி புரக்கு
மரசர் நாயகர் மகள்மனை யடுத்தரும் புதல்வன்
கரிய மென்சிர மயிரினைக் களைவித்தவ் வெடையி
னிரசி தஞ்சதக் காவென வெடுத்தினி தளித்தார்.

(அசனூர் பிறந்த படலம் 16)

என்றும் கணக்கற்ற திரவியத்தை சதக்காவாகக் கொடுக்கப் பட்டமை

அலகிலா நிதியந் தனைச்சதக் காவென்
றவரவர்க் களித்தனன் பறித்து

(கஃபு வதைப் படலம் 46)

என்றும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஸதக்கா கொடுக்கப் பட்டமை

ஆலய மறந்த தீனுடை ஹபீபுக்
கன்பொடு முவப்பொடுஞ் சதக்காச்
சாலவு மருளி . . . .

(கஃபு வதைப்படலம் 52)

என்றும் வருணிக்கப்பட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

வேளை, நேரம் என்பதனைக் குறிக்க அறபில் 'வக்த்' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதே கருத்துக்க ளில் 'ஸா'அத்' என்னும் சொல்லும் பயன்படுத்தப்படு கிறது. நேரத்தைக் குறிக்க வக்த் என்னும் சொல் திருக் குர்ஆனிலே (7:187, 15:38) இடம் பெற்றுள்ளது. இச் சொல் சீறாப்புராணத்திலே

இற்றைநாட் டொடுத்தைந் தொகுத்தினும் . .

(உகுபான் படலம் 10)

. . . . . . அஞ்சொகுத்தினும்

(பாத்திமா திருமணப்படலம் 72)

. . . . இந்த, ஒகுத்தினில் . . .

(அபூதல்ஹா விருந்து படலம் 5)

ஒகுத் எனச் சற்றுத் திரிந்து ஆளப்பட்டுள்ளமையைக் காண லாம்.

ஸலாத் என்று வழங்கப்படும் தொழுகையை நிறை வேற்ற உளத் தூய்மையும் சரீர சுத்தியும் இன்றியமை யாதனவாகும். திருக்குர்ஆனிலும் இது வலியுறுத்தப்படு கின்றது. (5:7, 4:43). தண்ணீர் பெற முடியாத சந்தர்ப் பங்களில் தூய்மைப்படுத்திக் கொள்ளும் முறைமையும் குறிப்பிடப்படுகின்றது. முன்னது 'வுலு' பின்னது 'தயம் மும்' என்றும் அறபில் வழங்கப்படுகிறது. தொழுகையை யும் அதற்கு இன்றியமையாத சரீர சுத்தியையும் நிறை வேற்றும் விதத்தினை விண்ணவர் கோமான் ஜிபுறீல் (அலை) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் போதித்த நிகழ்ச்சி சீறாப்புராணத்தில் இவ்வாறு வருணிக்கப்பட்டுள் ளது.

பெருகிப் பரந்த புனற்கரையிற் பெரியோன்
றூதை யருகிருத்தி
மருவு மலரு மெனவுலுவின் வகைபுந்
தொகையும் வரவருத்திக்
குரிசி னபியைப் பின்னிறுத்திக் குறித்த நிலைரண்
டிறக்க அத்துப்
பிரிவிற் றொழுவித் திருந்துவிண்ணிற் படர்ந்து
சுவனத தலத்துறைந்தார்.

(தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 38)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தாங்கள் கற்றவற்றைத் தங்கள் வாழ்க்கைத் துணைவியார் கதீஜா (றலி) அம்மை யார் அவர்களுக்குப் போதித்தார்கள். உலுச் செய்யும் முறைமையையும் தொழுகையை நிறைவேற்றும் விதத்தினை யும் நபிகள் பெருமானார் விளக்கியவாறே கதீஜா (றலி) அவர்களும் செய்தார்கள். இந்த விவரம் சீறாப்புராணத்தில் இவ்வாறு அமைந்துள்ளது!

நறையார் கூந்தற் கதீஜாவை நண்ணி யுலுவும்
வணக்கமுமுன்

முறையா யுரைப்ப வுரைத்தபடி முடித்தார்
கனகக் கொடித்தாயே
(தொழுகை வந்த வரலாற்றுப்படலம் 39)

வேதத்திலே கூறப்பட்டுள்ளது என்பதனை விளக்க

'ஆரணத் நூலு' (தீனிலை கண்ட படலம் 4)

என்றும் அல்லாஹ்வைத் தொழுவதற்காக அவனை நினைத்து சரீர சுத்தி செய்தமையை குறிப்பிட

. . . . பொருவி லானை
நினைத்துலுச் செய்து . . . .
(தீனிலைக் கண்ட படலம் 9)

என்றும் அந்தகன் ஒருவனுக்கு உலுச் செய்யும்படி பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளை இட்டமை

. . . . நீ
யொல்லை யிற்சென் றுலுச்செய்து. . . . .
(அந்தகன் படலம் 3)

என்றும் இந்தக் கட்டளையைப் பெற்ற அந்த அந்தகன் அவ்வாறே உலுச் செய்தமை

. . . . அந்தகன்
சிந்தையார மகிழ்ந்துலுச் செய்து . . . . .
(அந்தகன் படலம் 5)

என்றும் நபிகள் பெருமானார் தொழுவதற்காக உலுச் செய்த பின்னர் நீரை தத்தம் கரங்களில் தோழர்கள் ஏந்தினர் என்பதனை

. . . .தொழுகைக் காலத் துலுச்செயும் புனலை
வேட்டுத்
தாவறக் கரங்க ளேத்தித் தளர்பவர் சிலபே ரம்ம
(உமுறுவுக்குப்போன படலம் 67)

என்றும் உமறுப்புலவர் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. உலு என்னும் சொல்லை 'ஒது' என முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் சருவ சாதாரணமாகப் பயன்படுத்துவது போல சீறாப்புராணத்திலும் ஒது என 'ஒதுவுடன் வருமுறை யொழுகி . . . .' (உடும்பு பேசிய படலம் 37) என்று ஆளப்பட்டுள்ளது.

ஒரு முறை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுடன் தண்ணீர் அற்ற ஓர் இடத்தை அடைந்தார்கள். தொழுகை நிறைவேற்றப்படவேண்டிய சமயம் அது. தொழுகைக்காக உலுச் செய்ய நீர் இல்லாமல் இருந்தது. உடனே ஜிபுறீல் (அலை) அவர்கள் அவ்விடத்துத் தோன்றி 'நீரைக் கொண்ட தடாகங்கள் இல்லாதவிடத்து தடையில்லாமல் தொழுகையை தயமுஞ் செய்துநடத்தலாம்' என்னும் இறை வசனங்களை அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்தார்கள். இதனையே

நெஞ்சாகுல மறுநீரக மில்லாவிட நியமந்
துஞ்சாவகை தயமுஞ்செய்து தொழமேலவன் விதியின்
மிஞ்சாரண மொழியகரமு திஃதென்ன விரைந்து
மஞ்சார்வெளி வழியேகொடு வகந்தார்ஜிபு றீலே.

(முறை சீக்குப்படலம் 39)

என விவரிக்கிறார் கவிஞர் உமறு. இக்கட்டளைக்கு இணங்க அனைவரும் தயமுஞ் செய்து தொழுகையை நிறைவேற்றினர். இதனையே சீறுப்புராணம் இவ்வாறு வருணிக்கின்றது.

. . . . .இவரும்பிற ருமுள
முருகும்படி பிறிதொன்றையு நினையாதொரு
பொருளைத்
தருமந்திர நெறியின்படி தயமுஞ்செய்து தொழுதார்.

(முறைசீக்குப் படலம் 40)

முறைசீக்குப்படலத்தில் உள்ள 41 வது செய்யுளிலும் தயமும் என்னும் இச்சொல் ஆளப்படுகிள்ளது.

உலகத்தில் முஸ்லிம்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ எந்தெந்த மொழிகளைப் பேசுகின்றார்களோ அங்கங்கெல்லாம் அந்த அந்த மொழிகளைப் பேசும் போதெல்லாம் அவர்கள் அல்லாஹ்வைத் தொழும் ஐந்து வேளைகளையும் குறிப்பிட அறபுச் சொற்களையே வழங்குகின்றனர். ஸலாத்துல் பஜ்றி அல்லது ஸலாத்துல் ஸுபஹ் என்று வைகறைப் பொழுதில் சூரிய உதயத்துக்கு முன்னர் நடைபெறும் தொழுகையையும் ஸலாத்துல் ளுஹர் என்று நண்பகலில் நிறைவேற்றப்படும் தொழுகையும் ஸலாத்துல் அஸ்றி என்று பிற்பகலின் நடுப்

பகுதியில் நடாத்தப்படும் தொழுகையும் ஸலாத்துல் மஃறிப் என்று சூரிய அஸ்தமனமான உடனே நிகழ்த்தப்படும் தொழுகையும் ஸலாத்துல் இஷா என்று இரவின் முற்பகுதி யில் நடைபெறும் தொழுகையும் அறபுச் சொற்களாலே வழங்கப்படுகின்றன. வைகறைப் பொழுதில் நடைபெறும் தொழுகை முதலியவை திருக் குர்ஆனிலே (17:78) குறிப் பிடப்படுகிறது.

சீறாப்புராணத்தில் இத்தொழுகைகள் அறபுச் சொற் களாலேயே வழங்கப்படுகின்றன. கிழக்கு வெளித்ததும் வைகறைத் தொழுகையான பஜ்றுத் தொழுகை அடுத்தது என்பது

. . . . .கீழத்திசை
விரிதர வெளுத்தது விரைவி னன்நபி
யரியவற் றொழுபஜ் றடுத்த . . .(புவாத்துப் படலம் 9)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பஜ்றுத் தொழுகை சூரிய உதயத்துக்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டியதொன் றாகும். பஜ்றுத் தொழுகைக்குரிய நேரம் முடிவுறப் போகின் றது என்று அத்தருணத்து நிகழ்ச்சிகளை பின்வருமாறு விவரிக்கிறார் உமறுப்புலவர்.

தேய்கின்றதிவ் விரவும்வெளி தெரிகின்றது கதிரும்
பாய்கின்றது கலனுங்கணிற் படுகின்றில பஜறு
மாய்கின்றது தொழவிவ்வுழை யெவ்வாறென மனத்து
ளாய்கின்றனர் மனையார்துடை யணைமேற்றுயில்
செய்தார். (முறைசீக்குப்படலம் 36

நண்பகலில் சூரியன் உச்சியிலிருந்து சற்றுத் சாய்ந்ததின் பின் னர் நிறைவேற்றப்படுவது ஸலாத்துல் லுஹர் என்னும் தொழுகை. முஸ்லிம்களின் கிப்ளாவாக கஃபத்துல்வா ஏற் பட்ட சம்பவத்தை குறிப்பிடும் பொழுது லுஹர் தொழுகை குறிப்பிடப்படுகின்றது.

. . . . .லுஹறு நரேத்தில் . . .
ககுபத்துல்லாவை நோக்கித் தொழுத படலம் 4)

நினைப்பரும் பொருளை யேத்தி லுஹறினைத் தொழுது
நின்றார். (தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 10)

என்றும் வந்துள்ளமை காண்க,

பிற்பகலின் நடுப்பகுதியில் நடைபெறும் அஸ்ர் தொழுகை ஸலாத்துல் வுஸ்தா எனத் திருக்குர்ஆனிலே (2:238) குறிப்பிடப்படுகிறது. இவேளைத் தொழுகையிலே மத்திய தொழுகையாக அமைந்துள்ளமையால் அத்தொழுகை அவ்வாறு அழைக்கப்படுகின்றது எல்பர் அறிஞர். உலகக் கருமங்களுக்கு மத்தியில் முஸ்லிம்களுக்கு அல்லாஹ்வை நினைவு படுத்துமுகமாகவே இத் தொழுகை அவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்றும் அத்தகையோர் கருத்துத் தெரிவிப்பர். மனிதனுடைய ஐந்து புலன்களையும் அடக்குவதற்காகவே அஸ்ர் தொழுகை ஏற்படுத்தப்பட்டுள்ளது என அஸ்ர் தொழுகைக்கு வரையறை கூறப்பட்டுள்ளது சீறுப் புராணத்தில்.

அன்னது போயதாலென் னசறெனுந் தொழுகை
யொன்றுண்
டின்னுமத் தொழுகை தீனோ ரென்பவர்க் குரிய
தன்றே
மன்னிய புலன்களைந்து மனவெளி வளியிற்செல்லப்
பன்னிய நிலத்தின் வீழ்ந்து பத்தியின் முடிக்க
வேண்டும்.

(தாத்துற்றூஹ்ஹாக்குப் படலம் 18)

ஆரணப் பொருளை யோர்ந்த அளவினில் அசறு
தோன்ற (தாத்துற்றஹ்ஹாக்குப்படலம் 22)

என்றும்

அசறடுத்த பொழுது மடுத்ததால்.

(உயை வந்த படல்ம் 40)

என்றும்

அன்றுக லிகல்குபிர ராலசறு வணக்கங்கலா வான
தென்ன. (உனவயந்த படலம் 89)

என்றும்

....அசறு பானத வணங்குமின்...

(பனிகுறைலா வதைப்பபடலம் 7)

என்னும்

அசறு மட்டாகக் கண்ணின்

(உமறு கத்தாபிமான் கொண்ட படலம் 48)

என்றும் அசறுத் தொழுகையைக் குறிப்பிட்டுள்ளார் கவிஞர் உமறு.

கிரியைகள் அறபு மொழியில் அமல் எனப்படும். திருக்குர்ஆனிலும் இதே கருத்தில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. (5:62) அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுதலையும் நாம் அமல் செய்கிறோம் என்று தான் வழங்கி வருகிறோம். சீறாப்புராணத்திலும் அமல் என்னும் அறபுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கலிமாச் சொல்லி ஈமான் கொண்டு அதற்குரிய கரும காரியலங்காரங்களைச் செய்வதாகிய அமல் புரிந்து நிற்றலே இஸ்லாத்தில் சேர்தலாகும் என உமறுப்புலவர் இவ்வாறு வருணிக்கிறார் !

ஒருத்தனு யகனவற் குரிய தூதெனு
மருத்தமே யுரைகலி மாவந் நிண்ணயப்
பொருத்தம் மானடை புனைத லாமமல்
திருத்தமே யிவையிசு லாத்திற் சேர்தலே.

(தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 2)

இசுலாம் என்னும் சொல் பல இடங்களில் சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ளன. அவையாவன: தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 5, 15, 17: தீனிலை கண்ட படலம் 48, 121, 143: உமறுகத்தாப் ஈமான் கொண்ட படலம் 92: உடும்பு பேசிய படலம் 16: உத்துபா வந்த படலம் 11: ஹபீபு ராஜா வரிசை வர விடுத்தபடலம் 7, 15: ஒப்பெழுதித்தீர்த்தபடலம் 28: மதீனத்தாரீமான் கொண்ட படலம் 52: உம்மி மகுபதுப்படலம்ப 20, 23: சல்மான் பாரிசுப் படலம் 38: குதிரிப்படலம் 1: தீயம்றுப் படலம் 3: உசைனுர் பிறந்த படலம் 16: தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 30: உயை வந்த படலம் 37: பனீகுறைலா வதைப் படலம் 26: லுமாம் ஈமான் கொண்ட படலம் 9: உமுறுவுக்குப் போன படலம் 90: இதே போன்று முஸ்லிம் என்னும் சொல்லும் சீறாப்புராணத்தில் ஆங்காங்கே ஆளப்பட்டிருப்பதைக் காணலாம். அசனுர் பிறந்தபடலம்

18, உகுதுப்படலம் 253, முஹறசீக்குப்படலம் 27, நய வஞ்சகர் என்னும் பொருளில் முனபிக்கீன் என்னும் அறபுச் சொல் (திருக்குர்ஆன் (4:61, 85, 138, 140, 142, 143) சீறுப்புராணத்தில் '. . மதீனு, மிக்கமுனபிக்குசளு மேவியர் தமக்கு' (சுகுறுப் படலல் 12) என ஆளப்பட்டுள்ளது.

தொழுகையுடன் சம்பந்தப்பட்ட வேறு அறபுச் சொற்களும் சீறுப்புராணத்தில் இடம் பெற்றுள்ளன. அத்தகைய சொற்களுள் ஒன்று றக்கஅத், ஒவ்வொரு தொழுகையும் இத்தனை றக்கஅத்துக்களைக் கொண்டது என இஸ்லாத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்குளுக்கு வெற்றி அளிக்கும்படி அல்லாஹ்வைப் பிரார்த்தித்தார்கள். இரண்டு றக்கஅத்துக்கள் தொழுது நெடியவனை அல்லாஹ்விடம் வேண்டினார்கள். இதுவே சீறுப்புராணத்தில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது:

அன்று நந்நபி தனித்தொரு வயினுறைந் தறிவா
னின்றி ரண்டிறக் அத்துநன் நெடியவனை வணங்கி
(மதியை அழைப்பித்த படலம் 121)

இச்சொல் கருபத்துல்லாவை நோக்கித் தொழுத படலத்தில் 'ஹக்கனை யிரண்டிறக் ஆத்துத் தான் தொழுது' (4) என்றும் 'முன்னரி ரண்டிறக் ஆத்து முற்றிய, பின்னர்' (7) என்றும் வந்துள்ளது. இதே சொல்

. . . . மாமறை
சொல்லி ரண்டிறக் ஆத்துத் தொழுதபின்.
(அந்தகன் படலம் 3)

என்றும்

குறித்த நிலைரண்டிறக்கஅத்து
(தொழுகை வந்த வரலாற்றுப் படலம் 36)

என்றும் தாதுற்றஹ்ஹாக்குப் படலத்தில் இரண்டு தடவையும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

றுகூஉ, ஸுஜூது முதலிய பலவற்றைக் கொண்டது ஒரு றக்ஆத். இச் சொல்லும் ஒரு செய்யுளில் வேறு அறபுச்

சொற்களோடு உபயோகிக்கப்பட்டுள்ளது. இமாம், மௌமூம், தக்பீர், நபி, சுஜூத், நிய்யத் என்னும் அறபுச் சொற்களும் இங்கு ஆளப்பட்டுள்ளன. செய்யுள் இதுதான்!

ஒன்னலர்க் கெதிரோர் கூட்ட முறமற்றோர் கூட்ட
மௌமு
மென்னநின் றுறஇ மாமா யியனபி தக்பீர் கட்டி
நன்னிலை றுக்கூ வினோடு சுஜூதிவை நடத்தி ரண்டாம்
பின்னிலை யெய்த அன்றோர் நிய்யத்திற் பிரிதல்
கொண்டே. (தாதுற்றஹ்ஹாக்குப் படலம் 23)

தக்பீர், சுஜூது, றுக்கூஉ என்னும் அறபுச் சொற்கள் ஒருங்கே அமைந்த மற்றொரு செய்யுளின் இறுதி அடிகள் இரண்டும்

பற்றியின் தக்பீர் கட்டித் தொடர்ந்திடப்ப யில்றுக்கூவு
நற்றுறை சஜூதுஞ் செய்து நாயக ரிருப்பின் மேவ.
(தாதுற்றஹ்ஹாக்குப் படலம் 24)

என அமைந்துள்ளது. சுஜூது என்னும் அறபுச் சொல் சில சமயங்களில் சுசூது எனதமிழாக்கப்பட்டும் வருவதுண்டு. இச்சொல் வந்துள்ள ஏனைய செய்யுட்களாவன! தலைமுறைப் படலம் 14, நபியவதாரப் படலம் 87, 105, தீனிலை கண்ட படலம் 95, 96, தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 23, 24, ஒட்டகை பேசிய படலம் 15.

தக்பீர் என்பதும் அல்லாஹு அக்பர் என்னும் முழக்கத்தைக் குறிப்பதோடு தொழுவதற்கு நிற்கும் நிலையில் தக்பீர் கட்டுதலையும் குறிக்கின்றது. இவ்விரண்டு கருத்துக்களும் தொனிக்கத் தக்பீர் என்னும் அறபுச் சொல் சீறாப் புராணத்தில் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களிலும் தக்பீர் முழக்கம் செய்யப்படுவதுண்டு. உமறு கத்தாப் (றலி) அவர்கள் கலிமாவை மொழிந்து ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவிய பொழுது அனைவரும் மகிழ்ச்சி மேலீட்டினால் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் முழக்கஞ் செய்து அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்தார்கள். இங்கே தக்பீர் என்பது 'தக்பீறு'

என்று உபயோகிக்கப்பட்டுள்ளது. இசை நிரப்பவே கவிஞர் இவ்வாறு செய்திருக்கலாம்.

. . . . . . .பெரியோ னுதி தனைப்புகழ்ந்து
மீறுங் களிப்பா நந்தமான விழைவாற் றக்கு
பீறுரைத்தார்

(உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலம் 92)

என்பதே அச்செய்யுளின் இறுதிப்பகுதி. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நபிப்பட்டம் பெற்று ஆரம்ப காலத்தில் பைத்துல் முகத்தீசு என்னும் பதியை நோக்கியே முஸ்லிம்கள் தக்பீர் கட்டித் தொழுதுவந்தனர் என்னும் குறிப்பை உமறுப்புலவர் இவ்வாறு அமைத்துள்ளார்.

நபியெனத் தீனிலே நடத்த நாண்முதற்
கவினுறும் பைத்துல் முகத்தி சென்னுமத்
தவிசினை நோக்கியே தக்கு பீறேடும்
புவியிடைத் தொழுகையைப் பொருத்தி நின்றனர்.

(கஃபத்துல்லாவை நோக்கித் தொழுத படலம் 1)

ஜின்களீமான்கொண்ட படலத்திலும் (36), தாத்துற்றஹ்ஹாக்குப் படலத்திலும் (23, 24) உயை வந்த படலத்திலும் (151) தக்பீர் என்னும் இந்த அறபுச் சொல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இமாம் என்றால் தலைவர் என்பது பொருள். இஸ்லாமிய பரிபாஷையிலே தொழுகையின் போது முன்னின்று நடத்துபவரையே இச்சொல் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. நான்கு மத்ஹபுகளையும் நிறுவியவர்களைக் குறிப்பிடவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. உமறுப்புலவர் முதலில் இச்சொல்லால் நன்கு மத்ஹபுகளையும் நிறுவியவர்களையே குறிப்பிடுகின்றார்.

வேதவான் கவெனு நாலிமாம் கள்பத
மேலுமி யாம்புகல வேணுமே.

(கடவுள் வாழ்த்து 15)

தொழுகையின் போது முன்னின்று நடத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிடும்பொழுது கவிஞர்

தொழுகை நேரிமா மெனச்செயுந் தொழின்முறை
சிறப்ப (பதுறுப்படலம் 11)

எனக் கூறுகிருர். தாத்துற்றஹ்ஹாக்குப் படலத்திலும் (23) இச் சொல் ஆளப்பட்டுள்ளது. தொழுகையின் போது ஓர் இமாமைப் பின்பற்றித் தொழுபவர்கள் மௌமு மெனப்பட்டார்கள். மௌமும் என்னும் அறபுச் சொல் இதே கருத்தில் தாத்துற்றஹ்ஹாக்குப் படலத்தில் (23) இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

எண்ணம் என்னும் பொருளில் நிய்யத் என்னும் அற புச் சொல் தாத்துற்றஹ்ஹாக்குப் படலத்தில் (23) அதே உச்சரிப்பிலும் உமுறுவுக்குப்போன படலத்தில் (88) யாப் பமைதி கருதி நீயத்து என்று முதல் நீண்டும் வந்துள்ளமை நோக்கற்பாலது.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கித் தொழும் திசை கிப் லா என அறபில் வழங்கப்படுகிறது. திருக்குர்ஆனிலே (2:142, 143, 144, 145, 10:87) கிப்லா பற்றிக் குறிப் பிடப்படுகிறது. உமறுப்புலவரும் குறிப்பிடுகிருர். நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் பிறந்த பொழுது கிப்லாவை முன்னேக்கியவர்களாகவே தோன்றினுர்கள் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

. . . . . . .கிளர்கிபு லாவைமுன் னேக்கி . .

(நபியவதாரப்படலம் 87)

சீறுப்புராணத்தில் இடம்பெற்றுள்ள மற்ருெரு குறிப்பிடத்தக்க அறபுச் சொல் குத்பா என்பதாகும். வெள் ளிக்கிழமை நடைபெறும் ஜும்ஆத் தொழுகைக்கு முன்னர் நிகழ்த்தப்படும் போதனை அல்லது பிரசங்கம் குத்பா எனப் படும். இது குத்துபா எனவும் தமிழில் எழுதப்படும். முஸ் லிம்களின் முதலாவது பள்ளிவாசல் மதீனுவுக்குச் சமீபமாக உள்ள குபா என்னும் தலத்தில் அமைக்கப்பட்டது. அங்கு சென்றபின் வந்த வெள்ளிக்கிழமை அன்று இறுதி நாள் வரை குத்பா நடாத்தப்படும் எனக் குறித்துக் காட்டினுர் கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். இதனையே உமறுப் புலவர் இவ்வாறு பாடுகிருர்:

அத்தலத் துறைந்துபி னடுத்த வெள்ளி நா
ளுத்தமத் தமரொடவ் வுறைந்த பேர்கட்கு
மித்தலத் தின்றுதொட் டிறு நாண் மட்டுங்
குத்துபா வெனநபி குறித்துக் காட்டினூர்.

(மதீனம் புக்க படலம் 37)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்ட பின்னர் அங்கு குத்துபாத் தொழுகையை நடாத்தினூர்கள் என்ற விவரமும்

. . . . நந்நபி,
தோமில்வண் குத்துபாத் தொழுவித் தாரரோ.

(மதீனம் புக்க படலம் 38)

என்றும்

நாயக முகம்மது நாட்கொண் டவ்விடத்
தேயுயர் குத்துபா வியற்றினூரரோ.

(மதீனம் புக்க படலம் 39)

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்குப்பறு ளாக்கப்பட்ட நோன்பினை முஸ்லிம்கள் அனுட்டித்து வந்த னர். றம்ளான் மாதம் 17 ஆம் நாளாயது. அன்று வெள்ளிக்கிழமை. முஸ்லிம்கள் குத்துபாத் தொழுதனர். பின்னர் ஒற்றர் வந்து ஏதோ கூறுகிறூர். இந்நிகழ்ச்சிகளை உமறுப்புலவர்,

பறுலெனு நோன்பு நோற்று வருகையிற் பதினேழாய
குறைவற வெள்ளி நாளிற் குத்துபாத் தொழுத
பின்னர் (பதுறுப்படலம் 3)

என வருணிக்கிறூர். இங்கே குத்துபா என்று சொல்லும் பொழுது வெள்ளிக்கிழமை நாட்களில் நடைபெறும் ஜூம் ஆத் தொழுகையையே சுட்டுகின்றது. முஸ்லிம்களின் பேச்சு வழக்கிலும் குத்துபா என்று கூறும்பொழுது அது ஜூம்ஆத் தொழுகையையே குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய வரலாற்றிலே நிகழ்ந்த இரண்டாவது முக்கியத்துவம் பெற்ற போர் உகுத் என்னும் தலத்தில் நடைபெற்றது. இந்தப் போருக்காக ஷவ்வால் மாதம் பதினாலாம் நாள் வெள் ளிக்கிழமை குத்துபாத் தொழுத பின்னர் வேதம் ஒலிப்பதனுல் தீது அற்றும் போகும் வண்ணம் அண்ணல் நபி (ஸல்) அவர் கள் எழுந்தார்கள். இதனையே உமறுப்புலவர்,

பேத மற்றஷவ் வாலென வுரைத்திடும் பெரிய
மாத மேழிரண் டினில்வெள்ளி வாரத்தின் வணங்கி
யோது குத்துபாத் தொழுதபின் மறையிய மொலிப்பத்
தீத றும்படி யெழுந்தனர் ஹபீபெனுஞ் செம்மல்.
(உகுதுப் படலம் 77)

என வருனித்துள்ளார். வெள்ளிக்கிழமை நாளில் வள்ளல் நபி (ஸல்) அவர்கள் குத்துபா ஓதியமை பற்றி உமறுப்புலவர்

சீர்த்திசேர் வள்ளல் வெள்ளிக் கிழமையிற் குத்து பாவி
லார்த்தெழுந் தோதி மின்ப ரதனிடை யிருக்கும்
போதில் (மழையழைப்பித்த படலம் 2)

என்றும்

. . . . .சிந்தைகூர் புகர்தின மதனி
னிறைத்திடு மொழிசேர் குத்துபா வோது நேரத்தில்
(மழையழைப்பித்த படலம் 19)

என்றும் குறிப்பிட்டுள்ளார். மழையழைப்பித்த படலத்தில் உள்ள 2 ஆம் செய்யுளில் மின்பர் என்னும் அறபுச் சொல்லையும் உபயோகித்துள்ளார். குத்துபா ஓதப் பயன்படுத்தப்படும் இருக்கை, ஆசனம், பீடம், மின்பர் என அறபில் வழங்கப்படுகிறது. இங்கு எடுத்துக் காட்டப்பட்ட மழையழைப்பித்த படலத்தின் 19 ஆஞ் செய்யுளில் 'புகர்தினம்' என்னும் சொற்றெடர் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். இது ஓர் அருமையான உபயோகம் எனின் அது மிகையாகாது. இலக்கண விளக்கத்தில் (883) புகர் என்னும் சொல் சுக்கிரனைக் குறித்து நிற்கின்றது. சுக்கிரன் என்றால் வெள்ளி என்பது ஒரு பொருள். இங்கே புகர் தினம் என்னும் சொற்றெடர் சுக்கிரத்தினம், வெள்ளியின் தினம் என்று பொருள் தரும் வெள்ளிக்கிழமை என்பதனைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

பாத்திஹா என்பதன் பொருள் ஆரம்பம் என்பதாகும். திருக்குர்ஆனின் ஆரம்ப அத்தியாயமும் சூறத்துல் பாத்திஹா என்றே அழைக்கப்படுகின்றது. ஒரு கருமத்தை ஆரம்

பிக்கும்போது ஓதுவதையும் பாத்திஹா ஓதுதல் என்பர். அதே போன்று ஒரு கருமத்தை முடிவுறச் செய்யும் பொழுதும் பாத்திஹா ஓதியே முடிப்பர். ஒரு நிகழ்ச்சியை நல்ல முடிவுக்குக் கொண்டுவரும் இந்த பாத்திஹா ஓதலை ஒரு முத்தாப்பு ஓதல் என்றும் கொள்ளலாம். அலி (றலி) அவர்கள் பாத்திமா (றலி) அவர்களைத் திருமணம் புரிந்து கொண்ட உடன் அவர்கள் விருப்பத்தைக் கண்ட அனைவரும் அவர்களை வாழ்த்திக்கடல் ஒலி போல் பாத்திஹா ஓதினார்கள் என்பதனை உமறுப்புலவர் இவ்வாறு வருணிக்கிறார்:

மலிபொலன் கிரியிற் சோதி மணியினை யிருத்தல்போல
அலியிடத் திருத்தும் பாவை யழகுகண் டுவந்துமேலோ
ரொலிகடல் கிளர்ந்த தென்ன வுற்றவ ரெவருஞ்
சூழ்ந்து
பலனுற வாழ்த்திப் பாத்திஹா வோதுங் காலே.

(பாத்திமா திருமணப்படலம் 181)

பதுறுப் போரின் போது அல்லாஹ்தஆலாவிடம் குறை இரந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பாத்திஹா ஓதினார்கள் என்பதனை,

கந்து கத்திருத் தருமறை பாத்திஹா வோதி

(பதுறுப்படலம் 116)

என உமறுப்புலவர் குறிப்பிட்டுள்ளார். இதே போன்று உகுதுப்போரிலும் பெருமானார் நபி (ஸல்) அவர்கள் குறை இரங்கிப் பாத்திஹா ஓதியமை

தருவெ னத்தருத் தூதருந் தடக்கர மலர்த்தி
யரும றைச்செழும் பாத்திஹா வோதினரன்றே

(உகுதுப்படலம் 78)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அபீதாலிப் அவர்களின் மனைவியும் அலி (றலி) அவர்களின் தாயாருமாகிய பாத்திமா அம்மையாரின் மறைவைப்பற்றி விவரித்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் உவகை அடைந்தவர்களாய் அனுதாபத்தோடு பாத்திஹா ஓதித் தத்தம் வீடுகட்குச் சென்றனர் என்பது

திருநபி தருமொழி செவியிற் கேட்டலு
மொருவருக் கொருவருள் ளுவகை கூர்ந்துநற்
பரிவொடும் பாத்திஹா வோதிப் பண்புடன்
மருவிய மனையிடம் வந்து புக்கினர்

(உசைனுர் பிறந்த படலம் 19)

என விவரிக்கப்பட்டுள்ளது.

பாத்திஹா என்னும் அறபுச் சொல்லோடு நெருங்கி இணைந்த மற்ருெரு அறபுச் சொல் 'துஆ' என்பது. துஆ என்பதனைப் பிரார்த்தனை என்றும் கூறலாம். ஸலாத் என்னும் அறபுச் சொல்லும் ஒருவகைப் பிரார்த்தனையே யாதலால் பிரார்த்தனை என்று கூறும்பொழுது இரண்டுக் கும் இடையில் வித்தியாசம் இல்லாமல் இல்லை. அல்லாஹ் விடம் குறை இரங்கும் பிரார்த்தனை அல்லாஹ்வின் கட்டளை யை நிறைவேற்றும் தொழுகை என்னும் பிரார்த்தனையி லிருந்து வேறுபட்டிருப்பதைக் காணலாம். துஆ என்னும் அறபுச் சொல்லும் ஸலாத் என்னும் அறபுச் சொல்லும் அவற்றின் வெவ்வேறு கருத்துக்கள் தொனிக்க ஒரே வசனத் தில் திருக்குர்ஆனிலே (14:40) ஆளப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஸலாத் என்னும் தொழு கையை நிறைவேற்றிய பின்னர் துஆ என்னும் பிர்ராத்தனை யை ஓதுதல் முஸ்லிம்களிடையே நிலவும் சர்வசாதாரண மான வழக்காருகும்.

இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் குறைசியரின் தொல்லை தாங்க முடியாத காலத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் தங்களுக்குள்ள ஒரு குறையை நீக்குமாறு குறை இரந்தார்கள். அன்று மக்க மா நகரிலே, எல்லா வகையிலும் ஆற்றல் மிக்கவர்களாய் விளங்கிய உமறு கத் தாப் அவர்களை அல்லது அபூ ஜகிலைத் தங்கள் பக்கம் திருப்புமாறு வேண்டிஞர்கள். இஸ்லாத்தில் சேரும் வாய்ப் பை அவர்களுள் ஒருவருக்கு அளிக்குமாறு துஆக் கேட்டார் கள். இந்நிகழ்ச்சியே இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

உலகி னிற்குகரு தலர்க்கட லரியும றிலேக்கொண்
டலத பூஜகி விலேக்கொடு தீனில்லே யதலேப்
பெலனு றும்படி யெனக்கருள் பிறிதில்லே யெனவே
நலனெ டுந்துஆச் செய்தனர் முகம்மது நபியே.

(உமறுகத்தாபீமான் கொண்ட படலம் 3)

இந்த துஆ என்னும் அறபுச் சொல் தமிழில் பெரும் பாலும் உடம்படுமெய் தோன்றும் முகமாக துவா எனத் தமிழில் எழுதப்படுவது வழக்காறுகும். பேச்சு வழக்கிலும் துவா என்றே பயன்படுத்தப்படுகிறது. சீறுப்புராணத்திலும் துஆ என்னும் சொல் பல இடங்களில் துவா என்றே உபயோகிக்கப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். 'மகிழ்ச் சியிற் றுவாச் செய்வீரால்' (ஹபுபீ மக்கதுக்கு வந்த படலம் 73, 74) என்றும் 'இறைவலே நோக்கித் துஆவிரந் தினிரேல்' (தசைக் கட்டியைப் பெண்ணுருவமைத்த லம் 8, 15) என்றும் ''நபியுள், ளிடைந்திரு கையேந்தி தருந்துஆ விரப்ப' (உகுபான் படலம் 7) என்றும் 'பெருகு நல்லறி வினர்துஆப் பேறுகள் பெறுமின்' (பாத்திமா திரு மணப்படலம் 72, 120, 179) என்றும் 'என்றிருகையேந் திநறுந் துஆவோதி யிறைவலே யேத்தி' (உமய வந்த படலம் 89, 94, 133) என்றும் 'பூணு நேயத்தோ டுறுந்துஆ விரந்திடும் போதில்' (பனீ குறைலா வதைப் படலம் 21) என்றும் 'திருத்தருமொளியை யுன்னி துகவிரந்திருகை யேந்தி' (மழையழைப்பித்த படலம் 9, 20, 21) என்றும் 'உன்னி யோதித் துஆவிரந்து' (அந்தகன் படலம் 4, 6) 'இகலறு மொழிகள் கூறித் துஆவிரந் திரங்கி நின்றுன்' (கவுலத்தை விட்டுக் கூடின படலம் 10) என்றும் இச் சொல் துஆ என்றும் துவா என்றும் சீறுப்புராணத்தில் வந்துள்ளது.

பாத்திஹாவிலே துஆ ஓதும் பொழுது பெரும்பாலும் ஒருவர் துஆ ஓத அங்குள்ள ஏலேயோர் 'ஆமீன்' என்று கூறுதல் வழக்காறுகும். ஆமீன் என்னும் அறபுச் சொல்லின் கருத்து 'அப்படியே ஆகுக' என்பதாகும். இரு கைகளேயும ஏந்திதயவர்களாகவே எல்லோரும் ஆமீன் கூறுவர். இதலே யே சீறுப்புராணம் அதன் நகரப்படலத்தில்,

'இறைவனைத் தொழு திருகையு மேந்திய வாமீன்
முறைமு றைப்படிக் கூறிய வோசையு முழங்கும் (22)

எனக் கொண்டுள்ளது. 'வானவ ராமீன் கூற' (பாத்திமா திருமணப் படலம் 167) என்றும் 'ஆமீ னென்னுஞ்சொ லுங் கடல்போ லார்ப்ப' (பாத்திமா திருமணப்படலம் 179) என்றும் 'அந்த ரத்தினி லமரரா மீனெலி யதிர' (பதுறுப்படலம் 116) என்றும் 'விரைவி னிற்கைக ளேந்தியா மீனெலி விளம்ப' (உகுதுப்படலம் 78) என்றும் ஆமீன் என்னும் அறபுச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் துஆ ஓதுவதனுலும் அங்கு இருக்கும் ஏனை யோர் ஆமின் கூறுவதனுலும் அங்குள்ளோருக்கு அல்லாஹ் திருவருட்பேறு அளிப்பான் என்ற எண்ணத்துடனே அவ் வாறு செய்யப் படுகிறது. 'பறக்கத்' என்னும் அறபுச் சொல் அல்லாஹ் துஆக் கேட்போருக்கு அளிக்கும் திருவருட் பேற்றினையே குறிக்கின்றது. திருவருட்பேறு என்னும் கருத் திலேயே திருக்குர்னிலும் இச் சொல் இடம் பெற்றுள்ளது. (7:96) நபிகள் பெருமானுரின் செவிலித்தாயான ஹலீமா (றலி) அம்மையார் பாலூட்டி வளர்ப்பதற்காக அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் குழந்தையாகப் பெற்றமையால் ஹலீமா (றலி) அம்மையாரின் உடல் வளர்ச்சியுற்றது. முன்பு குடிக்கத் தாய்ப்பால் இல்லாமல் தவித்த லமுறத் என்னும் குழந்தை நற்பலனடைந்தது. முகம்மது நபி (ஸல்) அவர்களின் பறக்கத்திஞலேயே இவ்வாறு நிகழ்ந்தது என்கிருர் கவிஞர்.

வற்றித் தூங்கிய லமுறத்து வெனுமந்த மதலை
நற்ற வம்பெறு முகம்மது நபிபறக் கத்தா
லுற்ற பால்குடித் துடறழைத் துறுபிடி யாகி
வெற்றி வெங்கயக் கன்றெனக் கவின்விளங் கியதே.
(அலிமா முலையூட்டுப் படலம் 51)

முகம்மது நபி (ஸல்) அவர்களின் திரு வருளிஞல் என்ற கருத்துத் தொனிக்க முகம்மதின் பறக்கத் தால்' என்று நதிகடந்த படலத்திலும் (31) மதீனத்தார் ஈமான்கொண்ட படலத்திலும் (61), 'நன்னபி பறகக் தாலே நலிகின

னிறையோன்' என்று உகுதுப்பட லத்திலும் (175), வாய்மை நீதி நபிபறக் கத்திஞல்' என்றும் 'மன்னு மாநபி தம்பறக் கத்திஞல்' என்றும் அந்தகன் படலத்திலும் (4,6) பறக்கத் என்னும் அறபுச் சொல் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். ஆயிஷா (றலி) நாயகி அவர்களின் திருவருளிஞல் என்பதைக் குறிக்க வந்த கவிஞர் பறக்கத் என்னும் சொல்லை 'மயிலாயிஷா பறக்கத்தென நபிகூறினர் மாதோ' என்ற முறைசீக்குப் படலத்தில் (41) பயன் படுத்தியுள்ளமையைக் காணலாம்.

திருக்குர்ஆன் வாக்கியங்கள்—திருமறை வசனங்கள் ஆயத்துக்கள் என வழங்கப்படுகின்றன. ஆயத் என்னும் சொல் திருக்குர்ஆனிலே (2:99, 129) இடம் பெற்றுள்ளது. அல்லாஹ்விடமிருந்து நபிகள் பெருமாஞர் (ஸல்) அவர்களுக்கு வேத வசனம் இறங்கியது என்பது 'இறைவஞய்த் திறங்கியது' என்று தீனிலைப்படலத்தில் (110) இடம் பெற்றுள்ளது. அதே படலத்தில் ஆயத் என்னும் சொல் (119) வந்துள்ளளது. அச்சொல் இடம்பெற்றுள்ள ஏனைய செய்யுடகளாவன: பதுறுப்படலம் 1, 102, 256, சவீக்குப்படலல் 4, அபீறுபிகு வதைப் படலம் 12, சுகுறுப் படலம் 17, தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 21, பனீகுறைலா வதைப் படலம் 21, லுமாம் ஈமான் கொண்ட படலம் 2, செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 8, 9, 16, 27, 29, கவுலத்தை விட்டுக் கூடின படலம் 11, 13, உமுறுவுக்குப் போன் படலம் 112, உறனிக்கூட்டத்தார் படலம் 12, 13, திருக்குர்ஆனின் அத்தியாயங்கள் சூறுக்கள் என வழங்கப்படுகின்றன. திருக்குஆனிலும் (2:23) இச்சொல் வந்துள்ளது. அல்லாஹ்விடமிருந்து அத்தியாயங்கள் நபி முகம்மது (ஸல்) அவர்களுக்கு இறங்கியமை பற்றிக் குறிப்பிடுகையில் உமறுப்புலவர்,

நிலஞ்சூழ் பரவைப் புறப்புவியு மிறைஞ்ச நெடி
யோன் றிருவருளாற்
சொலும்சூ றத்தில் முஸம்மிலெனுஞ் சுருதி
வசன மிறங்கினவே.

(தொழுகை வந்த வரலாற்றுப்படலம் 36)

உத்துபா என்பவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டான். எம் பெருமானுர் (ஸல்) அவர்களும் உரிய முறையில் தக்க பதிலளித்தார்கள். அவர்களின் ஒரு பதிலை இவ்வாறு ஒரு செய்யுளின் முதற் பகுதியில் அமைத்துப் பாடுகிருர் கவிஞர் உமறு.

ஆதிதனை யுளத்திருத்தி பிசுமிலெனு
முரைதிருத்தி யமுத முறும்
வேதமெனும் புறுக்கானி லொருசூறத்
தெடுத்தோதி . . . .

(உத்துபா வந்த படலம் 18)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என்பதைக் குறிக்க அல்ஹம்துலில்லாஹ் என்போம். இதன் சுருக்கமாக 'அல் ஹம்த்' என்னும் சொற்ருெடரை சீருப்புராணத்தில் இவ் வாறு அமைத்துள்ளார் கவிஞர் உமறு!

துண்டத்தி ஞவி தோன்றத் தும்மலுந் தோன்றிப் பின்பு
விண்டுரை பகரு நாவின் மேவியல் ஹம்தை யோதி...

(தலைமுறைப் படலம் 9)

அறபு மொழியில் கல்பு என்ருல் தமிழில் இருதயம் என்பதாகும். இந்தச் சொல் இதே கருத்தில் திருக்குர் ஆனிலே (2:89, 204, 283) இடம்பெற்றுள்ளது. சீருப் புராணத்தில் கல்பு என்னும் அறபுச் சொல் ஆளப்பட் டுள்ளது. இசுரு என்னும் பண்டிதன் பலவிதமான நூல் களைக் கற்றுத் தேர்ந்து அவற்றை மனதில் இருத்தியவனுக இருந்தான். இதனையே உமறுப்புலவர்,

பல்வித நூலிற் றேர்ந்து . . . . . .
. . . .
கல்பினி லிருத்தி . . . . (இசுருகாண் படலம் 6)

என விவரிக்கிருர். உள்ளத்திலே உள்ள கள்ளங் கபடங்கள் அகற்றப்பட்டமை 'கல்பினிற் கசடு நீத்து' (மதீனத்தா ரிமான் கொண்ட படலம் 7) என்றும் சகுது (றலி) அவர் களின் இருதயம் என்பதைக் குறிக்க '. . . . சகுது கல்பினில் . . . . .' (மதீனத்தாரிமான் கொண்ட படலம் 65) என்

றும் நபிகள் பெருமானரின் பொன்மொழிகளை உள்ளத்தில் கொண்டனர் மதீன வாசிகள் என்பதனை

மல்வளர் புயமுகம் மதுதம் வாய்மொழிக்
'கல்பினி லிருத்தி. . . . . .

(மதீனத்தார் வாய்மை கொடுத்த படலம் 40)

என்றும் கல்பு என்னும் அறபுச் சொல் ஆளப்பட்டுள்ள மையைக் காணலாம்.

குர்பானி என்பது மற்ருெரு அறபுச் சொல். தியாகம் புரிதல் என்பதனைச் சுட்டுவதாக இந்தக் குர்பானி என்னும் சொல் அமைந்துள்ளது. திருக்குர்ஆனிலே இதே கருத்தில் குர்பானி என்னும் சொல் வந்துள்ளது. (3:182: 5:30) 'விந்தையாய் குறுபான் செய்ய' என்றும் 'தேய்தோர் புகழ வொட்டை யறுத்துநற் குறுபான் செய்தே' என்றும் உமுருவுக்குப்போன படலத்தில் வந்துள்ளமை நோக்கற்பாலது.

முஸ்லிம்கள் பேச்சு வழக்கில் சருவ சாதாரணமாக உபயோகிக்கப்படும் சலாம் என்னும் அறபுச் சொல் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியத்திலும் பெரு வழக்கைப் பெற்றுள்ளது. முதலில் சலவாத் என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். (திருக்குர்ஆன் 2:157, 238). ஹவ்வா (அலை) அவர்கள் ஆதம் (அலை) அவர்களிடம் மகர் கேட்க இந்த விவரத்தை அல்லாஹ்விடன் ஆதம் (அலை) முறையிட முகம்மது நபி (ஸல்) தம் பேரிற் சலவாத் பத்து முறை ஓதி அதனை மகராகக் கொடுக்கும்படி அல்லாஹ் கட்டளை இட்டான். இதனையே உமறுப் புலவர்,

. . . . என்றன்
மகரினைத் தருக பின்னர் வருகவென் றுரைத்திட்
டாரே (தலைமுறைப்படலம் 21)

கேட்டனர் மகரென் ருதங் கிலேசமுற் றிறைபாற்
கெஞ்சி
வாட்டமில் லவனே யெந்த வகைமகர்
கொடுப்ப தென்றுர்

நாட்டிய புகழ்சேர் மக்க முகம்மது நபிதம் பேரிற்
சூட்டிய சலவாத் தீரைந் துரைமென விறைவன்
சொன்னுன். (தலைமுறைப்படலம் 22)

மதிக்கதிர் விலக்குஞ் சோய் முகம்மதின்
சலவாத் தோதி (தலைமுறைப்படலம் 23)

இங்கே வந்துள்ள மகர் என்னும் அறபுச் சொல்லை பின்னர் எடுத்துக்கொள்வோம். சலவாத் என்னும் பதம் 'மிகுந் திடும் வரிசை நபிசல வாத்தை' (தலைமுறைப் படலம் 32) என்றும் 'பன்னிய சலவாத் தோதியே வாழ்த்தி. . .' (நபி யவதாரப்படலம் 117) என்றும் 'வானவர் புகழ்தர வருஞ் சல வாத்தை' (விடமீட்ட படலம் 34) என்றும் 'தானவன் பெயரின் வண்ணப் பயித்தொடுஞ் சலவாத் தோதி' (பாத் திமா திருமணப் படலம் 186) என்றும் 'தேன்மழை, பொழிந்தென நபிசல வாத்துப் பொங்கவே' (மதீனம் புக்க படலம் 56) என்றும் எல்லா ஓசைகளையும் விட சல வாத்தின் ஓசை மிகுந்து வானளாவ ஒலித்தது என்று தொனிக்க

படர்திரைக் கடலி னேதை கடந்தன படையி னேதை
புடைபடும் படையி னேதை கடர்தன புரவி யோதை
கடுவிசைப் புரவி யோதை கடந்தன கரியி னேதை
தடைவரைக் கரியி னேதை கடர்தன சலவாத்
தோதை. (பதுறுப் படலம் 28)

என்றும் 'முகம்மதின் சலவாத் தோதி' (பதுறுப்படலம் 32) என்றும் 'சலவாத் தார்ப்ப' (குதிரிப்படலம் 10) என்றும் 'கடலென சலவாத் தோத' (ஊகுதுப்படலம் 89) என்றும் 'விண்ணிடத் தடவி நின்ற மிகுசல வாத்தினேதை' (உகுதுப் படலம் 90) என்றும் உபயோகிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சாந்தி, சமாதானம், அமைதி என்னும் பொரு ளில் 'சலாமத்' என்னும் அறபுச் சொல் பயன்படுத்தப்படு கிறது. நபிகள் பெருமானுரின் உம்மத்தவர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சலாமத்துப் பெறுவார்கள். சாந்தி அடை வார்கள். அமைதியை ஈட்டிக்கொள்வார்கள், சமாதானத் தைப் பெற்றுக் கொள்வார்கள். இதனையே உமறுப்புலவர்.

. . . . .உம்மத்தி னவராய்ப்
பெருகுந் தீனில்ச லாமத்துப் பெறுவர்க ளென்றே.
(சல்மான் பாரிசுப் படலம் 35)

என்று குறிப்பிட்டுள்ளார். பாத்திமா (றலி) அவர்களின் திருமணத்துக்காக மதீன மா நகர் அலங்கரிக்கப்பட்டதென்றும் அதற்காக முறையர்கள் மக்களுக்கு முரசறைவித்தனர் என்றும் உமறுப்புலவர் வருணிக்கிறார். அங்ஙனம் முரசறையும் பொழுது தாம் விளம்பரப்படுத்தும் கடமைகளைப் புரிந்து பெறற்கரிய பேற்றினைப் பெற்றுகொள்ளுங்கள் என்றும் அத்தகைய பேறுகளுள் ஒன்று உலகிலே வாழ்ந்து சமலாமத்— அமைதி பெறுவதாகும் என்றும் இவ்வாறு உமறுப்புலவர் பாடியுள்ளார்.

தரையின் மீதுற வாழ்ந்துச லாமத்துப் பெறுமின்
(பாத்திமா திருமணப் படலம் 73)

சலாம் சொல்லுதல் என்று நாம் சருவ சாதாரணமாகக் கூறும்பொழுது ஒருவர் மற்றவர் மீது சாந்தியும் சமாதனமும் உண்டாவதாக என ஆசீர்வதிப்பதையே குறிக்கின்றது. சலாம் என்னும் அறபுச் சொல் திருக்குர்ஆனிலே (10:10) வந்துள்ளது. சீறாப்புராணத்திலே இந்த சலாம் என்னும் சொல் சலாம் கூறுதல் என்ற பொருளில் பல செய்யுட்களில் இடம்பெற்றுள்ளது. இச் சொல் 'சலாஞ் சாற்றி' (பாந்தள் வசனித்த படலம் 10) என்றும் 'சலா முரைத்து' (புலிவசனித்த படலம் 10) என்றும் நன்னெறிக் குரிசிற் கென்றன் சலாமையு நவிலு மென்றார்' (இசுறா காண் படலம் 45) என்றும் 'சலாமுமோதினர்' (ஊசாவைக் கண்ட படலம் 24) என்றும் 'தக்கநற் பொருளா யுறுசலா முரைக்கும்' (நபிப்பட்டம் பெற்ற படலம் 8) என்றும் 'ஈனமில் ஜிபுற யீல்வந் திறையவன் சலாமுஞ் சொன்னார்' (நபிப்பட்டம் பெற்ற படலம் 17) என்றும் 'அமரர் கோமான் சலாமுன் கூறியபின்' (தொழுகை வந்த வரலாற்றுப்படலம் 36) என்றும் 'உயர்சலா முரைத்து' (உடும்பு பேசிய படலம் 6) என்றும் 'ஆயிரம் பெயரி

ஞன்றன் சலாமென வருளி' (ஹபீபு மக்கத்துக்கு வந்த படலம் 68) என்றும் 'சலாமென் றோது' (ஹபீபு மக்கத்துக்கு வந்தபட லம் 69) என்றும் 'சலாமென' (மதியையழைத்த படலம் 50) 'சலாமெடுத் துரையெனச் சாற்றி' (மதியை அழைப்பித்த படலம் 122) என்றும் சலாமெடுத் தோதி' (மதியை அழைப்பித்த படலம் 170)என்றும் சலா முரைத்து (தசைக் கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம் 3) என்றும் 'தறுகிட ா தெவர்க்குங் கேட்பச் சலாமெடுத் துரைத்துக் கூறும்' (மானுக்குப் பிணை நின்ற படலம் 16) என்றும் பன்னிய சலாமுங் கூறி' (மானுக்குப் பிணை நின்ற படலம் 64) என்றும் இறை யவன்சலா முரைத்து' (பருப்பத ராஜனைக் கண்ணுற்ற படலம் 21) என்றும் 'ஒடுங்கிநின் ஞெருசலா முரைத்து' (பருப்பத ராஜனைக் கண்ணுற்ற படலம் 27) என்றும் 'விள்ளுதற் கரிதா யொருசலாங் குழறி' (காம்மாப் படலம் 3) என்றும் 'குறைவறச் சலா மெடுத் துரைத்து' (காம்மாப் படலம் 30) என்றும் 'ஓதிக் கையெடுத் துற்றச லாமுரைத்து'(விருந்தூட்டுப் படலம் 18) என்றும் 'முறைமை யின்சலா முரைத்து' (விடமீட்ட படலம் 27) என்றும் 'இதத்தோடு சலாமுங் கூறி' (கபுகாபுப் படலம் 4) என்றும் 'விருப்போடு சலாமுஞ் சொன்னார்' (கபுகாபுப் படலம் 5) என்றும் 'ஒல்லையி னிழிந்த ஞதி யோதிய சலாமுங் கூறி' (கபுகாபுப் படலம் 82) என்றும் 'மனமகிழ் தரசலா முரைத்து' (உகுபான் படலம் 25) என்றும் 'என்சலா முரைமினென' (சல்மான் பாரிசுப்படலம் 21) என்றும் 'வண்மை முகம்மதே சலா மென்றோதி' (பாத்திமா திருமணப் படலம் 30) என்றும் 'பரிவினின் சலாமுங் கூறி' (பாத்திமா திருமணப் படலம் 37) என்றும் இன்பக் கட்டுரை சலாமுங் கூறி ((பாத்திமா திருமணப்படலம் 39) என்றும் 'நவ்விமுன் னெதிர்ந்து பேச நாயக சலாமென் றோதி' (பாத்திமா திருமணப் படலம் 48) என்றும் 'தருமுகம் மதுவுக் கின்ப சலாமெடுத் துரைத்து' (பாத்திமா திருமணப் படலம் 183) என்றும்

'சலாமென் றெதினர்' (பாத்திமா திருமணப்படலம் 202) என்றும் 'சுந்தரம் பெறச்சலாஞ் சொல்லி' (அசீருப் படலம் 33) என்றும் 'சலாம் பகர்ந்து' (அசீருப் படலம் 35) என்றும் 'பிரியமுற் றெருசலா மோதி' (அசீருப்படலம் 40) என்றும் 'சலாஞ் சொலி' (பனீகுறைலா வதைப்படலம் 53) என்றும் (முந்தவென் சலாஞ்சொ லென்று மொழிந்தவன் றன்னை ஏவ' (செயினபு நாச்சியார் கலியாணப்படலம் 18) என்றும் 'ஓங்குகின்ற சலாமுறைத்து' (அந்தகன் படலம் 9) என்றும் அமைந்துள்ளது. தொழுகையை முஸ்லிம்கள் சலாம் சொல்லி முடிப்பர். அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ் மத்துல்லாஹ் என்று இரண்டு முறை இரண்டு பக்கத்துக் கும் திரும்பிக் கூறி முடிப்பது மார்க்க வழக்காறுகும். இக்கருத்திலேயே சலாம் என்னுஞ் சொல் 'ஓங்கிய சலா மைக் கொண்டு முடித்தனர். (தாத்துற்றஹ்ஹாக்குப்பட சலம் 25) என இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. சலாம் என்னுஞ் இச் சொல் அடுக்குத் தொடராகவும் 'ஓடினர் சலாஞ் சலாமென் றுரைத்தனர் பலரு மொன்ருய' (ஒட்டகை பேசிய படலம் 9) எனவும் வந்துள்ளமையைக் காணலாம்.

இம்மை என்னும் பொருளைக் குறிக்க அறபில் துனியா என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. திருக்குர்ஆனில் (2:86, 114) இச் சொல் இதே கருத்தில் வந்துள்ளது. சீருப்புராணத்தில் இச் சொல் 'பெருந்துனி யா . . ' (பாத் திமா திருமணப்படலம் 69) என ஆளப்பட்டுள்ளது. புவி யிடத்துமா கிறத்தும் (தினிலைக்கண்ட படலம் 117). திருக் குர்ஆன் 2:94.

ஹயாத் என்னும் அறபுச் சொல்லுக்கு வாழ்க்கை எனப் பொருள் கூறலாம். திருக்குர்ஆனிலும் (2:85) அதே கருத்தில் இச் சொல் வந்துள்ளது. சீருப்புராணத்தில் 'முகம்மது தனைஹயாத் துடனே' (உகுதுப்படலம் 251) என இச்சொல் இடம் பெற்றுள்ளது. திருக்குர்ஆனிலே மவ்த் என்னும் அறபுச் சொல் மரணத்தைக் குறிக்கின்றது. 'மவுத்தாக்க வுதவி செய்வாய்' (உயை வந்த படலம் 88)

என்பதிலும் 'நல்லவர்க ளெவரேனு மவுத்தான தின்றுள தோ நவில்வீ ரென்றார்' (பனிகுறைலா வதைப் படலம் 53) என்பதிலும் 'மன்னுமிரு விழியாலன் புடனேக்கிப் பார்க் கவவர் மவுத்தா ராஞல்' (பனிகுறைலா வதைப் படலம் 54) என்பதிலும் மவ்த் என்னும் அறபுச் சொல் 'மவுத்து என வந்துள்ளமையைக் காணலாம்.

புதைகுழி அறபு மொழியில் கப்ர் என வழங்கப்படு கிறது. திருக்குர்ஆனிலும் (9:84) அவ்வாறே வந்துள்ளது. அபீ தாலிப் அவர்களின் மனைவி இறையடி எய்திய நிகழ்ச் சியைக் குறிப்பிடும் பொழுது முஸ்லிம்களின் புதைகுழி யைக் குறிக்கும் கப்ர் என்னும் சொல் பயன்படுத்தப்பட் டுள்ளது. பாத்திமா அம்மையார் நல்லடக்கஞ் செய்யப் பட்டமை 'தன்னி லியாவருந் துன்புறக் கபுறில்வைத் தன ரால்' (உசைனர் பிறந்த படலம் 11) என்றும் 'மருவு லாவிய கபுறில்வைத்திட' (உசைனர் பிறந்த படலம் 12) என்றும் 'கபுறட ராமல்' (உசைனர் பிறந்த படலம் 15) என்றும் வருணிக்கையில் கப்ர் என்னும் அறபுச் சொல் தமிழில் கபுறு எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது. விவாக ஒப்பந்தம் அறபில் 'நிக்காஹ்' என வழங்கப்படுகிறது. சில சமயங்களில் மணவிழாவைக் குறிக்கவும் இப்பதம் பயன் படுத்தப்படுகிறது. நிகாஹ் என்னும் அறபுச் சொல் திருக் குர்ஆனிலே பல இடங்களில் (2:235: 237: 4!6: 24:60) வந்துள்ளது. அலி (றலி) அவர்களினதும் பாத்திமா (றலி) அவர்களினதும் திருமணத்தைக் குறிப்பிட நிக்காஹ் என்னும் இந்த அறபுப் பதத்தினை உமறுப்புலவர் உபயோகித்துள்ளார். அலி (றலி) அவர்களுக்கும் பாத்திமா (றலி) அவர்களுக்கும் நிக்காஹ் நிறைவேற்றப் பட்டது, என்னும், இறைவன் கட்டளையை அமரர் கோமான் ஜிபுறீல் (அலை) அவர்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்களுக்குக் கொண்டு வந்தார்கள் என்பதனை உமறுப் புலவர் இவ்வாறு வருணிக்கிருர்!

பொன்னகர் விளக்கிப் பின்னர் புகழ்தர மகரு நாட்டி
யென்னுட னிசுறு பீல்மீக் காயிலுஞ் சாட்சி யேயப்
பன்னரு மலியார்க் கின்பப் பாத்திமா தனைநிக்காகு

முன்னிய தருத்து பாவின் முடிந்தன னிறைவ னன்றே.
(பாத்திமா திருமணப் படலம் 32)

இதனையே மற்றொரு செய்யுளில்

மதுரமென் கனிக்குஞ் சீர்த்தி வாளலி தமக்கு மேன்மை
முதலவன் மணநிக் காகு முடித்தனன். . . .
(பாத்திமா திருமணப் படலக் 65)

என்றும் பிறிதொரு செய்யுளில்

கலிக்கு மாமறை முதலவனிக் காகினைக் கருதி
யலிக்கும் பாவைக்கு முடித்திட வகுமது மகிழ
(பாத்திமா திருமணப் படலம் 111)

என்றும் வருணிக்கிறார் கவிஞர் உமறு தமது சீறப்புராணத்தில். அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் செயினப் (றலி) அம்மையாருக்கும் நிக்காஹ் நிறைவேற்றப்பட்டமையை விண்ணவர் தலைவர் ஜிபுறீல் (அலை) அவர்கள் அவிறித்ததை உமறுப்புலவர் இவ்வாறு விவரிக்கிறார்!

செயினபு நங்கை யார்க்குஞ் செம்மலே யுமக்கும் நிக்கா
குயர்நிலை தனிற்செய் தானென் றுரைத்தனர்
ஜிபுற யீலும்
(செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 12)

முஸ்லிம்களின் விவாக ஒப்பந்தத்தில் முக்கிய அமிசமாக விளங்குவது 'மகர்' என்னும் பணக் கொடுப்பனவு ஆகும். ஒரு கணவன் தனது மனைவிக்குச் செலுத்தவேண்டிய கட்டாயப் பணக்கொடுப்பனவாகத் திருக்குர்ஆன் (2: 229) மகரை விதிக்கிறது. இதனை 'மணமகள்ப் பணம்' என்றும் கூறுவர். மனைவிக்குரிய நன்மதிப்பைக் கண்ணியப்படுத்தும் ஒரு முறைமையாகவும் இந்த மகர்க் கொடுப்பனவு அமையும் என்பர். ஒரு முஸ்லிம் மனைவிக்கு அவர்தம் கணவரிடமிருந்து மகர் கோரும் உரிமை இருக்கின்றது. இவ்வாறு ஹவ்வா(அலை) அவர்கள் ஆதம் (அலை) அவர்களிடம் மகர் கோரியமையும் அது செலுத்தப்பட்டமையும் தலைமுறைப் படலத்திலே (21, 22, 23,) குறிப்பிடப்பட்டுள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கதீஜா (றலி) அவர்களைத் திருமணம் புரியும் போது கொடுக்கப்பட்ட மகர் ஐந்நூறு வெள்

ளிக் காசுகள் என்று உமறுப்புலவர் ஒரு செய்யுளில் இவ்வாறு குறிப்பிடுகிறார்!

இருகிளை யவருஞ் சம்மதித் தைந்நூ
றிரசித மகரெனப் பொருந்திக்
கருமுகிற் கவிகை முகம்மது தமக்குங்
காரிகை கனங்குழை தமக்கு
மருமலர்த் தொடையல் புனையுநிக் காகை
மணத்துடன் முடித்திடு மென்னப்
பெருகிய ஹாஷிம் குலத்தவ ரனைத்தும்
பிரியமுற் றுரைத்தன ரன்றே
(மணம்புரி படலம் 113)

மகர் என்னும் அறபுச் சொல் 'புகழ்தர மகரு நாட்டி' (பாத்திமா திருமணப்படலம் 32) என்றும்

அகலிடம் விளங்கு மைந்நூ றிரசிதத் தரிய காசு
மகரென வலிக்க ணுதி வதுவையை முடிந்ததென் றுரை
(பாத்திமா திருமணப்படலம் 43)

என்றும் 'மகரிர சிதமைந் நூறென்று' (பாத்திமா திருமணப் படலம் 46) என்றும் 'மகரை கேட்டு வருக' (பாத்திமா திருமணப்படலம் 49) என்றும் ''உறுதிநன் மகர்பெற்ற றேனென்று' (பாத்திமா திருமணப்படலம் 51) 'மன்னிய வதுவைக் கான மகரென' (பாத்திமா திருமணப் படலம் 58) என்றும் அமைந்துளளது.

விவாக ஒப்பந்தம் பற்றிய இஸ்லாமிய சட்டத்திலே உபயோகிக்கப்படும் ஒரு பதம் கபூல் என்பது. விவாக ஒப்பந்தம் சம்பந்தமான சமயக் கிரியைகளில் மணமகன் விவாக ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொண்டமைக்கு அறிகுறியாகக் கபூல் என்னும் இந்த அறபுப் பதத்தை உச்சரித்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளுதல் என்பதனைக் குறிக்க திருக்குர்ஆனிலே (3:37) கபூல் என்னும் சொல் வந்துள்ளது. அடியார்களால் அல்லாஹ்தஆலாவிடம் கேட்கப்படும் பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்று நிறைவேற்றுதலும் கபூலாக்கல் என்றே வழங்கப்படுகிறது. கபூல் என்னும் அறபுச்

சொல் 'தூதென வுதித்த முகம்மதின் துஆவைத் துய்யவ னுறக்கபூ லாக்க' (தலைச் கட்டியைப் பெண்ணுருவாக்கிய படலம் 15) என்றும் 'இரு கையேத் தருந்துஆ விரப்ப வினிதிறை யவன்கபூ லாக்க'(உகுபான் படலம் 7) என்றும் 'இரந்த வெல்லா முறக் கபூ லாய தன்றே' (பாத்திமா திருமணப்படலம் 28) என்றும் 'பேரருட் கபூல்' (பத்திமா திருமணப்படலம் 51) என்றும் 'மறுவறக் கபூல்செய் தேன்' (பாத்திமா திருமணப்படலம் 59) என்றும் சீறாப்புராணத் தில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம்.

கபூலாக்கப்படுவது—ஏற்றுக்கொள்ளப்படுவது துஆ—பிரார்த்தனை மாத்திரம் அன்று. அடியவர்களின் பாவமன்ப்பும் அல்லாஹ்வினுல் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரியதாகும். பாவமன்னிப்பு அறபு மொழியில் தவ்பா எனப்படுகிறது. தவ்பாச் செய்தால் அல்லாஹ் அதனை ஏற்றுக் கொள்வான். கபூல் செய்வான். திருக்குர்ஆனிலும் தவ்பா (42:25) குறிப்பிடப்படுகிறது. அல்லாஹ்விடம் ஆதம் (அலை) அவர்களும் தவ்பா செய்தார்கள். அல்லாஹ்வும் அந்தத் தவ்பாவினை ஏற்றுக் கபூல் செய்தான். ஆதம் (அலை) அவர்களும் ஹவ்வா (அலை) அவர்களும் தவ்பா கபூல் செய்யப்பட்டதன் பலனாக அறபா மலையில் ஒன்று கூடினார்கள். இக்கருத்துக்களே,

நீதியே யெனவும் பலதரந் தவுபா நிகழ்த்தியும்...
சோதியே தவுபாத் தனைக்கபூ லாக்கென்று....
(தலைமுறைப்படலம் 34)

என ஒரு செய்யுளிலும்

இறைவனு மாதஞ் செயுந்தவு பாவுக் கிசைந்தினி
துறக்கபூ லாக்க
. . . .
மறுமதி யகடு தொடுமுடி யறபா மலையினி லிருவருஞ்
சேர்ந்தார். (தலைமுறைப் படலம் 35)

என மற்றொரு செய்யுளிலும் அமைந்துள்ளன. 'தெரிதரத் தவுபாச் செய்தால் தீவினை மறுப்பேன்' (கபுகாபுப் படலம் 49) என்பதிலும் 'காத லாந்தவு பாக்கபூ லாயது' (பனீ

குறைலா வதைப்படலம் 22) என்பதிலும் தவுபா என்னும் அறபுச் சொல் இடம் பெற்றுள்ளமையக் காணலாம்.

அல்லாஹ்வின் பாதையில் என்பது 'பீஸபீலில்லாஹ்' எனப்படும். திருக்குர்ஆனிலும் (2: 154) இந்தச் சொல் இடம்பெற்றுள்ளது. அல்லாஹ்வின் பாதையில் என்பது சுருக்கமாக பீஸபீல் என்று தீனிலே கண்ட படலத்திலும் (19) ஈமான்கொண்டவர்கள் ஹபஷா ராச்சியத்துக்குப் போந்த படலத்திலும் (3) வத்தான் படைப்படலத்திலும் (9, 47) உகுதுப்படலத்திலும் (116, 167) உறைய வந்த படலத்திலும் (82) பனீகுறைலா வதைப்படலத்திலும் (3) இடம்பெற்றுள்ளது.

கவுல் என்பது மற்றொரு அறபுச் சொல். இது ஒரு கூற்று என்றும் ஒரு வாக்குறுதி என்றும் ஓர் ஒப்பந்தம் என்றும் பொருள் தரும். (திருக்குர்ஆனிலே 4:5, 8, 9, 148) இந்த அறபுச் சொல் இக்கருத்துக்களிலே பல தடவைகள் வருகின்றது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனாவி லிருந்து உம்ருச் செய்யப் போன பொழுது ஹுதைபியா என்னும் தலத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் மக்கா குறைசிக் காபிர்களுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற் பட்டது. இந்த உடன் படிக்கையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது உமறுப்புலவர் உடன்படிக்கையைச் சுட்ட 'கவுல்' என்னும் அறபுச் சொல்லையே இவ்வாறு உபயோகித் துள்ளார்.

சொல்லிய விறையா மல்லா தூதரா முகம்ம தென்னுங்
கல்விசிருடைய வள்ளல் கவுல்கொடுத் திட்ட வாறென்
றெல்லையி லெழுதுமென்ன வுரைத்தனர்...

(உமுறுவுக்குப்போன படலம் 81)

இவ்வாறு எழுத மறுத்ததும் அது திருப்பி எழுதப்பட்ட மையை இவ்வாறு விவரித்துள்ளார்.

அரிதோர் புகழ்சேர் வண்ண மயப்துல்லா முகம்ம
தென்போர்
பரிவொடு கவுல்தர மீந்த படியுமு ருச்செய் தேக

வரிசையார் மக்கத் துள்ளோர் வழிவிடக் கடவ
தென்று

தெரிவுறத் தீட்டு மென்றூர். . .

(உமுறுவுக்குப்போன படலம் 83)

மற்றெரு பாடலில் மக்காக் காபிர்களும் மதீனத்து முனுபிக் குகளும் ஒப்பந்தம் செய்து கொண்டமை 'திக்கறிய வேகவுல் கொடுத்தனர் திறத்தோர்' (சுகுருப் படலம் 12) என வந் துள்ளது. இந்த கவுல் என்னும் அறபுச் சொல் முஸ்லிம் மக் களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் அவ்வளாவாகப் பயன்படுத் தப்படுவதில்லை என்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

சீறுப்புராணத்தில் இடம்பெற்றுள்ள ஏனைய அறபுச் சொற்களை, இனி, ஒவ்வொன்ருக எடுத்துக் கொள்வோம். அவை எவ்வாறு ஒவ்வொரு படலத்திலும் அமைந்துள்ளது என்பதனைச் சுருக்கமாக ஆவராய்வாம்.

அக்கீக்கா — பிள்ளை பிறந்த பின்னர் தலை முடியைக் களைந்து ஆடு குறுபான் கொடுத்தலைக்குறிக்கும். கொறியி
ரண்டறுத் துடனக்கீக் காவினைக் கொடுத்து (அசனூர் பிறந்த படலம் 17)

அதபு — நல்லொழுக்கம், உள்ளக்கட்டுப்பாடும் பழக்க வழக்கக் கட்டுப்பாடும். அறிவத பறமுறை, (அலிமா முலையூட்டுப் படலம் 1) அதபறி வென்ப தில்லா (அபீறுபிகு வதைப்பட லம் 3) அதபுடனந் நபியிடத்தி னல்கு மென, (அபூதல்கா விருந்து படலம் 3) அருமையி னெடுங்கி யஞ்சி யதபுடனின்று ரன்றே. (செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 19)

அதாபு — தண்டனை (திருக்குர்ஆன் 2:96) கவினற அதாபென் றெருபிணி பிடிக்கும் (தீனிலைகண்ட பட லம் 120).

அர்ஷி— —இறைவனின் இருக்கை. கடவுள் வாழ்த்து 4, நபியவதாரப்படலம் 19, பனீகுறைலா வதைப்பட லம் 53, செயினபு நாச்சியார் கலியாணப் படலம்

9, அர்ஷு என்பதும் குர்ஸி என்பதும் இரட்டைச் சொற்கள் போன்று ஏறக்குறைய எல்லாச் சந்தர்ப்பங் களிலும் ஆளப்பட்டுள்ளமை ஈண்டு குறிப்பிடத் தக் கது.

அவுலியா — மெய்ஞ்ஞானி. கடவுள் வாழ்த்து 16

அறபாத் — மக்கமா நகருக்கு அணித்தாயுள்ள ஒரு குன்று. ஹஜ்ஜின் போது இங்கே தரித்தல் வேண்டும். தலைமுறைப்படலம் 35.

அன்ஸார் — மதீனு வாசிகள். முகம்மது நபி (ஸல்) அவர் களுக்கு உதவி புரிந்தோர். மதீனத்தார் ஈமான் கொண்ட படலம் 18, மதீனம் புக்க படலம் 18, 22, 41, 60 உகுபான்படலம் 8, வத்தான் படைப் படலம் 15, பாத்திமா திருமணப்படலம் 34, 129, பதுறுப்படலம் 13, 80, 254, அபீஜுபிகு வதைப் படலம் 6, சுகுருப்படலம் 17, பனீகுறைலா வதைப் படலம் 10, சல்மா பொருத படலம் 2.

அஸா — ஊன்றுகோல் போன்றது. கபுகாபுப் படலம் 44, கருகுவதைப்படலம் 39.

ஆலம் — எல்லா உலகங்களும். ஆலநந் நபி ஈத்தங்குலை வரவழைத்த படலம் 2

ஆசுறா — ஆசுறா மாதம் என்று வழங்கும் முஹர்றம் மாதத் தில் அனுடிக்கப்படும் நோன்பு ஆசுறா நோன்பு என வழங்கப்படும். உகுபான் படலம் 9.

இல்லல்லாஹ் — இங்கே அல்லாஹ்வைக் குறிக்க உபயோ கப்படுத்தப்பட்டுள்ளது. இல்லல்லாவையும் உகுதுப் படலம் 241

இறுமி — றூமிகள். ஒப்பெழுதித் தீர்த்த படலம் 30.

கசறு — கஸ்றுத் தொழுகை. தொழுகைகளைச் சுறுக்கித் தொழுதல். உசைனுர் பிறந்த படலம் 1, தாத்துற்றஹ் ஹாக்குப் படலம் 25.

ஒசீவனம் — உணவைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட் டுள்ளது. செயினபு நாச்சியார் கலியாணப்படலம் 28

கபுசு — பாதரட்சை, காலணி. மதினையழைத்த படலம் 12, ஈத்தங்குலை வரவழைத்த படலம் 2, பாத்திமா

திருமணப்படலம் 213, கஃபு வதைப்படலம் 39, உகுதுப்படலம் 69.

கயிறு — ஹயிர் என்னும் அறபுச் சொல்லே கயிறு என வந்துள்ளது. நன்மை என்னும் பொருளிலே ஹய்ர் என்பது கயிறு என வந்துள்ளது. முறைசீக்குப்படலம் 51.

கலா — உரிய நேரத்தில் ஒரு தொழுகையை நிறைவேற்ற முடியாமல் போய் விட்டால் அது கலாவாகி விட்டது என்று முஸ்லிம்கள் அழைப்பர். அஸ்ர் தொழுகை கலாவானது இங்கு குறிப்பிடப்படுகிறது. உயை வந்த படலம் 89.

கலாசு — முடிவுற்றது என்னும் பொருளில் இச் சொல் ஆளப்பட்டுள்ளது. விடுதலை பெற்றது என்பதையும் குறிப்பதாக அமைந்துள்ளது. தலைமுறைப்படலம் 44

காபூறு — அம்பறுத்தூணியின் பெயர். பதுறுப்படலம் 19.

காமத்து — அதான் என்னும் பாங்கு சொல்லி முஸ்லிம் களைத் தொழுகைக்கு அழைத்த பின்னர் உடனடியாகத் தொழுகை ஆரம்பிக்கப்போகிறது என்பதை அறிவிக்கவே காமத்து ஒலிக்கப்படும். அசனார் பிறந்த படலம் 14.

கிஜுறத் — மக்கமா நகரிலிருந்து மதீன மா நகருக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சென்ற நிகழ்ச்சியே ஹிஜ்றத் என வழங்கப்படுகிறது. அந்த நிகழ்ச்சி யிலிருந்தே முஸ்லிம் ஆண்டு ஆரம்பிக்கிறது. உசனார் பிறந்த படலம் 1.

குப்பாயம் — ஒரு வகையான உடுப்பு. கழுத்திலிருந்து பாதம் வரை அணியும் ஓர் ஆடை வகை. மணம்புரி படலம் 35, மதியையழைப்பித்த படலம் 10, பாத்திமா திருமணப்படலம் 199, 203, 205, உசைனார் பிறந்த படலம் 13.

கூறுலீன் — விண்ணக மகளிர். நபியவதாரப்படலம் 79, செயினபு நாச்சியார் கலியாணப்படலம் 11.

சக்பு — ஒரு குதிரையின் பெயர். பதுறுப் படலம் 21.

சபூகு — தலைச் சோடு, தலைச்சீரா, தலைக்கவசம் எனப்

பொருள் படும். பதுறுப்படலம் 16, உகுதுப் படலம் 65.

சறகு — சன்மார்க்கச் சட்டம். கடவுள் வாழ்த்துப்படலம் 9, ஈமான் கொண்டவர்கள் ஹபஷாராச்சியத்துக்குப் போந்த படலம் 7, மதீனம் புக்க படலம் 35.
றுசபால் — கால் சட்டை. பதுறுப்படலம் 16.
சித்றத்துல் முந்தஹா — விண்ணுலக மரம். பாத்திமா திருமணப்படலம் 188.
சூமன் — இப்லீசைக் குறிக்கும் ஒரு சொல். காம்மாப் படலம் 3, சவீக்குப் படலம் 6, அபீறுகு வதைப் படலம் 2, உகுதுப்படலம் 105, 228, 229, கஃபு வதைப்படலம் 4.
தருத்துபா — ஒழுங்காக, உரிய முறைப்படி என்று பொருள் படும். பாத்திமா திருமணப்படலம் 32.
திக்ர் — நினைவு கூறுதல் என்பது பொருள் (திருக்குர்ஆன் 2:200, 3:58) நகரப்படலம் 21.
திரகம் — ஒரு வெள்ளிக் காசு. அசீறுப்படலம் 2, பத்னுன் னகுலாப்படலம் 12, 13, 252
துல்புக்காறு — வாளின் பெயர். பதுறுப்படலம் 242.
நசுறுனி — கிறித்தவர்களைச் சுட்டப் பயன்படுத்தப்படும் அறபுச் சொல். இலாஞ்சனை தரித்த படலம் 48, 49, 51 புகைறு கண்ட படலம் 16, 26, 41, 43, பாபுதை போந்த படலம் 29, ஷாம் நகர் புக்க படலம் 36, கரம்பொருத்து படலம் 66, ஊசாவைக் கண்ட படலம் 16.
நபி — தீர்க்கதரிசி என்று பொருள்படும். கட்வுள் வாழ்த்துப் படலம் 17, நகரப்படலம் 17, தலைமுறைப் படலம் 11, 52, நபியவதாரப்படலம் 1, 87—92, பாதைபோந்த படலம் 31, நபிப் பட்டம் பெற்ற படலம் 1, 53, 54, தொழுகைவந்த வரலாற் றுப்படலம் 8, 12, 25, 35, 39, தீனிலை கண்ட படலம் 1, 102, 121, 157, உமறு கத்தாபீமான் கொண்ட படலம் 1, 58, 90, 92, உடும்பு பேசிய

படலம் 1, 4, 7, 8, 9, 15, 18, 19, 21, 34, 35, 36, 39, மதியை யழைப்பித்த படலம் 30, 35, 50, 84, 103, தசைக்கட்டியைப் பெண்ணு ருவாக்கியப்படலம் 1, 4, 35, ஹபீபுராஜா வரிசை வரவ்டுத்த படலம் 1, 18, 37, ஹபஷா ராச்சியத் துக்குப் போந்த படலம் 1, 8, 36, மானுக்குப் பிணை நின்றபடலம் 61, ஈத்தங்குலை வரவழைத்த படலம் 1, 2, 26, 31, புத்து பேசிய படலம்1 , 2, பிராட்டியார் பொன்னுலகுபுக்க படலம் 13, 14, 16 பருப்பத ராஜனை கண்ணுற்ற படலம் 8, அத்தாசு ஈமான் கொண்ட படலம் 9,

பக்கீர் —தமிழில் இச்சொல் பக்கீறு என்றும் வழங்குகிறது. ஊர்சுற்றித் திரிபவர் என்பதையும் குறிக்கும். இவர்கள் துறவிகள் போல் காட்சி அளிப்பர். திருக்குர்ஆன் 3:181, 4:6, பாத்திமா திருமணப் படலம் 197, 200, 204.

பயித்து — இசையோடு பாடக்கூடிய அறபுப் பாடல் இவ்வாறு அழைக்கப்படுகிறது. திருமண விழாக்களில் ஓதப்படும் இவை மணப் பைத்துக்கள் என வழங்கப் படுகின்றன. பாத்திமா திருமணப்படலம் 109, பதுறுப்படலம் 248, கந்தக்குப்படலம் 48.

பலாய் — கேடு என்னும் பொருளில் பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் பம்யன்படுத்தப்படுகிறது. திருக் குர்ஆனிலும் ((2:49: 14:6) இச் சொல் வந்துள்ளது. கடுஞ் சோதனை என்றும் இச்சொல் பொருள் படும். உம்மி மகுபதுப் படலம் 24.

பாரிசு — பாரசீகம். ஒப்பெழுதித் தீர்த்த படலம் 30, சல்மான் பாரிசுப்படலம் 4.

பிருதவுசு — சுவர்க்கலோகம். உசைனுர் பிறந்த படலம் 15

மத்ஹப் — இஸ்லாத்தில் உள்ள ஒரு பிரிவு. இமாம் ஒருவரால் நிறுவப்பட்ட பிரிவு. கடவுள் வாழ்த்து 15.

மலக்கு — மலாயிக்கா என்னும் அமரர்களைக் குறிப்பிடு கிறது. தலைமுறைப்படலம் 15, மதியை அழைப் பித்த படலம் 151, பருப்பத ராஜனைக் கண்ணுற்றப்

படலம் 22, செய்நபுநாச்சியார் கலியாணப்படலம் 9, 10.

மகுசறு — மஃஷர் என்னும் அறபுச் சொல்லே (திருக்குர் ஆன் 45:33,) இவ்வாறு இடம்பெற்றுள்ளது. இறுதித் தீர்ப்பு நாளன்று எல்லோரும் அவரவர் நன்மை தீமை பற்றி விசாரிக்கப்படும் திறந்த வெளி. பாத்திமா திருமணப்படலம் 62.

முர்ஸலீன் — நபிமார்களுள் முறுஸலான நபீமார்களைக் குறிக்கிறது. கடவுள் வாழ்த்துப்படலம் 7.

முஹாஜிர் — நாட்டை விட்டுச் சென்றவர்கள். மக்க மா நகரைத் துறந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீன மா நகருக்குச் சென்ற ஹிஜ்ரத்தின்போதும் அதன் பின்னரும் அதே காரணத்துக்காக அங்கு சென்று வரும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவரும்மக்க மா நகரிலிருந்து மதின மா நகருக்குச் சென்று குடியேறிவர்களாவர். மதீனம் புக்க படலம் 22, 23, 41, 63, 65, உகுபான்படலம் 4, 5, 8, வத்தான் படைப்படலம் 15, 32, 35, 40 பாத்திமா திருமணப்படலம் 34, 129, அசீறுப் படலம் 24, பதுறுப்படலம் 13, 254.

யத்தீம் — இவ்வறபுச் சொல் எத்தீம் என்றும் வழங்குகிறதி யத்திம் என்றும் (6!152) யத்தாமா என்றும் (2:73, 177) திருக்குர்ஆனிலே வந்துள்ளது. அலிமா முலை யூட்டுப் படலம் 34, 38, இது அனுதை என்னும் பொருளைச் சுட்டிக்கொண்டிருக்கிறது.

றசூல்—தூதர். அல்லாஹ்வினுல் மனிதனின் நன்மைக்காக அனுப்பப்பட்ட இறை தூதர்கள். அவர்களுள் கடைசியாக வந்தவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். நபிப்பட்டம் பெற்ற படலம் 33, (இறசூலுல்லா) உத்துபா வந்த படலம் 19, பதுறுப்படலம் 25, தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 10, முறைசீக்குப் படலம் 8, ஓுமாமீமான் கொண்ட படலம் 1, செயினபு நாச்சியார் கலியாணப்படலம் 1, 7, ஒட்டகை பேசிய படலம் 16, 17, கவுலத்தைவிடுடுக்கூடின

படலம் 4, 11, உமுருவுக்குப் போன படலம் 6, 13, 69, 89.

றப்பு — இவ்வறபுச்சொல்லுக்குப் படைத்து, அளித்துக் காப்பவன் என்று பொருள். திருக்குர்ஆனிலே பல இடங்களில் இச்சொல் வந்துள்ளது. (3:124) தலைமுறைப்படலம் 34, தீனிலைகண்ட படலம் 98,

றஹ்மத் — பேரருள் என்பது இதன் பொருள். திருக்குர் ஆன் 2:105, நபியவதாரப்படலம் 102.

ஜலால் — தலைமுறைப்படலம் 3.

ஜமால் — தலைமுறைப்படலம் 3.

ஜன்னத் — சுவர்க்கம் திருக்குர்ஆன் 2:35. மணம்புரி படலம் 77.

ஸஜதா — சுஜூது செய்தல். திருக்குர்ஆன் 2! 34. அசிருப்படலம் 36, 38.

ஸுஹுப் — அல்லாஹ்வின் கட்டளைகள். திருக்குர்ஆன் 43:36. நபிமாருக்கு அருளப்பட்டவை. தலைமுறைப் படலம் 37! 42

ஷபா(அத் — மன்றுட்டம். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவர்களின் உம்மத்துக்காக இறுதித்தீர்ப்பு நாளன்று அல்லாஹ்விடம் கேட்கும் பாரிய மன்றுட்டம். பாத் திமா திருமணப்படலம் 51, 59.

ஹக்கன் — உண்மையானவன் என்பது இதன் பொருள். அல் ஹக் என்பது அல்லாஹ்வின் அழகுத் திருநாமங் களுள் ஒன்று. திருக்குர்ஆன் 2:26. கஃபத்துல்லா வை நோக்கித் தொழுத படலம் 4, முறைசீக்குப்பட லம் 28, கவுலத்தை விட்டுக் கூடின படலம் 2.

ஹபீப் — தோழர் என்று பொருள் படும். நபிகள் பெரு மானுரைக் குறிக்க உபயோகிக்கப்படும் ஒரு சொல். கடவுள் வாழ்த்துப்படலம் 5, தலைமுறைப்படலம் 3, இசுறு காண்படலம் 33, 54, உமறுகத்தாபு ஈமான் கொண்ட படலம் 58, மானுக்குப் பிணைநின்ற பட லம் 13, கபுகாபுப் படலம் 71, பாத்திமா திருமணப் படலம் 167, பதுறுப்படலம் 113, உகுதுப்படலம் 77, 121, 180, 212, 241, கஃபுவதைப்படலம் 52, 71,

தாத்துற்றஹ்ஹாக்குப்படலம் 83, முறைசீக்குப்படலம் 9, கந்தக்குப்படலம் 63, உயைவந்த படலம் 32, பனீகுறைலாவதைப்படலம் 13, 23, செயினபு நாச்சியார் கலியாணப்படலம் 7, மழையழைப்பித்த படலம் 20, அந்தகன் படலம் 3, உமுறுவுக்குப் போன படலம் 32, 40, 69, 109.

ஹலிபு — ஒரு வாளின் பெயர். பதுறுப்படலம் 17.

சீறாப்புராணத்தில் இடம்பெற்றுள்ள அறபுச் சொற்களுள் முக்கியமான ஓர் இடத்தை வகிப்பது அல்லாஹ் என்னும் சொல்லேயாகும். இச் சொல்லை வேறொரு மொழியில் மொழிபெயர்க்க முடியாது. எனவே அந்தச் சொல் எல்லாம் வல்ல இறைவனைக் குறிக்க அவ்வாறே உபயோகிக்க வேண்டி இருக்கிறது. அல்லாஹ்வின் சிறப்பியல்புகளையும் அவனது அழகுத் திருநாமங்களையும் பெருமளவில் உமறுப்புலவர் தமது சீறாப்புராணத்தில் வருணித்துள்ளார். அல்லாஹ்வின் சிறப்பியல்புகளைத் தமிழில் வருணித்துள்ள அதே வேளையில் அல்லாஹ் என்னும் சொல்லையும் பொருத்தமான முறையில் பயன் படுத்தி உள்ளார். சில சமயங்களில் அல்லாஹ்வின் திருத்தூதர் என்பதனை விளக்குமுகமாக ('நெடியவ னிறசூலுல்லா' (மானுக்குப் பிணை நின்ற படலம் 12) என்றும் 'நான வாச, மெய்யப்படு மிறசூ லுல்லா விரும்பிநீராடு முன்னர்' (கவுலத்தை விட்டுக் கூடின படலம் 11) என்றும் வந்துள்ளது. ஏனைய சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வின் தனித்தன்மையை விளக்கவே அல்லாஹ் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. அத்தன்மையான சந்தர்ப்பங்கள் வருமாறு:

அல்லறச் சிறந்தவரி யல்லாவென் ெறாருபெயரின்ன
(ஒப்பெழுதித் தீர்த்த படலம் 38)

அழகிய தெவையுமல் லாவுக் காகவே
விழைவுடன் கொடுத்திட வேண்டும். . . . . .
(பாத்திமா திருமணப் படலம் 206)

இல்லல் லாவையும் ஹபீபையு முளத்தினி விருத்தி
(உகுதுப்படலம் 241)

பொல்லாத வஞ்சகரைத் தெளியாத
மனத்தவரைப் புன்மை யோரைக்
கல்லாத கயவரெனுங் குபிரவரை
வேகமறத் களைந்து நாளு
மெல்லாருந் தொழுமரிய தீனைவளர்த்
துறுசீய மெற்கீந் தாள்வாய்
அல்லாவே அல்லாவே யென்றிரங்கிப்
புகழ்ந்து புகழந்த் தறைந்தார் மன்னே
(உயை வந்த படலம் 93)

செய்யுங் காரிய மீதன்றி யேசெலும்
வைய மீதில் வழக்கொன்று மில்லெனத்
துய்ய சலீது சொலநபி யில்வுரைக்
கைய மில்லையல் லாவரு ளீதென்றூர்.
(பனீ குறைலா வதைப் படலம் 35)

....

திதிலா மறைப்பொருளாய்த் திகழொளியாய்
நிறைந்த அல்லாச் செகத்தின் மேற்றன்
றூதரா யுமையிருக்க வனுப்பினதும்........
(ஹுமாம் ஈமான் கொண்ட படலம் 5)

வல்லவர் தூதி ரல்லா மறைமொழிப் படியே யன்றிக்
கல்லக ஞாலந் தன்னிற் கடிமணம் விரும்பே னென்றூர்
(செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 6)

தேறிய குருனு யத்தின் செய்தியே தென்னி லல்லா
மீறிய அறுஷி லேதான் மிகுமொலி யாக நின்று....
(செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 9)

அருமறைப் பொருளா மல்லா வருளிய படியே வந்து
திருமணம் புரிதற் குள்ள சிறப்பெலா மகிழ்ந்து செய்ய
(செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 10)

அரியவன் றூத ரான அகுமதின் வடிவை நீண்ட
விருவிழி யார நோக்கி யிதயத்தின் மகிழ்ச்சி கூர்ந்து
திருமலர் வதனங் கோட்டிச் செவ்விய நிறைபோர்த்
தல்லா
வொருவனை யெண்ணிக் கற்பி னெல்கியாங் கொருங்கு
நின்றார்

(செயினபு நாச்சியார் கலியாணப் படலம் 15)

சொல்லிய விறையா மல்லா தூதரா முகம்ம தென்றும்

(உமுறுவுக்குப் போன படலம் 81)

இனி, சீறாப்புராணத்தில் சிறப்பாக அமைந்துள்ள பாரசீக மொழியிலிருந்து பெறப்பட்ட சொற்களை எடுத்துக் கொள்வோம். தமிழ் பேசும் முஸ்லிம்கள் அல்லாஹ்வை அச்சொல்லைப் பயன் படுத்தாத சந்தர்ப்பங்களில் ஆண்டவன், இறைவன், நாயகன் முதலிய பல சொற்களை உபயோகிப்பர். அவ்வாறே பாரசீக மொழியில் கடவுளை 'குதா' என்று குறிப்பிடப்படுகிறது. எல்லாம் வல்ல இறைவன் என்னும் பொருளில் பாரசீக மொழியில் 'குதை' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. பரம்பொருள், சுயம்புவானவன் என்னும் பொருள்களும் தருவதாக இந்த குதா என்னும் பாரசீகச் சொல் அமைந்துள்ளது. உறுது மொழியிலும் இந்தச் சொல் இதே கருத்தில் உபயோகிக்கப் படுகிறது. அறபு மொழியில் அல்லாஹ் பாரசீக, உறுது மொழிகளில் குதா வாகும். உமறுப்புலவரும் அல்லாஹ்வைக் குறிக்க குதா என்னும் இந்த உபயோகத்தையே தமது சீறாப்புராணத்தில் மேற்கொள்கிறார். சாதாரணமாக நாம் தும்மும் பொழுது பக்கத்திலிருப்பவர்கள் அதற்குப் பதில் சொல்லுவது போல் அல்ஹம்துலில்லா என்று கூறுதல் வேண்டும். முதன் முதல் ஆதம் (அலை) அவர்களைப் படைத்து உயிர் ஊட்டப்பட்ட பொழுது அவர்கள் தும்மினார்கள். குதாவாகிய அல்லாஹ் பதில் சொன்னதாக அமைத்து உமறுப்புலவர் இவ்வாறு பாடியுள்ளார்.

துண்டத்தி னவி தோன்றத் தும்மலுந் தோன்றிப்
பின்பு

விண்டுரை பகரு நாவின் மேவியல் ஹம்தை யோதிக்
கொண்டபின் பிரத்தி சொன்ன குதாதிரு வசன
நோக்கி
யண்டர்நா யகனைப் போற்றி யாதமென் றுரைப்ப
தானுர் (தலைமுறைப்படலம் 9)
கணித்தன வருக்க வொண்ணுக் கடவுளே குதாயே...
(தலைமுறைப்படலம் 10)

ஜிபுரீல் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் அருளப்பட்டமை யை அண்ணல் (நபி (ஸல்) அவர்களுக்கும் அறிவித்ததை உமறுப்புலவர் இவ்வாறு பாடியுள்ளார்.

மண்டலம் புரக்குஞ் செங்கோன் முகம்மதின்
வதன நோக்கி
விண்டலம் பரவும் வேத நபியெனும் பட்ட நும்பாற்
கொண்டலே குதாவின் றீந்தா னெனுமொழி கூறி..
(நபிப்பட்டம் பெற்ற படலம் 21)

இங்கே குதா என்னும் சொல் அல்லாஹ்வைக் குறிக்க உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மற்ெருரு சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் தனித்தன்மைகள் வருணிக்கப்பட்டுள்ளன. நபிகள் நாயமம் (ஸல்) அவர்கள் அடிக்கடி அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதனை வருணிக்க வந்த உமறுப்புலவர் அங்கும் குதா என்னும் பாரசீகச் சொல்லைப் பயன்படுத்துகிறுர்.

ஆதிநா யகனே யழிவிலா தவனே
யளவருந் திடற்கரும் பொருளே
சோதியே யெவையி னுவமையில் லவனே
தொடரின்ப துன்பமற் றவனே
நீதியே குபிரர் தெளிதரும் படியா
லினைத்தவை முடித்திடென் றுருகிக்
கோதற மனமும் வாக்குமொன் றுகிக்
குதாதனை யடிக்கடி புகழ்ந்தார்.
(மதியை அழைப்பித்த படலம் 150)

குதா என்னும் பாரசீகச் சொல்,

குதாதிரு வருளினுல்...... (மதியை அழைப்பித்த படலம் 157) என்றும்

குதாதனை வணங்கி யேத்தி (மதீனத்தாரீமான் கொண்ட படலம் 13) என்றும்

........வேறு படைக்கலங் காணகி லார்கைக்
கொண்டன ரீத்தம் பாளை யீர்க்கினை குதா
தன் றூதர் (உகுதுப்படலம் 190) என்றும்

வந்துள்ளமையைக் காணலாம்.

பாரசீக மொழியில்ருந்து தமிழுக்கு வந்துள்ள ஒரு சொல் தமிழில் 'பருமான்' எனப் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் கட்டளை என்னும் பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களிலே பருமான் என்னும் சொல் அல்லாஹ்வின் தெய்வீகக் கட்டளையைக் குறிப்பிடவே ஆளப்பட்டுள்ளது. ஆங்கிலமொழியிலுள்ள (FIRMAN) பெர்மன் என்னும் சொல் பாரசீக மொழியிலிருந்தே பெறப்பட்டுள்ளது. சீருப் புராணத்தில் உள்ள பருமான் என்னும் பாரசீகச் சொல்லும் அல்லாஹ்தஆலாவிடமிருந்து ஜிப்றீல் (அலை) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்ர்களுக்கு கொண்டுவந்த கட்டளை களையே குறிப்பிடுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுகக்கு நபிப்பட்டம் வழங்கப்பட்டமையையே உமறுப் புலவர் இவ்வாறு வருணிக்க ஆரம்பிக்கிறுர்:

சோதியா யெவைக்கு முள்ளுறைப் பொருளாய்த்
தோற்றமு மாற்றமுந் தோன்ரு
வாதிதன் பருமான் கொண்டினி தோங்கி
யமரிழிந் தமரருக் கரசன்
மேதினி புகுர்து முகம்மது தமக்கு
விளங்கிய நபியெனும் பட்டங்
கோதறக் கொடுப்பத் தீன்பயிர் விளைத்த
கூறெலாம் விரித்தெடுத் துரைப்பாம்
(நபிப்பட்டம் பெற்ற படலம் 1)

நபிகள் பெருமான் (ஸல்) அவவர்களுக்கு முதன் முதலில் திருக்குர்ஆன் அருளப்பட்டதிலிருந்து இஸ்லாம் இரகசிய மாகவே போதிக்கப்பட்டு வந்தது. பகிரங்கமாக அனைவருக் கும் இஸ்லாத்தைப் போதிக்குமாறு இட்ட அல்லாஹ்வின் கட்டளையை அமரர் கோமான் ஜிபுரீல் (அலை) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்தமையை உமறுப்புலவர் இவ்வாறு வருணிக்கிறார்:

சீதவென் கவிகை நீழ றிருத்திய சூரிசி லானோர்
தூதென நபியின் பட்டந் துலங்கிய நான்காமாண் டில்
வேதம்நல் லணக்க மியார்க்கும் விரித்துற விளக்கு
மென்ன
வாதிதன் பருமான் மேற்கொண் டமரர்கோனுரைத்
துப் போனார் (தீனிலை கண்ட படலம் 1)

மற்றொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறே அமைந்துள்ளது. ஜிபுறீல் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளையைக் கொண்டு ஒரு நொடிப் பொழுதில் வந்தார்கள். வந்ததும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் அளவிலாமகிழ்ச்சி அடைந் தார்கள். இஸ்லாமிய போதனைகளை ஏற்காதவர்களான இருளை அகற்றத் தோன்றிய சூரியனாக இருந்த அதே சமயம் அந்த சூரியன் தோன்ற மலர்ந்த தாமரையை ஒத்த முகத்தை உடையவர்களாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மகிழ்ச்சி அடைந்து விளங்கினார்கள். இக்கருத்துக்களே இங்கு வருணிக்கப்பட்டுள்ளன.

அமரர்கோ னினைய மாற்ற மாதிதன் பருமான்
மேற்கொண்
டிமைநொடிப் பொழுதிற் றோன்றியியம்பியதிணங்
கா ரான
திமிரவெம் பகைக்குத் தோன்றுந் தினகர னாகப் பூத்த
கமலவொண் வதனச் செவ்வி முகம்மது களிப்புக்
கொண்டார்.
(ஹபீபு மக்கத்துக்கு வந்த படலம் 76)

இம் மூன்று செய்யுட்களிலும் அல்லாஹ்வின் கட்டளை என் பதனை உறுதிப்படுத்தும் முமகாக 'ஆதிதன் பருமான்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

அறபு மொழியில் உள்ள நபி, றசூல் என்னும் பதங்களுக்குப் பதிலாகப் பாரசீக மொழியிலே 'பயகாம்பர்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சொல்லும் முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் ஒரு தனி இடத்தை வகிக்கிறது. சீறாப்புராணத்திலும் பயகாம்பர் எனும் இந்தப் பாரசீகச் சொல் ஆளப்பட்டுள்ளது. இந்தப் பயகாம்பர் என்னும் சொல்லின் ஆட்சி முக்கியமாக ஹிஜ்றத்துக் காண்டத்திலேதான் பயன் படுத்தப்பட்டுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. எப்பொழுதும் இனிமையாக ஓதப்படுவதுடன் இனிமையானதன்மையையும் ஓதுபவர்களிடையே ஏற்படுத்தும் திருக்குர்ஆன் எனும் திருமறையாகும். இந்த திருமறையின் பயகாம்பர் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளார்கள்.

பண்டரு மறைப்பய காம்பர் மாமுகங்
கண்டனர் பதத்தினிற்கரங்க டேய்த்தினர்
(மதீனம் புக்க படலம் 28)

உகுதுப் போரின் போது குதாதா (றலி) அவர்களுக்கு அறிவுறை பகர்ந்தார்கள் பயகாம்பர் முகம்மது (ஸல்) அவர்கள் என்பது இவ்வாறு அமைத்துள்ளது:

வெற்றி யுணர்ந்தீர் கற்று மறிந்தீர் மிகைபாவக்
குற்ற முணர்ந்தீர் தீனிலை முற்றுங் குடிகொண்டீர்
துற்றிய காயம் பீஸபீல் நீருந் துயரெய்தப்
பற்றுதல் வேண்டா மென்றனர் வேதப்
பயகாம்பர் (உகுதுப்படலம் 167)

சுகுறு என்னும் இடத்தை முற்றுகையிட்டு அங்குள்ளவர்களை தோற்கடித்து வெற்றிவாகை சூடினார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். அந்தக் கோட்டையிலிருந்த பொருள்கள் அத்துணையையும் சிறிதும் மிச்ச மின்றி தோழர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள். எல்லோர்பாலும் அன்பு மிக்குடைதவராகிய பயகாம்பர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு விதந்தோதப்பட்டுள்ளார்கள்.

இஞ்சியினி ருந்தபொரு ளெட்டுணையு மின்றி
நெஞ்சின்மகிழ் வுற்றுமிடி யார்க்குதவி நேச

மிஞ்சுபய காம்பர்மற வேந்தர்படை சூழ
வஞ்சமற வேமதின மாநகரின் வந்தார்.
(சுகுருப் படலம் 16)

பயகாமபர் என்று வழங்கப்பட்ட நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள் நித்திரையிலிருந்து விழித்தார்கள் என்பது நயம்பட வருணிக்கப்பற்றுள்ளது. அவர்களுடைய கண்களிலே துயில் படர்ந்திருந்தது. விழிகளோ தாமரை மலரை ஒத்திருந்தன. அம்மட்டன்று. அந்தக் கண்கள் எல்லையற்ற அருளுக்கு ஓர் ஒப்பற்ற இருப்பிடமாகத் திகழ்ந்தன. அத்தகைய பிரகாசம் பொருந்தியவர்கள் பயகாம்பர் முகம்மது (ஸல்) அவர்கள். இக்கருத்துக்களையே உமறுப் புலவர் ஒரு செய்யுளின் இறுதி அடிகள் இரண்டிலும் இவ்வாறு கூறுகிறர்.

முடிவின்றிய வருட்கோர்மனை யெனுமுண்டக விழியிற்
படருந்துயி லொழிந்தெயோளிர் பயகாம்பர் விழித்தார்
(முறைசீக்குப்படலம் 38)

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடத்து வந்தமை 'பயகாம் ரிடத்தினி லணுகி' (உயை வந்த படலம் 25) என்றும் புனிதத் தன்மை வாய்ந்தவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்பது 'தூய ராம்பய காம்பர்' (அந்தகன் படலம் 12) என்றும் சத்தியமே உருவாகக் காட்சியளித்தவர்கள் எம்பெருமானர் (ஸல்) அவர்கள் என்பது 'உண்மை சேர்பயகாம்பர்' (உமுறுவுக்குப்போன படலம் 30) என்றும் ஒரு போதும் கோபம்கொள்ளாதவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்பது 'கதமி லாப்பய காம்பர்' (உமுறுவுக்குப் போன படலம் 38) என்றும் விவரிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பெருவழக்கிலே உள்ள மற்றெரு திசைச் சொல் 'யார்' என்பது. முஸ்லிம்கள் யார் என்னும் இச் சொல்லை ஒரு சிறப்பான கருத்தில் உபயோகிக்கின்றனர். இது பாரசீக மொழியில் உள்ள ஒரு சொல்லாகும். முஸ்லிம்களின் பேச்சு மொழிகளான உறுது மொழி முதலியவற்றில் இச் சொல் சருவசாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. முஸ்லிம்கள் இசசொல்லை சிறப்பாக நான்கு கலிபாக்களைக்

குறிக்கப் பயன்படுத்துவர். ஆபூ பக்கர் (றலி) அவர்களையும் உமறு அவர்களையும் (றலி) உதுமான் (றலி) அவர்களையும் அலி (றலி) அவர்களையும் குறிப்பிடவே இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் இஸ்லாத்தையும் இஸ்லாமியப் பேரரசையும் வழி நடத்திய குலபாஉர்ரஷுதீன் என்னும் முதல் நான்கு கலீபாக்களையும் குறிப்பதாக இந்த யார் என்னும் பாரசீகச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இவர்களின் பதவிக்காலம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்க்கதரிசனத்துக்கு இணங்க நாற்பது ஆண்டுகளே நீடித்திருந்தது. பொதுவாக இந்த யார் என்னும் பாரசீகச் சொல் சீறுப்புராணத்திலே பயன் படுத்தப்படும் பொழுது நான்கு கலீபாக்களான யார்களைக் குறிப்பிடுவதற்கு முன்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படுவதுண்டு, நபிகள் நாயகம் நான்கு கலீபாக் களும் என்னும் பொருளில்,

இறைவன் றூதரு மியார்க ளுல்வரும் (சீபுல் பகுறுப் படலம் 1) என்றும்

வள்ளனந் நபியு நாலி யார்களு மற்று ளோரும் (பதுறுப் படலம் 2) என்றும்

மறைநபி முகம்மது மற்ற யார்களும் (சவீக்குப்படலம் 48) என்றும்

உமறுப்புலவர் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். நன் மாராயத்தைப் பெற்றவர்கள் நான்கு கலீபாக்களும் என்ற கருத்தில், 'வரத்தி னியார்கள்' (முறைசீக்குப்படலம் 7) என்றும் சத்தியமான வற்றையே பேசுவதைத் தம் குறிக் கோளாகக் கொண்டவர்யள் அழகுமிக்கவர்கள் இந்தக் கலீபாக்கள் என்றும் கருத்துத் தொனிக்க

. . . . எழின்
மிக்க வாய்மை விளங்குமி யார்களும்
(பனீகுறைலா வதைப் படலம் 38) என்றும்

சீறுப்புராணத்தில் வருணிக்கப்பட்டுள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் சூழவர நான்கு கலீபாக்களும் ஏனைய அசுகாபிமார்களளாகிய தோழர்களும் இருந்தார்கள் என் பது

அன்னவரம் மொழியுரைக்க நபியிறசூல்
மனத்தறிவா லாய்ந்து பார்த்தே
யுன்னியரு ளுடனெழுந்தி யார்களசு
ஹாபிகளு மொருங்கு சூழ....

(பனிகுறைலா வதைப் படலம் 55) என்றும் உம்ருச் செய்வதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்க மா நகரத்துக்குச் செல்லக் கருதி ஓர் அசுஹாபிக் தோழரை அழைத்து வலிமைமிக்குடைய நான்கு கலீபாக் களையும் நெருங்கிய கோபத்தை உடைய போர்வீரர்களான அசுகாபிமார்களையும் உடனே அழைத்துவரும் படி கட்டளை இட்டமை

அருளு மேவல்செய் வோரசு ஹாபியை
வருதி சென்று வலிமிகு மியார்களைச்
செருகு வெஞ்சினச் சேனையை கூயிவண்
டருக வென்றுமு கம்மது சாற்றினர்.

(உமுறுவுக்குப்போன் படலம் 3) என்றும் குலாபாஉறுஷுதீன் என்னும் நான்கு கலீபாக்களும் அழகு மிக்கவர்கள் என்பது

ஏர்கு லாவிய யார்களும்

(உமுறுவுக்குப் போன படலம் 5) என்றும் வீரமானது விளங்கும் கூரிய வாளாயுதத்தையுடைய நான்கு கலீபாக்கள் என்பது

..................................வீர
மிலங்கிய வடிவாட் செங்கை யார்கள்..........

(உமுறுவுக்குப் போன படலம் 64) என்றும் வருணிக்கப்பட்டுள்ளது.

ஆர் என்பது தமிழ் இலக்கன மரபுக் கிணங்க மரியாதைப் பன்மை விகுதியாக உபயோகிக்கப்படுகிறது. அடியார் என்பதனை இதற்கு உதாரணமாக காட்டலாம். தகப்பனுர் என்பது மற்ருெரு உதாரணமாகும். அண்ணன் நபி (ஸல்) (ஸல்) அவர்களின் மருகரும் நான்காவது கலீபாவுமாகிய அலி இப்னு அபீதாலிப் (றலி) அவர்கள் பொதுவாக அலி யார் என அழைக்கப்படுகிருர். இங்கே அலி என்னும் சொல்

லுடன் மரியாதைப் பன்மை விகுதியாகிய ஆர் புணர்ந்துள்ளது என்று கூறுவதை விட கலிபாக்களைக் குறிப்பிடும் யார் என்னும் பாரசீகச் சொல் சேர்ந்தே அலியார் என வந்துள்ளது எனக் கூறுவது சாலப் பொருத்தமுடையதெனலாம். நான்கு கலீபாக்களையும் பொதுப்படையாகக் குறித்த யார் என்னும் பாரசீகச் சொல் அலி (றலி) அவர்களைச் சுட்டச் சிறப்பாகப்பயன்படுத்தப்பட்டிருக்கலாம். உமறுப்புலவரும் அலியார் என்பதை

ஆமென மகிழ்ச்சி யாகி யகுமது மலியார் தம்மை
தாமரு ளுடனே கூவி யெழுதெனச் சாற்று கின்றார்.

(உமுருவுக்குப் போன படலம் 78)

என்று அமைத்துப் பாடியுள்ளார்.

பாரசீக மொழியில் ஆப் என்றால் நீர் என்பது பொருள். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களிலே ஆப் என்னும் பாரசீகச் சொல் சிறப்பான ஒரு வகை நீரைக் குறிக்கவே பயன் படுத்தப்பட்டுள்ளது. மக்கமா நகரிலே கஃபாவுக்கு அணித்தாயுள்ள ஸம்ஸம் என்னும் புனிதகிணற்றின் நீரைக் குறிப்பிடவே ஆப் என்னும் பாரசீகச் சொல் பயன்படுத்தப்படுகிறது. அந்நீர் 'ஆபுஸம்ஸம் என்றே வழங்கப்படுகிறது. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருமணத்துக்குச் சற்று முன்னர் ஆபுஸம்ஸமீ என்னும் ஸம்ஸத்து 'நீரினால் நீராட்டப்பட்டார்கள் என்று வருணிக்கப்பட்டுள்ளது. சிற்ப வல்லுநரால் இயற்றப்பட்ட ஒரு பலகையிலே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அமர்த்தப் பட்டார்களாம். வேதத்தில் வல்லவர்கள் மங்கலவாக்கியங்கள் முழங்கினார்களாம். ஸம்ஸம் கிணற்று நீரைப்பொன்னினாலான குடத்தில் எடுத்தார்களாம். எடுத்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தலையில் வார்த்தார்களாம். நீராட்டினார்களாம். பொற்குடத்திலிருந்து தலையில் நீர் வார்க்கப்பட்டகாட்சி சந்திரன் தனது கிரணங்களைப் பொன்னி மா மலையின் மீது சொரிவதைப் போன்று இருந்ததாம். உமறுப்புலவரின் கற்பனை மிக்க அந்தச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது!

அற்புதமாய் விண்ணவரும் புகலரிய
ஆபுஸம்சத் தரிய நீரைப்
பொற்குடத்தி லெடுத்தமுதக் கதிர்க்கிரண
மலைமிசையே பொழிவ போலச்
சிற்பரியற் றியபலகை நடுவிருத்தி முகம்மதுதஞ்
சிரசின் மீதே
சொற்பழுத்த மறைமுதியோர் மங்கலவாக்
கியங்கறங்கச் சொரிந்தா ரன்றே.
(மணம்புரி படலம் 23)

புனித கிணறான ஸம்ஸத்திலிருந்து நீர் தெளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட வந்த உமறுப்புலவர்

அருங்கதிர்க் கலசத் தாபுஸம் ஸத்தி னரியநீர்
கரங்கொடு தெளித்தே.
(தசைக் கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம் 7)

என்று வருணித்துள்ளார். அப்பாசு (றலி) அவர்கள் மூதாதையர்களே ஸம்ஸத்தின் நீரை விநியோகிக்கும் பொறுப்பைப் பெற்றவர்களாக இருந்தார்கள். பதுறுப்போர் முடிவுற்றதும் அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அப்பாசு (றலி) அவர்களையே அப்பொறுப்பைத் தொடர்ந்து ஏற்றுவரும்படியாக நியமித்து அனுப்பினர்கள். இதனை ஏற்ற அப்பாசு (றலி) அவர்களும் எல்லோரிடமும் கூறிவிட்டுக் காவலுடைய மக்க மா நகரத்துக்குச் சென்றார்கள் என்பதனையே உமறுப் புலவர் இவ்வாறு வருணிக்கிறார்.

வரத்தினிற் சிறந்த சுகுபத்துல் லாவி
னுபுசம் சத்தினீர் வழங்குந்
துரத்தி னுக்குரிய ராதலாற் பிரியாத்
தொன்முறை வருதலா னபிக்கும்
புரத்தினுற் றவர்க்குந் தனித்தனி யுரைத்துப்
புதியவன் றனைப்புகழ்ந் தேத்திக்
கரத்தடக் களிறப் பாசெனு முரவோர்
கடிகொடம் பதியிடை புக்கார்.
(பதுறுப் படலம் 255)

நாள்தோறும் முஸ்லிம்களாகிய எமது காதுகளிலே ஒலித்துக்கொண்டிருப்பது அதான் என்னும் ஓசை. முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைக்கவே அதான் தினசரி ஒலிக்கப்படுகிறது. அதனைப் பண்ணோடு ஒலிப்பவரை முஅத்தின் என்பர். ஆனால் முஸ்லிம்களின் சிறப்பாக தமிழ் பேசும் முஸ்லிம்களின் பெருவழக்கிலே அதான் என்னும் அறபுச் சொல் இடம்பெறுவிதில்லை. மாறாக அதற்குச் சமமான பாரசீகச் சொல்லான பாங்கு என்பதனையே பெரிதும் உபயோகிப்பர். அதான் ஒலி எழுப்புபவரை முஅத்தின் என்று கூறும் அதே வேளையில் அதான் என்பதனை அறபில் குறிப்பிடாது பாங்கு எனப் பாரசீகத்தில் வழங்குகிறோம். இஸ்லாமிய அடிப்படையில் இலக்கியம் யாத்த கவிஞர்களும் இதற்கு விதி விலக்காக அமையவில்லை. அவர்களும் தத்தம் இலக்கியப் படைப்புகளிலே பாங்கு என்னும் பாரசீகச் சொல்லால் அதானை அழைப்பதையே பெரிதும் விரும்பினர்கள் போலும். ஒரு நாளுக்கு ஐந்து முறை முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைக்க பாங்கு ஒலி எழுப்பும் முறை புகுத்தப்பட்டது என்பதை உமறுப்புலவர் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

இற்றைநாட் டொடுத்தைந் தொகுத்தினும் வாங்கென்
றியற்றிய திருமொழி சிதையா
துற்றுவ ரெவருங் கொணர்மின் னெனவு
முடையவன் றிருநபி யுரைத்தார்
(உகுபான் படலம் 10)

பாங்கு என்னும் பாரசீகச் சொல் முஸ்லிம்கள் பெருவழக்கிலே மாற்றமடைந்து வாங்கு என்று பயன்படுவதைக் காணலாம். பாத்திமா (றலி) அவர்களின் புதல்வன் அஸன் (றலி) அவர்கள் பிறந்ததைத் தொடர்ந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குழந்தையைக் கையில் எடுத்து வலது பக்கக் காதில் பாங்கினையும் இடது பக்கக் காதில் அதானின் சுருக்கமான இக்காமத்தினையும் ஓதினர்கள் என்பதனை உமறுப்புலவர் :

தீங்க கற்றிய மகள்மகன் வலத்திருச் செவியின்
வாங்கு ரைத்திடக் காதினிக் காமத்தும் வழங்கி
(அசனுர் பிறந்த படலம் 14)

என அமைத்துப் பாடியுள்ளார். உகுதுபோர் முடிவடைந்த பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு தீனவரை அழைத்து பாங்கு கூறும்படி சொன்னுர்கள். அப்படியே வாங்கு ஒலிக்கப்பட்டது. இச்செய்தியே இவ்வாறு பாடப் பட்டுள்ளது.

ஈறி லாதவன் றிருநபி யின்ன மிருந்த
வாறு கண்டொரு தீனவர் தமைவர வழைத்துத்
தேறி யிக்கள நடுநின்று வாங்கினைத் திருந்தக்
கூறு மென்றன ரென்றலும் வாங்கினைக் குறித்தார்
(உகுதுப்படலம் 266).

உற்ற வாங்கிதங் கேட்டலு மொருதலை யெடுத்துச்
சுற்று நோக்கின கண்ட மு சாவெனத் துணிந்து
கொற்ற மேற்கொண்ட தீனரு முகம்மதுங் குறித்து
வெற்றி யாம்படி யெடுத்திடக் கினர் மண்ணில்
விரைவின். (உகுதுப்படலம் 267)

ஒரு நாள் அசறுத் தொழுகைக்குரிய நேரம் வந்தது. அசறு தொழுவதற்காக அங்குள்ளவர்களை இரண்டு பிரிவாகப்பிரித் தார்கள். எல்லோருக்கும் கேட்கக் கூடியதாக பாங்கு சொல் லும்படி கூறினுர்கள். இதனையே உமறுப்புலவர் இவ்வாறு ஒரு செய்யுளில் அமைத்துப்பாடியுள்ளார். இங்கே பாங்கு என்றே குறிப்பிடுகிறுர். யாப்பமைதி கருதியே இங்கு பாங்கு என்று அச்சொல் உபயோகிக்கப்பட்டிருக்கலாம். இதுதான் அந்தச் செய்யுள்!

ஆரணப் பொருளை யோர்ந்த அளவினில் அசறு
தோன்றப்
பூரணத் தொழுகை கொண்ட புணர்ப்போடு
பாங்கெல் லோர்க்கு
நேருற விளங்க வள்ள லின்றதீ னவர்க் டம்மைத்
தாரணி பிடத்தி ரண்டு பாகமாய்த்
தணிபி ரித்தார்
(தாத்துற்றஹ்ஹாக்குப் படலம் 22)

சீறாப்புராணம் போன்ற இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க்காப்பியங்களில் இஸ்லாம் மணங் கமழுவதற்குப்பாட்டுடைத் தலைவர்கள் முஸ்லிம் தலைவர்களாக இருப்பதுவோ இஸ்லாத்துடன் நெருங்கிய தொடர்புடைய விஷயங்கள் வருணிக்கப்படுவதுவோமாத்திரம் காரணமன்று. இஸ்லாமிய மொழியான அறபு மொழிச் சொற்களும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே அறபு மொழியுடன் தொடர்பு பூண்டு வளர்ந்தோங்கிய பாரசீக மொழிச்சொற்களும் சீறாப்புராணம் போன்ற இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய கப்பியங்களுக்குப் புது மெருகூட்டுவதோடு அவை இஸ்லாமிய நறுமணங் கமழுவனவாகத் திகழச் செய்ய ஏதுவாக அமைந்துள்ளன எனக் கூறின் அது மிகையாகாது. அறபு மொழியிலிருந்து பெறப்பட்ட திசைச் சொற்கள் போதிய அளவு இருந்த போதிலும் அறபு மொழிக்கும் பாரசீக மொழிக்கும் பண்டு தொட்டு இருந்து வந்த தொடர்பு காரணமாகவே அதே கருத்துடைய அறபுச் சொற்களை உபயோகிக்கும் அதே சமயத்தில் பாரசிக மொழியிலிருந்தும் பெறப்பட்ட திசைச் சொற்களை அவற்றிற்குப் பிரதியீடாக உபயோகிக்க உமறுப்புலவர் போன்ற காப்பிய ஆசிரியர்கள் அறபுமொழியையும் பாரசீக மொழியையும் ஓரளவு அறிந்திருந்தனர் என்னும் முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. இஸ்லாம் எங்கெங்கு பரவியதோ அங்கங்கு எல்லாம் பேசப் படும் மொழிகளிலே அறபு பாரசீக மொழிச் சொற்கள் தினசச் சொற்காளாக இடம்பெற்றிருப்பது அந்தந்த மொழிகளுக்கெள்ளாம் பொதுப்படையாக அமைந்துள்ள சிறப்பியல்பு என்று தயங்காமல் கூறலாம்.

அறபு நாட்டிலும் அயல் நாடுகளிலும் உள்ள இடப் பெயர்களும் சீறாப்புராணப் பாட்டுடைத் தலைவரின் பெயரும் அவர்களுடைய உற்றார் உறவினர் தோழர் பகைவர் முதலியோரின் பெயர்களும் அங்கு வாழ்ந்த கோத்திரங்களினதும் இனத்தவர்களினதும் பெயர்களும் கணிசமான அளவு சீறுப்புவாணத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றையெல்லாம் விரிவஞ்சி விடுத்தனம். அறபு மொழியிலே

வழங்கப்படும் இஸ்லாமிய மாதங்கள் பல சீறாப்புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை மாத்திரம் இங்கு வகைப்படுத்தி உள்ளேன்.

முஹறம் — இது இஸ்லாமிய ஆண்டின் முதலாவது மாதம். புனிதமானது என்பதையும் இச் சொல் குறிக்கின்றது. இச்சொல்லின் நேரடிக் கருத்துத் தடுக்கப்பட்டவை என்பதாகும். மாதம் என்ற பொருளிலே இச்சொல் இடம் பெற்றுள்ளது. 'வருடமே முனிற்றின முஹார்ர மாத்தையில்' (ஒப்பெழுதித் தீர்த்த படலம் 1), 'ஆசுரு நோன்பு' (உகுபான் படலம் 9).

றபீஉல் அவ்வல் — இஸ்லாமிய ஆண்டிலே மூன்றாவது மாதம். இளவெனிற் பருவத்தின் முதலாம் மாதம் இந்த அறபுச் சொற்றொடரின் பொருளாகும் 'அம்மதி' மாசத் தொகையினில் றபீவுலவ்வலிற் பனிரண்டாந் தேதி' (நபியவதாரப் படலம் 89), 'வையக மதிக்கு முகம்மதின் வயது நாற்பதில் றபீயுலவ் வலினில்' (நபிப்பட்டம் பெற்ற படலம் 11) 'வரிசைநேர் றபீவு லவ்வல் மாதமீ ரைந்து நாளில்' (நபிப்பட்டம்பெற்ற படலம் 16), 'வருமுறை பதினென் காண்டினின் மாசத் தொகையினில் றபீவுலவ் வலினில்' (யாத்திரைப் படலம் 65), 'றபீயு லவ்வலின்' (மதீனம் புக்க படலம் 26)

றஜப் — இது இஸ்லாமிய ஆண்டின் ஏழாவது மாதம். கண்ணியம் மிக்க மாதம் என்பது இதன் பொருள். இஸ்லாத்துக்கு முன்னர் கண்ணியம் மிக்கதாகக் கருதப்பட்டது என்று கூறுவர். ''திங்களா மிறஜபு முதற்றேதிவெள் ளியிரா' (நபியவதாரப்படலம் 16), 'வருட மைந்தென வரவரு மிறஜபு மாதம்' (ஈமான் கொண்டவர்கள் ஹபஷா ராச்சியத்துக்குப் போந்த படலம் 7), 'இவ் விறஜபு மாத்தையில்' (உகுபான் படலம் 9).

ஷஉபான் — இஸ்லாமிய ஆண்டின் எட்டாம் மாதம். விட்டுப்பிரியும் மாதம் என்பது இச் சொல்லின் பொருள். அறபிகள் நீர் தேடிப் பிரியும் மாதம் என்று கூறுவர். 'திகழ்சகு பானென விளங்குந் திங்களில்' (சுகுபத்துல்லாவை நோக்கித் தொழுத படலம் 3), 'பின்னு மவ்வருட்டஞ்சகு பானெனப் பேசு, மன்ன திங்களில்....' (உசைனுர் பிறந்த படலம் 3).

றமளான் — இஸ்லாமிய ஆண்டின் ஒன்பதாவது மாதம். முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் மாதம். இச் சொல்லின் பொருள் சுட்டெரிப்பது என்பதாகும். 'பெருகதி றமளா னென்னப் பெருகிய நோன்பு தன்னை, (பதுறுப் படலம் 256), இறம ளான்பதி னைந்தினில் வெள்ளி யிரவில்' (அசனுர் பிறந்த படலம் 11).

ஷவ்வால் — இஸ்லாமிய ஆண்டின் பத்தாவது மாதம். இதன் பொருள் வாலை உயர்த்துதல் என்பர். பேத மற்றஷவ் வாலென வுரைத்திடும் பெரிய, மாதம்.... (உகுதுப்படலம் 77).

துல்கஃதா — இஸ்லாமிய ஆண்டின் பதினொருவது மாதம். இதன் பொருள் போர் நிறுத்தம் என்பதாகும். பண்டைய அறபு மக்கள் போர் தவிர்த்த மாதம். ஆனகையால் அப்பெயர் பெற்றதென்பர். சாற்று துல்சயிதாவெனு, மேற்ற மாதமா மேல்வையில்' (பதுறு சுகுருப்படலம் 1.)

Printed at Albion Press (Colombo) Ltd.
157, Jayantha Weerasekara Mawatha Colombo-10 (Sri Lanka)